வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 11

பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர்.

[எம்.ஜி.ஆர். தத்துவப் பாடல்கள் - II]

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்

3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 11

பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர்

[எம்.ஜி.ஆர். தத்துவப் பாடல்கள் - II]

***முனைவர் செ. இராஜேஸ்வரி,* M.A., M.Phil., Ph.D.,**

சந்திரோதயம் பதிப்பகம்

3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,

தினமணி நகர், மதுரை – 625 018, Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 11
நூலின் பெயர்	:	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆர். தத்துவப் பாடல்கள்– II)
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
அட்டை வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை, தினமணி நகர், மதுரை – 625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	முதல் (மே 2019)
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	140
விலை	:	Rs.150/-

- - - - -

Book	:	*Vetrithirumagan MGR – 11*
Title :		*Paattudai Thalaivan MGR [MGR's Solo Songs – II]*
Author	:	*Dr. C. Rajeswari, M.A., M.Phil., Ph.D.,*
Cover Design	:	*C. Meenatchi*
Publisher	:	*Chandrothayam Pathippagam 3/462 First floor, Kambar 2nd Street Kambar Salai, Dinamani Nagar Madurai – 625 018 Phone : 7010997639*
Month of Publish	:	*May 2019*
Pages	:	*140*
Price	:	*Rs.150/-*

பாரத ரத்னா புரட்சி தலைவர் எம்.ஜி.ஆரின் ஆருயிர் தம்பியும் அண்ணா திமுகவின் முதல் தியாகியும், பெரு நகர் சென்னையின் முதல் அண்ணா திமுக மேயரும், தனது மனித நேய அறக்கட்டளை வாயிலாக சுமார் 3000 நேர்மையான உயர் அரசு அதிகாரிகளை உருவாக்கியவருமான மனித நேயச் செம்மல் ***சைதை துரைசாமி*** *அவர்களை வாழ்த்தி வணங்குகிறோம்.*



எம்.ஜி.ஆர்

(கவிஞர் வாலி)

நீ
இந்தியாவில் பிறந்து
இலங்கைக்கு சென்று-
இராமச்சந்திரனல்ல;
இலங்கையில் பிறந்து
இந்தியா வந்த
இராமச்சந்திரன்.!

அந்த இராமச்சந்திரன்
சூரிய குலத்தில் வந்தவன்.
நீயும் –
உதய சூரியனின்
வழித்தோன்றல்தான்.

அவனும்
ஜானகி மணாளன்.
நீயும்
ஜானகி மணாளன்

அவனும்
பதவி ஆசை
பிடித்தவர்களால்
வெளியேற்றப்பட்டான்.
நீயும் அப்படியே.

அவனும்
நாடோடியாகத் திரிந்து
மன்னனானான்.
நீயும் –
நாடோடி மன்னன்தான்.

அவனிடத்தில்
இருந்தது போலவே
உன்னிடத்திலும்
''வில் பவர்'' இருந்தது.

அந்த இராமச்சந்திரன்
தெய்வமாக இருந்து
மனிதனாக மாறியவன்.
நீ –
மனிதனாக இருந்து
தெய்வமாக மாறியவன்.
இதனால்தான் உன்னை
இதய தெய்வம்
என்கிறோம்.

ஆனால் ஒன்று
அவன் வாலியை
அம்பு கொண்டு
வீழ்த்தியவன்.
நீயோ
வாலியை
அன்பு கொண்டு
வாழ்த்தியவன்.

அன்புக் காணிக்கை



எம்.எஸ்.விஸ்வநாதன்_ராமமூர்த்தி



எஸ்.எம்.சுப்பையா நாயுடு

எம்.ஜி.ஆர் படங்களின்

வெற்றிக்கு

ஒரு காரணமாய் இருந்த

இசையமைப்பாளர்களுக்கு

இந்நூல் எமது அன்பு

காணிக்கை.



கே.வி. மகாதேவன்



ஜி.இராமனாதன்

நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்**சி போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். 1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Eco Vision and Mission, Neuro Ophthalmology Articles போன்ற பல துறை சார்ந்த பனுவல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணயாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல்

ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றிய போது அங்கு வந்த வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy English* என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கும் வெளி நாட்டவருக்கும் ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் *[Centre for Language Studies]* என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர் பற்றிய தகவல்களை நிறைய தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிய அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் ரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை ஒருவரும் ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர் பற்றி ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100 என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகளை வெளியிட்டு வருகிறார்.

எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஒரு நூல் எழுதும் முயற்சியில் தகவல்களை திரட்டி வருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். தற்போது ஒன்பது நூல்கள் வெளியிட்டுள்ளார். தற்போது எட்டு நூல்கள் வெளியிட்டுள்ளார். அவை:

1. வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும், 2.எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம், 3. சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்), 4. வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட, 5. மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர், 6. எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி, 7. எம்.ஜி.ஆர் ஒரு கலியுகப்போராளி, 8. ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்., 9. வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I, 10. நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -1]

***பதினோராவதாக பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -1]**என்ற இந்நூல் வெளிவந்துள்ளது.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் ‘பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள் மற்றும் உன்னொடு உரையாடுதல்’ என்ற கவிதை நூல்களை இவர் ஆங்கிலத்தில் “Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You” என்று மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவர் எழுதிய சிறுகதைகள் ‘அமராவதியின் காதல்’ என்ற பெயரில் அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய “என்னோட ராசி நல்ல ராசி” என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது.

உள்ளடக்கம்



பூச்சொரிந்து தொழத்தக்க புனிதர்

கவிஞர் முத்துலிங்கம்
எம். எல். சி.

பேச்சாற்றல் மிக்க பல தலைவர் உண்டு
பேசாத தலைவர்களும் பலபேர் உண்டு
நீச்சலிலே தேர்ச்சிபெற்ற மீனைப்போலே
நிர்வாகத் திறமை பெற்ற தலைவர் உண்டு
மாச்சரியம் மிகுந்திருக்கும் இந்த மண்ணில்
மனிதாபிமானமுள்ள தலைவரென்றால்
பூச்சொரிந்து தொழத்தக்க எம்.ஜி.ஆர் போல்
புனிதமுள்ள புகழ்த்தலைவர் எவரும் இல்லை.

வில்லாலே புகழ்பெற்றான் ஓரி மன்னன்
வீரத்தால் நெடுஞ்செழியன் புகழைப் பெற்றான்
சொல்லாலே புகழ்பெற்றார் அறிஞர் அண்ணா!
துணிவாலே புகழ் பெற்றோர் நாட்டில் உண்டு!
இல்லாமல் கேட்போர்க்குக் கொடை கொடுக்கும்
இயல்பாலும் பண்பாலும் ஒழுக்கத்தாலும்
நல்லோர்க்குள் நல்லவராய் இருப்பதாலும்
நம் புரட்சித்தலைவரவர் புகழைப் பெற்றார்.

நீருக்கும் நெருப்புக்கும் அழிவே இல்லை
நிறைந்திருக்கும் காற்றுக்கும் அழிவே இல்லை
ஊருக்கு மேலிருக்கும் வானத்திற்கும்
உண்மையிலே அழிவில்லை; அதனைப்போலே
சீருக்குள் சீர் பெற்ற எம்.ஜி.ஆரின்
சிறப்புக்கும் கீர்த்திக்கும் அழிவே இல்லை
பாருக்குள் முப்பிறவி எடுத்த செம்மல்
பல்லாண்டு பல்லாண்டு வாழி! வாழி!!

(முத்துலிங்கம், எம். எல். சி.)

1. எம்.ஜி.ஆரின் தலைமைத்துவப் பண்புகள்

எம்.ஜி.ஆருக்கு சிறு வயது முதற்கொண்டு தலைமைத்துவப் பண்புகள் இருந்ததனை அவரது வாழ்க்கை வரலாறு சுட்டுகிறது. அவர் மூன்றாம் வகுப்புப் படிக்கும்போது மாணவர்கள் சேர்ந்து பணம் போட்டு குடி தண்ணீர் பானை வாங்கி வைத்தனர். அப்போது அந்தப் பணத்தை முறையாக செலவழிக்கவில்லை என்று தெரிந்ததும் எம்.ஜி.ஆர். பணம் வசூலித்த சக மாணவனிடம் கணக்குக் கேட்டார் என்று அவரது அண்ணன் எம் ஜி சக்கரபாணி 1972இல் ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார். ஏழு வயதில் அவருக்கு முறைகேடுகளைத் தட்டி கேட்கும் துணிச்சல் இருந்துள்ளது. இதுவே பின்னர் திமுகவை எதிர்த்து குரல் எழுப்பும் துணிச்சலைக் கொடுத்தது. விளையும் பயிர் முளையிலே என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க அவர் தனது இளமைக்காலம் தொட்டு நியாயத்துக்கு குரல் கொடுக்கும் நல்லவராக இருந்து வந்துள்ளார்.

தலைவன் என்பவன் யார் ?

திரைப்படத்தில் எம்.ஜி.ஆர். யார் தலைவன் ஆகத் தகுதி உடையவர் என்பதை ஒரு பாட்டின் மூலம் சொல்லியிருப்பார்.

கடமை இருந்தால் வீரன் ஆகலாம்

கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம்

பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம் – இந்த

மூன்றும் இருந்தால் தலைவன் ஆகலாம்

என்று பாடல் அவர் எழுதியதோ பாடியதோ அல்ல என்றாலும் அவரது வாழ்க்கையை அப்பட்டமாக விவரித்த கருத்துள்ள பாடல் ஆகும்.

எம்.ஜி.ஆர். படங்களிலும் வாழ்க்கையிலும் அண்ணாவை தம் தலைவனாகக் கொண்டு அவரை பாராட்டியும் வாழ்த்தியும் பாடியிருந்தார். வசனங்களும் பேசியிருந்தார். எங்கும் தனது தலைமைப் பண்பு குறித்து அவர் விவரிக்கவில்லை. ஆனால் அண்ணா திமுக ஆரம்பித்த பிறகு நாகேஷ், தேங்காய் சீனிவாசன் போன்ற சில துணை நடிகர்களின் வசனங்களில் எம்.ஜி.ஆரின் தலைமைத்துவம் பற்றிய குறிப்புகள் தென்பட்டன. அவரை சிறந்த தலைவர் என்று தமிழகம் மட்டுமல்ல தமிழ் பேசும் நல்லுலகமே ஏற்றுக்கொண்டுள்ளது. எம்.ஜி.ஆரது தலைமைத்துவ பண்புகள் குறித்து இனி விரிவாகக் காண்போம்.

தலைவனுக்குரிய முக்கியப் பண்புகள்

ஒரு தலைவனுக்கு தேவையான முக்கியப் பண்புகள் தொலைநோக்குப் பார்வையும் செயல் திறனும் ஆகும். இன்று இதைச் செய்தால் நாளை என்ன நடக்கும் என்ற தொலைநோக்குப் பார்வை ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்பாகும். அவ்வாறு இன்றைக்கு நாம் செய்ய வேண்டிய செயலைத் திறமையோடும் நல்ல பயன் தரும் வகையிலும் [efficient and effective] செய்ய வேண்டியது தலைவனின் இன்றியமையாப் பண்பாகும்.

ஒரு தலைவன் வினைத்திட்பம் தீர்க்கதரிசனத்தோடு இருக்கும்போது என்ன விளைவுகள் ஏற்படும் என்றால் **அவனுடைய பாதை சொர்க்கத்துக்கு இட்டுச் செல்லாது. ஆனால் தன் மக்கள் வாழும் இடத்தையே சொர்க்கமாக மாற்றிவிடும்.** இதைத்தான் எம்.ஜி.ஆர் தன்னுடைய படங்களின் மூலமாக தன்னுடைய பண்புகளின் மூலமாக செய்து காட்டினார். **எம்.ஜி.ஆரின் படங்கள் மக்களுக்கு நல்ல நம்பிக்கையை கொடுத்து அவர்கள் வாழும் இடத்தை சொர்க்கமாக மாற்றின.** இதை விடுத்து 'நீங்கள் உங்கள் பாவங்களுக்காக மன்னிப்பு கேளுங்கள், பிராயச்சித்தம்

தேடுங்கள், பரிகாரம் செய்யுங்கள், நீங்கள் சொர்க்கத்திற்குச் செல்ல முடியும் என்று இல்லாதவற்றை எல்லாம் எம்.ஜி.ஆர். புனைந்துரைக்கவில்லை.

ஒரு நல்ல தலைவன் என்பவன் இரண்டு கட்டங்களில் செயல்படுகின்றான்.

1. *கொள்கை ரீதியான செயல்பாடு.*

2. *திட்டங்கள் வழியிலான செயல்பாடுகள். இன்னொரு வகையில் கூறினால்* ***ஒன்று கொள்கை உருவாக்கம். மற்றொன்று அக்கொள்கையை நடைமுறை படுத்துதல்.*** *இந்த இரண்டிலும் எம்.ஜி.ஆர் முழுமையான வெற்றியைப் பெற்றார். எம்.ஜி.ஆர். அண்ணாவை பின்பற்றினார். அண்ணாயிசம் என்ற கொள்கையை வகுத்தார். வாழ்க்கை குறித்த அவருடைய எண்ணங்கள் தர்மம், நீதி, சமாதானம் சார்ந்ததாக இருந்தன. இவற்றைத் தன்னுடைய படங்களில் தன்னுடைய கதாபாத்திர உருவாக்கம், வசனம், பாடல்கள் மூலமாக மக்கள் அறியச் செய்தார். மக்கள் அவரது பேச்சையும் பாடல் கருத்துக்களையும் அவருடைய சொந்த கருத்துக்களாகக் கொண்டு அவற்றை நம்பி வாக்களித்தனர்.*

ஒரு தலைவன் தன்னுடைய மக்களை ஆட்டுமந்தை போல வைத்து இருக்கக் கூடாது. ***நல்ல கொள்கைகளை உருவாக்கி அதன் வழியே செயல்பட்டு தனது மக்களை ஆரோக்கியம் அறிவு, துணிச்சல், சுய சிந்தனை, தன்மானம் உள்ளவர்களாக உருவாக்க வேண்டும். இவற்றை எம்.ஜி.ஆர். திறம்படச் செய்து பகுத்தறிவுப் பாதையில் புதிய தலைவனாக உருவாகினார்.*** *மக்களைச் சுய சார்புடையவராக உருவாக்கியதில் எம்.ஜி.ஆர். முழு வெற்றி பெற்றார். அது போல கிராமங்களும் ஊராட்சிகளும் சுய சார்புடையனவாக இருக்க வேண்டும் என்று தனது ஆட்சிக் காலத்தில் பல திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டார். எம்.ஜி.ஆர். பேசிய வாசனைகள் கொள்கை ஆயிற்று அவர் பேசிய வசனங்களும் பாடிய பாட்டுகளும் செயலாயிற்று. மக்கள் சேவையில்*

சினிமாவிலும் அரசியலிலும் அவர் அவராகவே இருந்தார். மாறி மாறி செயல்படவில்லை.

சொல் செயலாயிற்று

எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆனதும் 'சொல் செயலாயிற்று'. The word became flesh என்று பைபிளில் ஒரு வாக்கு உண்டு. எம்.ஜி.ஆர். தான் சொல்லியதை அவர் வாழும் வரை இறுதி மூச்சு உள்ள வரை செயலாக்கி காட்டினார். உயிருள்ளவரின் பெயரை சூட்டக் கூடாது என்ற ஒரு கொள்கையை வரையறுத்தார். ஆனால் அவர் பிழைத்ததே ஒரு மருத்துவ அதிசயம் என்று மருத்துவர்கள் அவரிடம் சொல்லி அவர் பெயரை மருத்துவப் பல்கலைக்கழகத்துக்குச் சூட்டுவது பொருத்தமானது என்று அவரது அனுமதி பெற்றனர். குடியரசுத் தலைவரும் அவ்விழாவில் கலந்துகொள்ள ஒப்புதல் அளித்தார். ஆனால் எம்.ஜி.ஆர். முந்தைய நாளிரவில் உயிர் நீத்தார். அவரது கொள்கைப்படி அவர் பெயர் அவர் இறந்த பின்பே மருத்துவப் பல்கலைக்கழகத்துக்குச் சூட்டப்பட்டது. இங்கும் சொல் செயலாயிற்று. அவர் தான் மக்களுக்கு வைத்த வாக்குறுதிகளை காப்பாற்றினார். சொன்னதையும் செய்தார். சொல்லாத பல நன்மைகளையும் செய்து மகிழ்ந்தார். மக்களுக்குத் தேவையான பல நல்ல திட்டங்களைத் தீட்டி தன்னுடைய பொற்கால ஆட்சியை மக்களுக்கு தேவையான அனைத்தையும் அவர் செய்து கொடுத்தார்.

அடிப்படைத் தேவை நிறைவேறியது

மனிதரின் அடிப்படை தேவைகளில் முதன்மையான உணவு எல்லோருக்கும் வயிறாரக் கிடைக்க வேண்டும் என்பதில் முதல் கவனம் செலுத்தினார். தனது ஆறேழு வயதில் மூன்று நாட்கள் பட்டினி கிடந்த அனுபவம்,

"வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு

வாழும் மனிதருக்கெல்லாம்"

என்ற பாரதியின் வாக்கை நினைவூட்டியது. அவர் வாழ்க்கையின் நோக்கம் என்பது எல்லா குழந்தைக்கும் உணவு கொடுக்க வேண்டும். எந்தக் குழந்தையும் பசியால் தவறான பாதைக்குப் போய்விடக் கூடாது என்பதில் கருத்தும் கவனமுமாய் இருந்தார்.

தமிழகத்தில் காமராஜர் காலந்தொட்டு அண்ணா காலத்திலும் கலைஞரது ஆட்சியிலும் பசி ஒரு தீராப் பிணியாகவே இருந்தது. ஆட்சி மாற்றத்துக்கு காமராஜர் காலத்தில் மக்கள் அரசி கிடைக்காமல் அவதிப்பட்டதும் அண்ணா ரூபாய்க்கு படியரிசி திட்டம் அறிவித்ததும் ஒரு முக்கியக் காரணம் ஆயிற்று. கலைஞர் ஆட்சியிலும் மழை பெய்யாமல் பஞ்சம் வந்ததால் அரிசி விலை உயர்ந்துகொண்டே போனது. ஆனால் எம்.ஜி.ஆர். ஆட்சியின் போது அரிசி விலையைக் கட்டுக்குள் வைத்து ஏழை எளிய மக்களுக்குத் தினமும் அரிசிச் சோறு கிடைக்கச் செய்தார். அரசி உற்பத்தியைப் பெருக்க ஆவண செய்தார். பல விவசாயத் திட்டங்களை அறிமுகம் செய்தார். சத்துணவு திட்டம் மூலமாக அனைத்து மலைவாழ் குழந்தைகளுக்கும் அரிசிச் சோறு பரிமாறினார். அரிசிப் பஞ்சத்தால் ஆரோக்கியப் பஞ்சமும் ஏற்பட்டது நோய் தாக்குதல் எளிதாயிற்று.

தனி நபர் ஆரோக்கியம்

ஆரோக்கியத்தைத் தனது உயிராக மதிக்கும் எம்.ஜி.ஆருக்கு தன்னைப் போன்ற ஓர் ஆரோக்கியமான இளைய சமுதாயத்தை உருவாக்குவது ஒரு மிகப்பெரிய சவாலாக இருந்தது. இரண்டு வயது முதல் 18 வயது வரையிலான குழந்தைகளுக்கு எம்.ஜி.ஆர். தன்னுடைய ஆட்சியில் சத்துணவு வழங்கி இளைய தலைமுறையை ஆரோக்கியமான தலைமுறையாக உருவாக்கினார். அவர் காலத்தில் வருடத்தில் 365 நாட்களும் சுமார் 65 இலட்சம் பேர் சத்துணவு சாப்பிட்டு பலன் பெற்றனர். எண்பத்தெட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட சத்துணவு மையங்கள் செயல்பட்டன. இரண்டு இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெற்றனர். இந்தியத் தேசிய அளவில் தனிநபர் ஆரோக்கியம் என்பதில் தமிழகத்தில் முதலிடம் பிடித்தது. இந்த உணவு

அளிப்பு திட்டத்தைச் செயல்படுத்துவதில் பெண்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைத்தது. பெண்களும் தனிநபர் சுதந்திரத்துடன், பொருளாதார சுதந்திரத்துடன்,


நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும்

நிலத்தில் எவர்க்கும் அஞ்சாத நெறிகளும்

கொண்டு வாழத் தொடங்கினர். பொருளாதாரத்திலும் அரசியலிலும் சுய முடிவுகளை எடுக்கும் திறமையை, துணிச்சலை எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில் தமிழகத்துப் பெண்கள் பெற்றிருந்தனர்.

அன்பு, கருணை, இரக்கம்

ஒரு சிறந்த தலைவன் மக்களிடம் எப்போதும் அன்பும், கருணையும், பாசமும் உள்ளவராக இருக்க வேண்டும். இந்த அன்பு என்னும் வேரிலிருந்து தான் பயனளிக்கும் திட்டங்களான கனிகள் உருவாகும். எம்.ஜி.ஆர் தான்



எல்லையில் போர் நடத்தியுள்ள சீனர்களை எதிர்த்துப் போரிடும் ராணுவ வீரர்கள் நலனுக்காக புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். 75 ஆயிரம் ரூபாய் அளிக்க முன் வந்துள்ளார்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பும் பின்பும் கடைசி நாட்களிலும் கூட பொது மக்களை சந்திக்க முன்னுரிமை கொடுத்தாரே அல்லாது பணக்காரர்களுக்கு அவர் முன்னுரிமை கொடுத்ததில்லை. பணக்காரர்கள் அவரை சந்திக்கக் காத்துக் கிடந்தனர். ஆனால் வெளியே தன்னைப் பார்க்க வந்திருக்கும் ஏழை எளியோரை எம்.ஜி.ஆர் முதலில் வந்து பார்த்து அந்த இடத்திலேயே அவர்களுடைய பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைத்தார்.

ஒருமுறை ஒரு இளம் விதவை தன் கணவன் இறந்த பிறகு கிடைத்த அவருடைய வேலையை வைத்துக்கொண்டு இன்னொரு நபரைத் திருமணம் செய்து கொண்டார். இதனால் அந்த வேலையிலிருந்து நீக்க வேண்டும் என்று பலரும் அலுவலகத்தில் முயற்சி செய்தனர். மறுமணம் செய்துகொண்ட அந்த இளம் பெண் தனது கணவருடன் எம்.ஜி.ஆரை சந்திக்க வந்து தன்னுடைய மனுவை அளித்தார். எம்.ஜி.ஆர் அதைப் படித்துப் பார்த்துவிட்டு 'விதவை மறுமணம் என்பது நம் அரசின் முக்கியக் கொள்கையாகும். எனவே மறுமணம் செய்துகொண்ட இந்த இளம்பெண்ணைப் பாராட்டுகிறேன்' வாழ்த்துகிறேன். இப்பெண்ணுக்கு இவ்வேலையில் 2 increment அளிக்கும்படி பரிந்துரைக்கிறேன்' என்று கோப்பில் எழுதிக் கையெழுத்திட்டார். வேலையைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று வந்த பெண்ணுக்கு இரட்டிப்பு increment கிடைத்து அடுத்த பதவி உயர்வுக்கும் எம்.ஜி.ஆர் வழிவகுத்துக் கொடுத்தார்.

எம்.ஜி.ஆர். கோப்பில் தன் கைப்பட எழுதி, கையெழுத்திட்ட போது அங்கிருந்த அதிகாரிகளிடம் 'அந்த வேலை இருப்பதால்தான் அந்தப் பெண்ணையே இன்னொரு இளைஞன் திருமணம் செய்து கொண்டிருக்கிறான். இந்த வேலையும் இல்லை என்றால் அந்தப் பெண்ணை வைத்து அவன் வாழ்வானா என்பது சந்தேகம்தான். எனவே அந்தப் பெண்ணின் வாழ்க்கை அந்த வேலையில்தான் இருக்கின்றது. வேலை போய்விட்டால் பெண்ணுக்கு மதிப்பு போய்விடும்' என்று அவர் விளக்கம் சொல்லி அவர்களுக்கு புரிய வைத்தார். பெற்ற தகப்பனைப் போல கூடப்பிறந்த சகோதரன் போல

தன் குடும்பத்து பெண் இளம் வயதில் விதவையாகிவிட்ட நேரத்தில் அவளுக்கு வாழ ஏதேனும் நல்ல வழி செய்து கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இரக்கத்தோடு அந்தப் பெண்ணை வாழ வைத்தவர் எம்.ஜி.ஆர். அன்பு, கருணை, இரக்கம் என்ற முன்று அரும்பண்புகளும் நிறைந்தவர் எம்.ஜி.ஆர். என்பதற்கு இச்சம்பவம் மிக சரியான எடுத்துக்காட்டாகும்..

மார்ட்டின் லூதர் கிங் சொன்னது போல *you only need your heart full of grace a soul is generated by love* என்பது எம்.ஜி.ஆருக்கு முற்றிலும் பொருந்தியது. இப்பண்புகளே அவரை மக்கள் தலைவனாக உயர்த்தியது. ஒரு தலைவனுக்கு தேவை தன்னுடைய மக்களின்பால் அன்பும் அருளும் ஆகும். அன்பு என்பது தனக்குத் தெரிந்தவர்களிடம் ஒரு மனிதன் காட்டும் பாசம்; அருள் என்பது தனக்குத் தெரியாத யாரோ ஒருவரிடமும் காட்டும் பாசம் ஆகும். இவ்விரண்டும் எம்.ஜி.ஆரிடம் தாராளமாக் இருந்தது.

வெற்றி

வெற்றியால் மட்டுமே ஒரு தலைவன் இனம் காணப்படுகிறான். வெற்றி கிடைக்காதவரை ஒரு தலைவனின் கொள்கைகள் என்ன தான் சிறப்பாக இருந்தாலும் அவனை தலைவன் என இவ்வுலகம் முத்திரை குத்துவதில்லை. வெற்றி என்பது எல்லோருடைய இலக்காக இருப்பினும் எம்.ஜி.ஆருக்கு மட்டும் அது அன்றாடம் செடியில் பூத்த மலர் போல அவர் கைக்கு கிட்டியது.

வெற்றி மீது வெற்றி வந்து என்னை சேரும்

அதை வாங்கித் தந்த பெருமை எல்லாம் உன்னை சேரும்

என்று தேடி வந்த மாப்பிள்ளை *(1970)* படத்தில் தன் தாயாரைப் பார்த்து பாடுவார். ஆனால் அந்த பாட்டு மறைமுகமாக தனக்கு வெற்றியைத் தேடித்தந்த பெருமை தன் ரசிகர்களைச் சேரும் என்று சொல்வதாகவே அமைந்திருந்தது. ஆயிரத்தில் ஒருவன் *(1965)* படத்தில் 'வெற்றி தேவதை உன் வீட்டு வேலைக்காரி ஆயிற்றே' என்று



▲ ஒருவரை ஒருவர் அண்ணா என்று அழைத்துக்கொண்டாலும் இறுதிவரை அணையா நட்புடன் வாழ்ந்த எம்.ஜி.ஆர், சின்னப்பாதேவர் இருவரும் நீதிக்குப்பின் பாசம்' படப்பிடிப்பில் சிரித்துப் பேசி உரையாடி மகிழ்கிறார்கள்.

ஒரு வசனத்தை வில்லன் நம்பியார் எம்.ஜி.ஆரைப் பார்த்து சொல்வார். தேவர் தன் படங்களில் முதல் காட்சியில் எம்.ஜி.ஆர் வெற்றி வெற்றி என்று சொல்லிக்கொண்டு வருவது போல பேச வைத்து படப்பிடிப்பைத் தொடங்குவார். வெற்றி என்ற வசனமே முதல் காட்சியாக எடுக்கப்படும். திரையுலகிலும் அரசியலிலும் தொடர்ந்து வெற்றி பெறுவதற்கு எம்.ஜி.ஆருக்கு உறுதுணையாக இருந்தவை மக்களும் அவரும் ஒருவருக்கொருவர்

கொண்டிருந்த பரஸ்பர அன்பும் நல்லெண்ணமும் ஆகும். எம்.ஜி.ஆர். எதைச் செய்தாலும் அது மக்களின் நன்மைக்காக இருக்க வேண்டும் என்று நினைத்து அதிகாரிகளுடன் கலந்து விவாதித்து செய்தாரே தவிர தன்னுடைய குடும்பத்தினருக்கோ தன்னுடைய நண்பர்களுக்கு கட்சிக்காரர்களுக்கும் இது நன்மையைத் தரக்கூடிய திட்டம் என்று முடிவு செய்து எந்த திட்டத்தையும் அறிவிக்கவில்லை; செயல்படுத்தவில்லை. இந்தப் பின்புலத்துடன் அவரது வெற்றிக்கான வழி முறைகளாக நாம் சிலவற்றை காண்கிறோம்

1. இலட்சியம்,
2. முன்னேற்றம்
3. உரிய காலத்தில் செய்த நன்மை
4. ஏழைகளிடம் கருணை
5. மற்றவர்களையும் தன்னோடு சேர்த்து இணைத்து நோக்குதல்
6. தர்மம் நீதி சமாதானம் ஆகிய பெரிய தகவுகளோடு [values] மக்களையும் வாழ்க்கையையும் இணைத்தல்
7. தனிமனித நெறிமுறை
8. சமூகத்திலிருந்து பெற்றதை விட கொடுப்பது அதிகம்
9. புதுமை மற்றும் படைப்பாற்றல்.

இனி இவ்வொன்றும் எம்.ஜி.ஆர். வாழ்வில் செயல்பட்ட விதத்தை காண்போம்.

1. இலட்சியம்

தலைவன் என்பவன் கொள்கை மற்றும் செயல்பாடுகளால் தான் விரும்பிய இலக்குக்கு தனது மக்களை இட்டுச் செல்கிறான். அந்த இலக்கை அடைவதே அவன் இலட்சியம் ஆகும். தலைவனின் இலட்சியம் தனி மனிதர் வாழ்வில் நிம்மதியும் சமுதாயத்தில் மகிழ்ச்சியும்

காட்டுவதாக அமைய வேண்டும். மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற இலட்சியத்தை கொண்டிருந்த எம்.ஜி.ஆர் ஒரு குடும்பத்தில் தாய் தந்தை இருவரும் நிம்மதியாக இருக்க வேண்டும் என்றால் அவர்களின் குழந்தை நிம்மதியாக இருக்க வேண்டும். குழந்தைகளின் மகிழ்ச்சியில் தான் பெற்றோரின் மகிழ்ச்சி அடங்கி இருக்கிறது. எனவே குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சத்துணவை வழங்கிய எம்.ஜி.ஆர் அதன்மூலம் பெற்றோர்களுக்கு நிம்மதியை அளித்தார். மிதிவண்டியில் இருவர் போக அனுமதி அளித்ததும் கணவன் மனைவி சேர்ந்து போக வாய்ப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அரசு பணி செய்யும் கணவன் மனைவியருக்கு மனைவி இருக்கும் ஊருக்கு கணவனுக்கு பணி மாற்றம் அளிக்க உத்தரவிட்டார். இருவரும் அருகருகே உள்ள ஊர்களில் பணி செய்ய வாய்ப்பளித்தார். குடும்பமே சமுதாயத்தின் மிகச் சிறிய அழகு என்பதால் ஒவ்வொரு குடும்பமும் சிறப்பாக இருந்தால் சமுதாயம் சிறப்பு நிலையை அடையும் என்பதால் மாற்றத்தை சிறிய அழகில் இருந்து கொண்டுவந்தார். தனி மனித ஆரோக்கியம் மகிழ்ச்சி என்பது எம்.ஜி.ஆரின் முதற்கட்ட இலட்சியமாக இருந்தது.

2. முன்னேற்றம்

தலைவன் என்பவன் தானும் முன்னேற வேண்டும் தன் மக்களையும் முன்னேற்றப் படிகளில் அழைத்து செல்ல வேண்டும். இவ்விரண்டையும் அழகாகச் செய்தவர் எம்.ஜி.ஆர்.

ஒவ்வொரு தனிமனிதனும் தன்னளவில் படிப்படியாக முன்னேறிக் கொண்டிருக்க வேண்டுமே தவிர இருந்த இடத்தில் கிடை நீர் போல இருந்துவிடக் கூடாது. இது எம்.ஜி.ஆர் வாழ்வில் சிறப்பாக நடந்ததனால் அவர் தலைவராக உயர முடிந்தது. ஆரம்பத்தில் நாடகத்தில் சிறுவனாக சில கதாபாத்திரங்களில் நடித்து வந்த எம்.ஜி.ஆர். பதினேழு பதினெட்டு வயது ஆனதும் நாடகத்தை விட்டு வெளியேறி அப்போது பரபரப்பாக இருந்து வந்த திரையுலகில் அடியெடுத்து வைத்தார். 1936 முதல் 1947 வரை சுமார் பதினோரு ஆண்டுகள் அவர் திரையுலகில் பி யு

சின்னப்பா, எம்கே தியாகராஜ பாகவதர் போன்ற நடிகர்களோடு சிறு சிறு கதாபாத்திரங்களில் நடித்து வந்தார். பின்னர் ராஜகுமாரி படத்தில் கதாநாயகனாக உயர்ந்தார்.

எம்.ஜி.ஆர். கதாநாயகன் ஆனதும் தன்னுடைய லட்சியம் வெற்றி பெற்றதாக அவர் அமைதி அடையவில்லை. தான் திரையுலகில் மேலும் மேலும் முன்னேற வேண்டும்; ஓர் உயர்ந்த இடத்தை அடைய வேண்டும் என்ற இலட்சியத்துடன் பத்தாண்டுகள் செயல்பட்டார். திரையுலகைக் கூர்ந்து கவனித்து வந்தார். வெற்றி காரணிகளைக் கண்டறிந்தார். அவற்றை நடைமுறைப்படுத்த விரும்பினார். 1957இல் தான் நடிக்க விரும்பியவாறு நடிப்பதற்கு மற்ற தயாரிப்பாளர்களின் இயக்குனர்களையும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது சரியல்ல என்ற முடிவுக்கு வந்து அவர் தன்னுடைய சொந்தப் படத்தை தயாரிக்க தொடங்கினார். சொந்தப்படமான நாடோடி மன்னன் (1958) வெளிவது இமாலய வெற்றி பெற்றது. அப்படம் அளித்த வெற்றி அவரை திரை உலகின் உச்சத்தில் கொண்டு போய் வைத்தது. அந்தப் படமே அவருடைய அரசியல் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தது. அவருடைய சொல்வாக்கும் செல்வாக்கும் உயர்ந்தது. இப்போது அவர் வாக்கு வேத வாக்காயிற்று. மறுத்துப் பேச எவரும் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது. அவர் பேச்சை கேட்காத தயாரிப்பாளர்கள் நடிகர்கள் சந்தித்த தோல்வியும் நஷ்டமும் மற்றவர்களுக்கு ஓர் பாடம் ஆயிற்று. அவருடைய முன்னேற்றத்துக்கு யாராலும் தடை போட முடியவில்லை. இதுவே அவருடைய அரசியல் வாழ்விலும் தொடர்ந்தது. சாணக்யன் இராஜ தந்திரி என்று பாராட்டப்பட்ட கருணாநிதியால் கூட எம்.ஜி.ஆரை அரசியல் களத்தில் வீழ்த்த இயலவில்லை.

அண்ணாவின் நட்பால் எம்.ஜி.ஆர். திராவிட முன்னேற்றக் கழகத்தில் முக்கிய நபரானார். அண்ணாவிடம் பத்தாயிரம் ரூபாய் தேர்தல் நிதி கொடுக்க வந்த எம்.ஜி.ஆரிடம் 'நீ மக்களிடம் வந்து உன் முகத்தை காட்டு ராமச்சந்திரா அது எனக்கு இலட்சம் ஓட்டுகளைப் பெற்று

தரும்' என்று அண்ணா கேட்டுக்கொண்டார். அதன் பிறகு எம்.ஜி.ஆர். தேர்தல் பிரச்சாரங்களுக்கு அழைக்கப்பட்டார். 1962இலும் 1967இலும் திமுகவுக்கு கிடைத்த வெற்றியில் எம்.ஜி.ஆரின் பங்கு குறிப்பிடத்தக்கது.

அண்ணா முதலமைச்சர் ஆனதும் அமைச்சரவைப் பட்டியலை எம்.ஜி.ஆரிடம் காட்டி ஒப்புதல் பெறும் அளவுக்கு



எம்.ஜி.ஆரின் தகுதி உயர்ந்திருந்தது. அண்ணாவின் மறைவுக்குப் பிறகு கலைஞர் கருணாநிதியை எம்.ஜி.ஆர்.தான் முதலமைச்சர் ஆக்கினார். கருணாநிதியின் போக்கு சரியில்லை என தெரிந்ததும் அவரை எதிர்த்து நின்றார். திமுகவை விட்டு வெளியேற்றப்பட்டதும் தனிக்கட்சி தொடங்கி தன்னுடைய அரசியல் பாதையில் தொடர்ந்து வெற்றி பெற்று தன் இறுதி மூச்சு உள்ளவரை அவர் மக்களின் மகோன்னத தலைவராகவே இருந்து மறைந்தார். ஆக முன்னேற்றம் என்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்து படிப்படியாக முன்னேறி அடுத்தடுத்த கட்டத்தை அடைந்து இந்தியாவின் உயர்த்த விருதான பாரத ரத்னாவைப் பெறும் அளவுக்கு வாழ்வில் உன்னத நிலையை அடைந்தார்.

முதலமைச்சரானதும் அரசில் நிதி இல்லாத காரணத்தால் தனியார்ப் பள்ளி, கல்லூரிகளை தொடங்கும்படி ஊக்குவித்து அவற்றில் கால் பகுதி ஏழை மாணவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கும்படி செய்தார். அவ்வாறு பள்ளிக் கல்வி முடித்தவர்களை அடுத்த கட்டத்துக்கு முன்னேற்ற விரும்பினார். அவர்கள் வெறும் குமாஸ்தாக்களாக இருந்துவிடக் கூடாது தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் அவர்கள் தொழிற்கல்வி பெறுவதற்கு ஐ. டி. ஐ, பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளிலும் இடம் கிடைக்கச் செய்தார்.

3. காலத்தில் செய்யும் நன்மை

தலைவன் தன்னை தேடி வந்து உதவி கேட்டால் மட்டும் செய்வேன் என்ற அகந்தையுடன் இருக்க கூடாது. தானே தேடி போய் உதவ வேண்டும். சென்னையில் ஆந்திரா, கர்நாடகா, குஜராத், ஒரிசா போன்ற மாநிலங்களில் சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் தீ விபத்து, பூகம்பம், வெள்ளச் சேதம், போர் அபாயம் ஏற்பட்ட போதும் வேறு உதவிகள் தேவைப்பட்ட போதும் எம்.ஜி.ஆரின் உதவியே முதல் உதவியாக சென்று சேரும். அரசின் உதவிக் கரம் நீளும் முன்பே எம்.ஜி.ஆரின் உதவிகள் உரியவருக்குப் போய்ச்



சேர்ந்துவிடும். தனி நபருக்குத் தேவை என்றாலும் நாடுகளுக்கு தேவை என்றாலும் எம்.ஜி.ஆர். உடனடியாக உதவுவார். இவ்வாறு உதவுவதும் பிறர் துயரை தனது துயரமாக உணர்வதும் தலைமைத்துவப் பண்புகளில் சிறந்த பண்பாகும்.

சோ எழுதிய ஒரு கட்டுரையில் அவரிடம் ஒருமுறை பேசிக்கொண்டிருந்த சட்டாம்பிள்ளை என்ற நடிகர் வீட்டில்

உலை வைத்து விட்டு அரிசி வாங்கிக் கொண்டு வரலாம் என்று போவதாக இருந்தால் அது எம்.ஜி.ஆர் வீட்டுக்கு தான் போக வேண்டும் அங்கு போனால் தான் நம்பிக்கையோடு நமக்கு பணம் கிடைக்கும் என்று சொன்னதாகக் குறிப்பிட்டிருந்தார். எம்.ஜி.ஆர் பற்றி சரோஜாதேவி அளித்த பேட்டி ஒன்றில் 'கடவுளிடம் கேட்டால் கூட அது ஒரு வாரம் பத்து நாள் கழித்து கொடுக்கும். ஆனால் எம்.ஜி.ஆரிடம் போய் கேட்டால் உடனடியாக கிடைக்கும்' என்றார். எம்.ஜி.ஆரிடம் போய் வெறுங்கையோடு திரும்பியாவர் எவருமில்லை. எதிரியாக இருந்தாலும் கூட அவர் கண்ணில் படும்படி நின்று விட்டால் என்ன ஏது என்று கேட்காமலேயே உதவி செய்து விடுவார். பலருக்கும் அவசர காலத்தில் உரிய உதவிகளை செய்திருக்கிறார். திரையுலகில் சுமார் 10 பேருக்கு அவர்களின் வீடு ஏலத்தில் போன சமயத்தில் பணம் கொடுத்து உதவி வீட்டை மீட்டு தந்திருக்கிறார். என் எஸ் கிருஷ்ணனின் சொந்த வீடு ஒன்று அவர் மனைவி மதுரத்தின் சொந்த ஊரான திருச்சியில் இருந்தது. அதன் பெயர் கிருஷ்ண விலாசம். அந்த வீடு ஏலத்திற்கு வந்தபோது அதை ஏலத்தில் எடுத்து என் எஸ் கிருஷ்ணன் கையில் திருப்பிக் கொடுத்தார்.

எம்.ஜி.ஆரிடம் போய் கேட்டுத் தான் உதவி பெற வேண்டும் என்ற நிலை இல்லை. அவர் காதுக்கு அபயக் குரல் கேட்டாலே போதும் அவர் ஆபத்பாந்தவன், அனாதரட்சகன் மாதிரி குரல் கேட்ட திசையில் தேடி வந்து உதவி செய்வார். இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. எம்.ஜி.ஆர். ஒரு முறை காரில் வந்து கொண்டிருந்த போது. தெருவில் யாரோ உட்கார்ந்து ஒவென்று அழுது சத்தம் கேட்டதும் காரை நிறுத்தச் சொன்னார். அங்கு போய் என்னவென்று பார்த்து விட்டு வா என்று தன் உதவியாளரை அனுப்பி வைத்தார். அவர் போய்ப் பார்த்து விவரம் கேட்டுக்கொண்டு வந்து எம்.ஜி.ஆரிடம் 'குதிரை வண்டிக்காரன் தன் குதிரை செத்ததால் அழுகிறான்' அவன் குடும்பமும் செத்துப் போன குதிரையைச் சுற்றி உடகார்ந்து கொண்டு அழுதுகொண்டிருக்கிறது' என்றார். அழுது கொண்டிருந்த குதிரை வண்டிக்காரனை அழைத்து வரச் சொல்லி அவனிடம் புது குதிரை வாங்க பணம் கொடுத்து குதிரை வண்டியில் பூட்டி அதை பழக்கும் வரை

அவனுடைய வீட்டுச் செலவுக்கும் பணம் கொடுத்து குதிரையை வண்டியில் பூட்டி தன்னிடம் கொண்டு வந்து காண்பித்து விட்டு செல்ல வேண்டும் என்று அன்புக் கட்டளை இட்டார்.

தெய்வத்தின் தெய்வம்

வலியப் போய் உதவி செய்யும் நற்குணம் எம்.ஜி.ஆருக்கு இருந்ததால் மக்கள் அவரிடம் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். அவரைத் தெய்வமாக போற்றினர். அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் காணு என்ற ஜப்பானிய மருத்துவர் பெயரால் காணு நகர் என்று ஒரு பகுதிக்கு பெயர் சூட்டினர். அதைப் பற்றி விசாரித்தபோது அவர் எங்கள் 'தெய்வத்தின் தெய்வம்' என்று நன்றியோடு குறிப்பிட்டனர்.

4. ஏழைகளிடம் கருணை

தலைவனின் சிறப்பு பண்புகளில் ஒன்று ஏழை, எளியோர், நலிந்தோர், பெண்கள், குழந்தைகள், முதியவர் மற்றும் ஒடுக்கப்பட்டோரிடம் அன்பும் கருணையும் கொண்டிருப்பது ஆகும். அவர்களின் துன்பத்தைத் தீர்க்க வந்த இரட்சகர் என்று நம்பிக் கொண்டிருக்கும் மக்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும்; அவர்களின் துன்பத்தை குறைக்க வேண்டும். அவர்களை தமது சுய நலத்துக்குப் பயன்படுத்தி ஏமாற்றக் கூடாது. அவர்களை நேசிக்க வேண்டும் உண்மையான அன்பும் பரிவும் கருணையும் கொண்டிருக்கவேண்டும்.

காரில் போகும்போது தன் காருக்கு பின்னால் ஓடி வரும் மக்களைப் பார்த்து இவர்களுக்கு நான் என்ன செய்யப் போகிறேன் என்று சொல்லி அழுததும் உண்டு. அவர் ஏராளமான திட்டங்களை ஏழை மக்களுக்காகக் கொண்டு வந்தார். நகரத்தில் குடிசைபகுதி மாற்று வாரியத்தை முடுக்கிவிட்டு தெருவோரத்தில் குடியிருந்தவர்களுக்கு முப்பது இலட்சம் வீடுகள் தமிழக அரசு கட்டித் தர ஏற்பாடுகள் செய்தார். கிராமங்களில் பத்து லட்சம் பேருக்கு வீட்டுமனை இலவசமாக அளித்தார். விவசாயிகளுக்கும்,

நகரங்களிலும் கிராமங்களிலும் சில மாதங்கள் வேலை இருக்காது. அப்போது அவர்களுக்கு பிழைப்பூதியம் வழங்கும் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக அறிமுகம் செய்தார். முறை சாரா வேலைகளுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்தார். விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகள், நெசவாளிகளுக்கு கூட்டுறவு நூற்பாலைகள் ஆகியவற்றைக் கொண்டு வந்தார். கிராமப் பெண்களின் சமையலறைச் சிரமங்களைக் குறைக்கவும் கிராமங்கள் தன்னிறைவு நிலை பெறவும் சாண எரி வாயு திட்டம் அறிமுகம் ஆனது. இந்தியாவிலேயே இத்திட்டம் சிறப்பாக செயல்பட்ட பெருமையை தமிழ்நாடு பெற்றது. 1987இல் முதலிடம் பெற்ற தமிழகம் அதற்கு முன்பு தொடர்ந்து இரண்டு முறை இரண்டாவது இடத்தைப் பெற்று வந்தது.

எம்.ஜி.ஆர். தன்னுடைய ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு தொழிலுக்கும் கூட்டுறவு வங்கி அமைத்து கூட்டுறவே நாட்டுயர்வு என்ற கொள்கையின் படி செயல் திட்டங்களை தீட்டினார். கூட்டுறவு வங்கியின் மூலம் கடன் பெற்று தங்களது தொழில் திறமையை வளர்த்துக் கொள்ளவும் அரசு அளிக்கும் பயிற்சிகளைப் பெற்று தொழிலை விரிவாக்கவும், வருமானத்தைப் பெருக்கவும் எம்.ஜி.ஆர் திட்டங்கள் தீட்டி நடைமுறைப்படுத்தினார்.

இவ்வாறு ஏழைகளின் பால் அன்பும் கருணையும் உள்ளவராக இருந்ததனால் முதியோர்களுக்கும் ஒருவேளை உணவு இலவசமாக அளித்து அவர்களின் கைச்செலவுக்கு முதியோர் ஓய்வுதியம் என்ற பெயரில் ஒரு சிறு தொகை கொடுத்து வந்தார். பெரியவர்களின் கைகளில் இருக்கும் இத் தொகை அவர்களின் பேரப்பிள்ளைகளுக்கு ஏதேனும் விருப்பப்பட்ட பொருளை வாங்கிக் கொடுக்கவும், பேரப்பிள்ளைகளோடு மகிழ்ச்சியாகக் காலத்தைச் செலவிடவும் உதவும் என்பதால் அவர்களுக்கும் பொருளாதார சுதந்திரம் தேவை என்ற நோக்கில் அந்த முதியவர்களின் தலைமகனாக இருந்து எம்.ஜி.ஆர் அவர்களுக்கு வேண்டியதை செய்து வந்தார்.

5. தன்னையும் மக்களோடு இணைத்துக் கொள்ளுதல்

தலைவன் என்பவன் தலைமை பொறுப்பு ஏற்றிருந்தாலும் அவன் தன் மக்களுக்கு ஒரு தொண்டனே ஆவான். தலைவன் அவர்களை வழிநடத்திச் சென்றாலும் அவர்களுக்குக் கட்டுப்பட்டவனே என்பதை அவன் எப்போதும் மறந்துவிடக் கூடாது. தலைவனின் உயர் பண்புகளை அவர் ஆயிரத்தில் ஒருவன் மற்றும் படகோட்டியில் அழகாகத் தெளிவாகக் விளக்கியிருப்பார். திருவள்ளுவரும் தலைவனின் பண்புகளை எடுத்துரைக்கும் போது 'காட்சிக்கு எளியனாய்' என்ற தன்மையை முதலில் குறிப்பிடுகிறார். எம்.ஜி.ஆரும் மக்கள் வந்து தன்னைப் பார்ப்பதற்கு கெடுபிடிகள் இல்லாதவராக இருந்தார். அவரை அதிகாலையிலும் பார்க்கலாம், தோட்டத்திலும் பார்க்கலாம்; கோட்டையில் பார்க்கலாம்; கட்சி அலுவலகத்திலும் பார்க்கலாம். வழியிலும் பார்க்கலாம். காரை மறித்து பார்த்தவர்கள் உண்டு. அவரும் வழியில் காரை நிறுத்தி மக்களை சந்தித்தது உண்டு. வீட்டுக்கு போகும் பொது ஒரு நாள் திடிரென ரேஷன் கடையில் கூட வந்து உட்கார்ந்திருந்தார்.

எம்.ஜி.ஆர் எப்போதும் மக்களோடு மக்களாகப் [inclusive] பழகி வந்தார். இன்றைய அரசியல்வாதிகள் போல அவர் தன்னை விட்டு மக்களை பிரித்துவிடவில்லை. அவர் கூட்டங்களுக்குப் போகும் போது அவரைப் பார்க்க வரும் மக்கள் அவரது கையைப் பிடித்துக் கொள்வார்கள். அவருக்கு முத்தம் கொடுப்பார்கள். அப்போது அதிகாரிகள் அவருடைய பாதுகாப்பை எண்ணி அவர்களை அப்புறப்படுத்த நினைக்கும்போது எம்.ஜி.ஆர் அதிகாரிகளைக் கண்டித்து மக்களின் தீவிர அன்பை ஏற்றுக்கொள்வார். 'அவர்களுக்கு தெரிந்த வகையில் அவர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்துகிறார்கள் அவர்களை ஒன்றும் சொல்லாதீர்கள்' என்று தன் பாதுகாப்பு அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வார்.

ஒருமுறை ஒரு பெரிய குறவர் கூட்டம் ராமாவரத்தில் வந்து எம்.ஜி.ஆரை பார்த்தது. அப்படி பார்த்தவர்கள் அவரோடு ஒரு போட்டோ எடுக்க வேண்டும் என்ற போது எம்.ஜி.ஆர் அவர்களோடு நின்று போஸ் கொடுத்தார். அப்போது ஒரு குறவர் எம்.ஜி.ஆரின் கன்னத்தில் திடீரென்று முத்தம் கொடுத்தார். எல்லோரும் திகைத்து விட்டனர். எம்.ஜி.ஆருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. என்னப்பா இப்படி செய்து விட்டாய் என்று சிரித்துக்கொண்டே கைக்குட்டையால் தன்னுடைய கன்னத்தில் இருந்த அவருடைய வெற்றிலை எச்சிலைத் துடைத்தார். அதற்கு அந்த குறவர் 'ஐயா நான் உங்கள் கன்னத்தில் முத்தம் கொடுப்பேன் என்று சவால் விட்டு வந்தேன். என் சவாலில் நான் ஜெயித்து விட்டேன்' என்று சிரித்துக் கொண்டே சொன்னாராம். 'இதுபோல் வேறு ஏதாவது நடிகை பெயரை சொல்லி சவால் வைத்து விடாதே; வம்பாகப் போய்விடும்' என்று சொல்லி சிரித்தார்.



எம்.ஜி.ஆர். பிரச்சாரத்துக்குப் போகும்போதும் படபிடிப்பில் இருக்கும் போதும் பல இடங்களில் எம்.ஜி.ஆரை வந்து கட்டிப் பிடிப்பதும் அவர் கைகளை, கன்னத்தை கிள்ளுவதும் அவரை தொட்டுக் கொள்ளவா என்று கேட்டு அவரை தொட்டுப் பார்ப்பதும், அவர்கள் கைகளில் முத்தம் கொடுப்பதும் இறுகக் கட்டி அணைப்பதும் சர்வ சாதாரணமாக நடந்தன. எம்.ஜி.ஆர். அவர்களைத் தன்னுடைய சொந்த சகோதரர்களாக நினைப்பாரே தவிர அவர்களின் கை, உடம்பு, எச்சில் போன்றவை தன் மீது பட்டு விட்டது என்று அருவருப்படைய மாட்டார். வயதான பெண்கள் வியர்வை நாற்றத்துடன் வந்து அவரை கட்டிப்பிடித்து புத்திமதி சொல்வதுண்டு, வாழ்த்துவதுண்டு. சிலர் அலுத்து தங்களின் பரிதாப நிலைமையை விவரிப்பதுண்டு. தன்னை வாழ வைக்கும் தெய்வங்கள் அவர்கள் தான் என்ற உண்மையை உணர்ந்தவராக அவர்கள் சொல்வதை எம்.ஜி.ஆர். பொறுமையுடன் கேட்டுக் கொள்வார் சகித்துக்கொள்வார், அருவருப்படைய மாட்டார்.

எம்.ஜி.ஆர். வெளியூர் படப்பிடிப்பின் போதும் அல்லது படப்பிடிப்பு நிலையத்திலும் மதிய உணவு சாப்பிடுவதாக இருந்தால் அனைவரோடும் சேர்ந்து உட்கார்ந்து தனக்கு பரிமாறப்பட்ட உணவு அனைவருக்கும் பரிமாறப்பட்டு இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொண்டு சாப்பிடத் தொடங்குவார். அவ்வாறு சாப்பிடும் போது மற்றவர்களின் இலையைக் கவனித்து யார் எந்த பதார்த்தத்தை விரும்பி சாப்பிடுகிறார் என்பதைக் கவனித்து அவருக்கு அந்த பதார்த்தத்தை திரும்பத் திரும்ப பரிமாறும்படி கூறுவார். விரைவாக சாப்பிட்டு முடிக்கும் எம்.ஜி.ஆர். மற்றவர்களிடம் சென்று அவர்களிடம் சாப்பாடு எப்படி இருக்கிறது என்று விசாரித்து அவர்களுக்குப் பிரியமானதை பரிமாறச் சொல்வார்.

ஒரு முறை ஒரு போலிஸ் அதிகாரிக்குக் காலையில் ராமாவரம் தோட்டத்துக்கு வரும்படி அழைப்பு வந்தது. அவர் என்னவோ ஏதோ என்று பயந்துகொண்டே சென்றார். அங்கு சென்றதும் எம்.ஜி.ஆரின் உதவியாளர் ‘நீங்கள் டியுட்டியில் இருந்த அன்று காலையில் இடியாப்பம் சாப்பிட்டுவிட்டு

நன்றாக இருக்கிறது என்று சொன்னது தலைவர் காதில் விழுந்திருக்கிறது. 'இன்று நம் வீட்டில் இடியாப்பம் செய்திருக்கிறார்கள் அவரை வரச் சொல்லி சாப்பிடச் சொல்' என்று என்னிடம் கூறினார். அதனால் உங்களை வரச் சொன்னேன் போய் சாப்பிடுங்கள்' என்றார். அந்த போலிஸ் அதிகாரி மனம் நெகிழ்ந்துவிட்டார். தான் அன்று இடியாப்பம் சாப்பிட்ட மகிழ்ச்சியில் பேசிக் கொண்டிருந்ததைக் கவனத்தில் வைத்து மறக்காமல் இன்று அழைத்து சாப்பிட வைக்கிறாரே என்று மகிழ்ந்து நெகிழ்ந்து போனார். சின்ன சின்ன விஷயங்களில் கூட எம்.ஜி.ஆர். கனிவுள்ளவராகவே அவரை சுற்றியுள்ள மனிதர்களிடம் இருந்திருக்கிறார்.

அவருடைய சத்யா ஸ்டூடியோவில் அவர் ஒரு பங்குதாரராக நடந்து கொண்டாரே தவிர என்று முதலாளியாக இருக்கவில்லை. மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் படப்பிடிப்பின் பொது அவர் கையில் லேசாக தீ பட்டுவிட்டது. உடனே அவர் மருந்து கேட்டார் அங்கு மருந்து எதுவும் இல்லை. பணியாளர்களுக்கு காயம் பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார், பதில் இல்லை. உடனே அங்கு முதலுதவி பெட்டி வைக்கச் செய்தார் அனைத்துப் பணியாளருக்கும் மருத்துவக் காப்பிடு எடுக்க ஏற்பாடுகள் செய்தார். அவர்களுக்கு மருத்துவப் பாதுகாப்பு அளித்தார். தன்னைப் போல பிறரை நேசித்த தயாளன் அவர்.

இவ்வளவு பணம் சம்பாதித்து எல்லாவற்றையும் கொடுத்து மகிழ்ந்தால் நாளைக்கு உங்கள் தேவைக்கு என்ன செய்வீர்கள் என்று நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு 'பணம் நிரந்தரமானதல்ல. இந்த ஸ்டுடியோ முன்பு ஜுபிடர் ஸ்டுடியோவாக இருந்த போது அந்த முதலாளி சோமு முன்பு நிற்க நாங்கள் பயப்படுவோம் இன்று இதில் நான் பங்குதாரராக இருக்கிறேன். பணமும் புகழும் நிலையில்லாதது'. என்றார். அந்த ஸ்டுடியோவில் தனது வசதிக்கேற்றபடி பங்குகளைத் தான் வைத்துக்கொண்டு அங்கு வேலை பார்த்த மற்றவர்களையும் அதில் பங்குதாரர்கள் ஆக்கியிருந்தார். எனவே அங்கு பணியாற்றிய அனைவரும் அதன் பங்குதாரர்கள் என்பதால் அனைவருமே

அந்த ஸ்டூடியோவின் முதலாளிகள்தான். தொழிலாளி படத்தில் ஆளுக்கு கொஞ்சம் பணம் போட்டு கூட்டுறவு பஸ் சர்விஸ் நடத்தியது வெறும் நடிப்பு அல்ல; அவர் சத்யா படப்பிடிப்பு நிலையத்தில் அவரது வாழ்வில் நடந்த நிஜம்.

எம்.ஜி.ஆர். தன்னுடன் வரும் ஆட்களுக்கு தக்க பாதுகாப்பு அளிப்பதை தனது பொறுப்பாக ஏற்றுக்கொள்ளும் உன்னதத் தலைவர். நாடகம் சினிமா அரசியல் என அனைத்து துறையிலும் அவர் நலிந்தோருக்கும் பெண்களுக்கும் தக்க பாதுகாப்பு அளிப்பதை தனது கடமையாகக் கொண்டிருந்தார். ஜி சகுந்தலா பேட்டியில் நாடகம் நடித்து முடித்து வரும் பொது அவர் நாடக நடிகைகளை பாதுகாப்பாக அழைத்து வரும் விதம் குறித்து விவரித்திருப்பார். மதுரை வீரன் திரைப்பட விழா மதுரையில் நடந்த சமயத்தில் அங்கு காரில் வந்த எம்.ஜி.ஆர். தன்னை சுற்றி குழுமிய ரசிகர்களைப் பார்த்து பெண்கள் போக வழி விடுங்கள் என்றார். உடனே அவர்கள் நடிகைகள் மேடை செல்லும் வரை விலகி நின்றனர். பின்பு எம்.ஜி.ஆரை தொட்டு கொஞ்சி மகிழ்ந்தனர். அரசியல் பொது கூட்டம் ஒன்றில் பேசிய எம்.ஜி.ஆர். தான் பேசி முடித்ததும் ஆண்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டும் நீங்கள் இருங்கள் பெண்கள் கிளம்பட்டும் என்றார். பெண்கள் கிளம்பி சென்றதும் ஆண்கள் போகலாம் என்றார். என்ன காரணம் என்று கேட்டதற்கு கூட்டம் அதிகம் இருப்பதால் ஒரே சமயம் இரு சாராரும் கிளம்பினால் கூட்டத்தில் பெண்கள் சிக்கி சிரமப்படுவர் என்பதால் அவர்களை முதலில் போகச் சொன்னேன் என்றார். இவ்வாறு அனைத்து சூழ்நிலையிலும் பெண்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதில் முன் நின்றவர் எம்.ஜி.ஆர். பெண்களைப் பாதுகாக்க வேண்டும் இந்த பொறுப்புணர்ச்சி அவருக்குரிய தலைமைப்பண்புகளில் ஒன்று. மக்கள் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டிருந்ததால் மட்டுமே அவர் சிறந்த தலைவராக பெருமை பெற முடிந்தது.

6. உலகப் பொதுத் தகவுகளைப் பின்பற்றுதல்

ஒரு தலைவன் என்பவன் சிறிய வட்டத்துக்குள் தனது சிந்தனைகளை வைத்துக்கொள்ளக் கூடாது. பரந்துபட்ட பார்வையும் உலகளாவிய சிந்தனையும் தலைவனுக்கு

தேவை. அவரது படங்கள் love and war என்ற உலகளாவிய பாடு பொருள் தத்துவங்களை மையப்படுத்தியதாக இருந்தன. எனவே அவருடைய படங்களை இன்றும் தலைமுறை கடந்த பிறகும் கூட மக்கள் திரையரங்குகளுக்கு சென்று ரசிக்கின்றனர். வேறு எவர் படமும் திரையரங்குக்கு வராத நிலையில் எம்.ஜி.ஆர். படங்கள் மட்டுமே கடந்த அறுபது எழுபது ஆண்டுகளாக திரையரங்குகளில் வெற்றி நடை போடுகின்றன.

தலைவன் என்பவன் என்றும் நினைக்கப்படுபவனாக இருக்க வேண்டுமே தவிர அவன் காலத்தோடு அந்தத் தலைமுறையோடு மறந்துவிடக் கூடாது. இன்றும் வாழ்கிறார் எம்.ஜி.ஆர். என்ற சிறப்புக்குரியவர் தமிழகத்தில் எம்.ஜி.ஆர். ஒருவரே.

எம்.ஜி.ஆர் தனது தனிப்பட்ட வாழ்வில் தர்மம், நீதி, சமாதானம் போன்ற உலகப் பொதுத் தகவுகளைக் [universal values] கடைப்பிடித்தார். இவற்றைத் தன்னோடு இருக்கும் மற்றவர்களும் கடைப்பிடிக்கும்படி செய்தார்.

தர்மம் தலை காக்கும்

தக்க சமயத்தில் உயிர் காக்கும்

கூட இருந்தே குழி பறித்தாலும்

கொடுத்தது காத்து நிற்கும்

என்று கதாபாத்திரத்திற்காக மட்டும் பாடவில்லை.

நீதியின் தீபங்களை ஏந்திய கைகளின்

லட்சிய பயணம் இது இதில்

சத்திய சோதனை எத்தனை நேரினும்

தாங்கும் இதயம் இது

அண்ணனின் பாதையில்

வெற்றியே காணுவோம்

தர்மமே கொள்கையாய்

நாளெல்லாம் வாழ்வோம்

என்று எம்.ஜி.ஆர். படத்தில் பாடிய அவரிகள்

அவர் வாழ்க்கையில் தர்மம், நீதி, அமைதி ஆகியவற்றை அவர் தீவிரமாக பின்பற்றினார். யாருக்கும் இல்லை என்று கொடுக்காமல் கொடுக்கும் கொடை வள்ளல். நீதி கிடைக்காதவர்கள் எம்.ஜி.ஆரிடம் போய் முறையிட்டபோது அவர் அவர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்தார். நடிகை இலட்சுமி ஒரு அரசியல் தலைவருக்கு ஆதரவாக இருந்துகொண்டு தன்னைப்பற்றி அவதூறான விஷயங்களை ஒரு பத்திரிக்கை தொடர்ந்து வெளியிட்டு வருகிறது என்று எம்.ஜி.ஆரிடம் முறையிட்ட போது எம்.ஜி.ஆர். அந்தப் பத்திரிகையாசிரியரை அழைத்து கண்டித்து அனுப்பினார்.

சாவித்திரி ஒரு நாள் எம்.ஜி.ஆரின் மாம்பலம் அலுவலகத்துக்கு வந்து ‘அண்ணே நான் ரொம்பக் கஷ்டப்படுறேன்’ என்று சொன்னபோது ‘உடம்பைப் பார்த்துக்கம்மா’ என்று அறிவுரை கூறினார். உடனே உதவியாளரிடம் சொல்லி ஒரு குட்டி சாக்கில் ஒரு லட்ச ரூபாய் போட்டு கட்டி எடுத்து வரச் சொல்லி காரில் வைத்து



சாவித்திரியை அனுப்பி வைத்தார். ஒரு இலட்சம் என்பது அன்றைய தேதியில் ஒரு படத்தில் நடித்திருந்தால் அவர் வாங்கியிருக்கும் சம்பளம் ஆகும். பெரிய நடிகை என்பதாலும் நன்கு வாழ்ந்தவர் என்பதாலும் அவருக்கு ஒரு படத்துக்கான சம்பளத்தை கொடுத்து கௌரவப்படுத்தினார். வாழ்க்கையில் கடன் தொல்லையால் அவதிப்பட்டவர்கள் அவரிடம் போய் நின்றபோது அவர் அவர்களின் கண்ணீரைத் துடைத்தார்; கடனை அடைத்தார்.

7. தனிநபர் நெறிமுறை

ஒரு தலைவன் தனி வாழ்வில் பின்பற்றும் நெறிமுறைகளைப் பார்த்து மற்றவர்களும் அதனைப் பின்பற்றுவர். எனவே தலைவனுக்குத் தனி மனிதக் கட்டுப்பாடுகள் மிகவும் அவசியம், ‘நான் தலைவன் என்ன வேண்டும் என்றாலும் செய்யலாம்; நீ தொண்டன் எதுவும் செய்யக் கூடாது’ என்று சொல்லக்கூடாது. ஒரு தலைவன் அப்படி நினைத்தால் அவன் வழிகாட்டக் கூடிய தலைவனே அல்லன்; அவனைப் பின்பற்றி மற்றவர்கள் வர மாட்டார்கள். தலைவன் பல தலைமுறைகளால் நினைவு கூறப்படுபவன் என்பதால் அவன் தலைமுறைகள் கடந்த காலத்தால் நின்று நிலைக்கும் நெறிமுறைகளோடு வாழ்ந்து வர வேண்டும். அவ்வாறு வாழ்ந்து தனது மக்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

எம்.ஜி.ஆரை இன்று மூன்று தலைமுறையாக மக்கள் அன்புத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு முக்கிய காரணம் அவர் காட்டிய அன்பும் இரக்கமும் அவர் பின்பற்றி வந்த நல் ஒழுக்கமும், கட்டுப்பாடுகளும் என உறுதியாகக கூறலாம்.

எம்.ஜி.ஆர் ஒரு தனி மனிதர் என்ற முறையில் பல நல்ல பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்தார், தன் வாழ்க்கையில் பின்பற்றி வந்தார். அவர் எப்போதும் தன் சுய நினைவுடன் சிந்தித்து வந்தார். போதை பொருட்களை அவர் பயன்படுத்தியது கிடையாது. இதனால் அவருடைய சிந்தனையிலும் செயலிலும் குழப்பம் ஏற்படவில்லை. நல்ல அறிஞர் பெருமக்களை தன்னுடன் வைத்திருந்தார். அவர்களின் ஆலோசனைகளைக்

கேட்டு அவற்றை ஆராய்ந்து சுயமாக முடிவெடுத்தார். பிறரைப் பற்றி புறம் பேசுபவர்களையும், கேலி செய்பவர்களையும் குரங்கு முண்டக்கண்ணன் என்று பட்டப் பெயர் வைத்து பேசுவோர்களையும் அவர் தன்னுடன் வைத்துக் கொண்டதில்லை. பெரியவர்களை மரியாதை இல்லாமல் அவன் இவன் என்று பேசும் நபர் தனக்கு எவ்வளவு வேண்டியவராக இருந்தாலும் அவரை உடனே கண்டித்தும், தண்டித்தும் விடுவார். இதனால் எம்.ஜி.ஆரிடம் போய் புறம் பேசுதல் கோள் மூட்டுதல் போன்ற வேலைகளை எவரும் செய்வது கிடையாது.

எம்.ஜி.ஆரைச் சுற்றி எப்போதும் ஆக்கப்பூர்வமான சிந்தனையும் நல்ல சூழ்நிலையும் நிலவுமாறு அக்கறை எடுத்துக் கொண்டார். ‘உடம்பால் அழியின் உயிரால் அழிவார்’ என்ற சித்தர் வாக்குப்படி தன் உடம்பை தன் ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்வதில் சிரத்தையாக இருந்தார். காலையில் தினமும் உடற்பயிற்சி செய்தல், நல்ல சத்துள்ள உணவை சாப்பிடுதல், ஒழுக்கமாகவும் உற்சாகத்தோடும் இருத்தல். தன்னுடன் இருப்போரும் நல்லபடியாக இருக்க வேண்டும் என்ற அக்கறையில் அவர்களுக்கு நல்ல பல கருத்துக்களை சொல்லி நல்வழி காட்டி அவர்களை தம்மோடு சேர்த்து அணைத்துக் கொண்டு வருதல் என இவர் தானும் கட்டுக்கோப்பாக வாழ்ந்து தன்னுடன் இருப்பவர்களையும் சிறப்பாக வாழ வைத்துக் கொண்டிருந்தார்.

எம்.ஜி.ஆர். வீட்டிலும், ஜானகி அம்மையார் மற்றும் அவரது அண்ணன் குழந்தைகள் பானு, சுதா, கீதா ஆகியோர் சிலம்பம், மிதி வண்டி விடுதல், நீச்சல், டென்னிஸ், என காலையில் அனைத்து உடற்பயிற்சி சார்ந்த விளையாட்டுகளிலும் ஈடுபட்டனர். பள்ளி விடுமுறை நாட்களில் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு வாய்ப்பாட்டு, வீணை, வயலின், மிருதங்கம் போன்றவற்றில் பயிற்சி தர ஏற்பாடுகள் செய்திருந்தார். ஒரு வினாடி கூட பிள்ளைகள் சோம்பி இருக்காமல் சுறுசுறுப்புடன் எதையாவது படித்துக்கொண்டே இருக்கும்படி பார்த்துக்கொண்டார். தனது வீட்டில் இருப்போரை தன்னைப் போலவே அறிவும் ஆரோக்கியமும்



கொண்டவராக வைத்திருந்தார். மாலையில் குழந்தைகள் நாளிதழ்களை வாசித்து அவர்களின் டியுஷன் ஆசிரியர் தரும் வினாடி வினா போட்டியைச் சிறப்பாக செய்ய வேண்டும்.

வாழு, வாழ விடு என்ற கொள்கையைப் பின்பற்றிய எம்.ஜி.ஆர். இன்னார் இனியார் என்றில்லாமல் எல்லோருடனும் அன்புடன் பழகி வந்தார். அவர் யாருக்கும் கெடுதல் நினைத்தது கிடையாது. தன்னுடைய அரசியல்

எதிரியாக விளங்கிய கருணாநிதியின் குடும்பத்தாருடன் அவர் நல்ல இணக்கமான உறவு கொண்டிருந்தார். இன்றைக்கும் ஸ்டாலின், கனிமொழி, அழகிரி போன்றோர் எம்.ஜி.ஆர். மீது தனி மதிப்பு வைத்திருப்பதை அவர்களின் பேட்டிகளின் வாயிலாக அறியலாம். எம்.ஜி.ஆர். ஒரு போதும் கருணாநிதியை பெயர் சொல்லிப் பேசியது கிடையாது; தன் கட்சியினரும் பெயர் சொல்லக் கூடாது; அது மரியாதை கிடையாது கலைஞர் என்றே மேடையிலும் சட்டமன்றத்திலும் அவரைக் குறிப்பிட வேண்டும் என்று அன்புக்கட்டளை இட்டிருந்தார்.

எம்.ஜி.ஆருக்கு சினிமாவில் போட்டியாளராக விளங்கிய சிவாஜி கணேசனின் குடும்பத்தாரும் எம்.ஜி.ஆர் மீது மிகுந்த



மரியாதை வைத்திருந்தனர். சிவாஜியின் பிள்ளைகள் எம்.ஜி.ஆரை பெரியப்பா என்றே அழைத்தார்கள். இன்று வரை அப்படித்தான் குறிப்பிடுகிறார்கள். சிவாஜி கணேசன் தன் வீட்டில் தன் தாயாருக்கு சிலை எடுத்த போதும், தஞ்சாவூரில் திரையரங்கம் கட்டிய போதும் எம்.ஜி.ஆரை அழைத்து தான் அவற்றைத் திறந்து வைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

எம்.ஜி.ஆர் கொள்கை ரீதியாக முரண்பட்டிருந்தாலும் தனிப்பட்ட முறையில் அனைவர் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார். இதனால் அவருக்கு பகை, வன்மம் பழி வாங்குதல், துரோகம் என்ற எண்ணங்கள் ஏற்படவே இல்லை. அதற்கான சூழ்நிலையை அவர் ஏற்படுத்தவில்லை. அவர் மனதில் இருந்த அன்பு, இரக்கம், கருணை ஆகிய நற்குணங்கள் அவர் முகத்திலும் பிரதிபலித்தது. அவர் முகத்தில் ஆயிரம் கோடி சூரிய பிரகாசம் என்ற வர்ணனைக்கு நிகரான தேஜஸ் காணப்பட்டது. அவர் மனதில் இருள் இல்லாமல் ஒளி இருந்தது. அவரது அக ஒளி முக ஒளியாக பிரகாசித்தது. அவருடைய சிரிப்பும் அகமும் முகமும் மலர்ந்த சிரிப்பாக விளங்கியது. அவரது முக ஒளியும் வசீகரமும் மலர்ச்சியான சிரிப்பும் அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற கருத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்கின. அவரது உள்ளமும் அழகு, மனமும் அழகு, முகமும் அழகு. ‘அழகுக்கு எம்.ஜி.ஆர்.’ என சத்யராஜ் பேசிய வசனம் உண்மை ஆயிற்று. அவர் மனம் அழகாக இருந்தது தான் என்று மக்கள் நம்பினர்.

8. சமூகத்திலிருந்து பெற்றதை விட கொடுப்பது அதிகம்

தலைவன் என்பவன் கொடுத்து பழக வேண்டுமே தவிர தன் மக்களிடம் இருந்து தனக்காக எதையும் எடுத்து பழகக் கூடாது. அவன் மக்களை வாழ வைக்கும் தெய்வமாக இருக்க வேண்டும். மக்களிடம் இருந்து பறித்து தின்னும் அசுரனாக ஒட்டுண்ணியாக மாறிவிடக் கூடாது. தலைவனுக்குரிய சிறப்பு பண்புகளைப் பெற்றிருந்த எம்.ஜி.ஆர். தான் இச்சமூகத்தில் இருந்து எடுத்ததைக் காட்டிலும் அதிகமாகத் திருப்பிக் கொடுத்தார். தான் சம்பாதித்த அனைத்தையும்

மக்களுக்கு கொடுத்துவிட்டு போனார். தன் கடைசி நாட்களில் தன் தோட்டத்திலும், அலுவலகத்திலும் வேலை செய்பவர் ஒவ்வொருவரையும் அழைத்து அவர்கள் எத்தனை ஆண்டுகள் வேலை செய்கிறார்கள் அவர்களின் குடும்ப நிலைமை என்ன என்று விசாரித்து அவர்கள் அனைவருக்கும் பணம் வேலை வீடு என அவர்களின் தேவைக்கு ஏற்ப கொடுத்தார்.

எம்.ஜி.ஆரிடம் ஒரு முறை ஒரு நிருபர் இப்படி வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள் உங்களுக்கு என்று நீங்கள் எதையும் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டாமா என்று கேட்டார். அப்போது ‘எம்.ஜி.ஆர் நான் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் நாடகக் கம்பெனியில் ஏழு வயதில் நடிக்க வந்தேன். நான் இந்தக் கலைத்துறைக்கு வரும்போது எதையும் கொண்டு வரவில்லை. எனவே இங்கிருந்து சம்பாதித்த எதையும் நான் எடுத்துச் செல்ல விரும்பவில்லை. என்னுடைய ஆரோக்கியத்திற்கும் நிம்மதிக்கும் தேவையானது போக மீதி அனைத்தையும் நான் என்னை வாழ வைத்த இந்த மக்களுக்கே தர விரும்புகிறேன். ஏனென்றால் என் செல்வம் முழுக்க என்னுடைய ரசிகர்களிடம் இந்த மக்களிடமிருந்து நான் பெற்றவைதான்’ என்றார். இவ்வாறு நினைக்கவும் சொல்லவும் எம்.ஜி.ஆருக்கு பெருந்தன்மையான குணம் இருந்தது.

எம்.ஜி.ஆர் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார். ஆடம்பரமான வாழ்க்கையை வெறுத்தார். வசதியாக வாழ வேண்டும் ஆனால் ஆடம்பரமாக வாழ வேண்டிய அவசியமில்லை என்று ஒருமுறை அவர் ஏவிஎம் சரவணனுக்கு அறிவுரை கூறினார். அவர் வீட்டில் தரைக்கு பளிங்கோ கிரானைட்டோ கடைசிவரை அவர் பதிக்கவில்லை. லிப்ட் வைக்கவில்லை.அமெரிக்காவிலிருந்து சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நடந்து வந்த பிறகு வீட்டில் அவர் படிக்கட்டு ஏறக் கூடாது என்பதற்காக லிஃப்ட் வைத்தனர். அவர் மினரல் வாட்டர் அல்லது மெட்ரோ வாட்டர் எனப்படும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை வாங்கிக் குடித்தது கிடையாது. அவர் வீட்டுக் கிணற்றிலிருந்து தான் அவருக்கு குடிநீர் வந்தது.

எம்.ஜி.ஆர். தினமும் அவர் தன்னுடைய நீச்சல் குளத்தில் நீந்தி நல்ல உடற்பயிற்சி செய்து வந்தார். அங்கிருந்த நிலத்தில் பயிர் பச்சைகளை பயிரிட்டு விவசாய வேலைகளையும் பொழுதுபோக்காகச் செய்துவந்தார். அங்கு விளைந்த காய்கறி, அங்கு வளர்க்கப்பட்ட கோழி, காடை போன்றவை அங்கு கிடைத்த கழிவில் இருந்து தயாரிக்கப்பட்ட சாண எரிவாயு அடுப்புகளை மூலம் சமைக்கப்பட்டு அங்கு வந்தவர்களுக்கும் வீட்டில் உள்ளவர்களுக்கும் பரிமாறப்பட்டது.

ராமாவரம் தோட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணை முறை பின்பற்றப்பட்டது. எம்.ஜி.ஆரைப் பார்க்க வந்தவர்கள் அனைவரும் சாப்பிட்ட பிறகே அவரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். எனவே அவர் தன்னிடம் இருந்த அசையும் சொத்து, அசையாச் சொத்து என அனைத்தையும் மக்களுக்கே எழுதி வைத்தார். தான் எந்த ரசிகரின் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் டிக்கெட் பணத்திலிருந்து லட்சக்கணக்கில் சம்பளம் பெற்று பணக்காரராக வாழ்ந்து கொண்டிருக்கிறாரோ அந்தப் பணத்தையும் அவர் தன் ரசிகர்களுக்காகவும் தன்னைத் தேடி வந்த மக்களுக்காகவும் செலவிட்டார். அனைவரும் அவர் வீட்டில் சாப்பிட்டு மகிழ்ந்தனர். தன் வீட்டுக்கு வந்தவர்கள் பசியோடு திரும்பக் கூடாது என்ற நல்ல நோக்கத்துடன் அவர் அனைவரையும் சாப்பிட வைத்தார். அதற்கு ஏற்ப தன் வீட்டில் ஒருங்கிணைந்த பண்ணை முறையை பின்பற்றினார். அங்கேயே மீன்கள் வளர்க்கப்பட்டன. ஆடு கோழிகள் வளர்க்கப்பட்ட, கீரை காய்கறிகள் வளர்க்கப்பட்டன. அடுப்புக்கு வேண்டிய சாண எரிவாயு தயாரானது. இவை தவிர பணியாளர்கள் அதிகமானோர் அங்கு இரவும் பகலும் எந்நேரமும் சமையல் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

தனது உயிலில் சத்யா ஸ்டூடியோவில் இருந்து வரும் வருமானம் கட்சிக்கும் கட்சி ஆபீஸ் செலவுக்கும் கொடுத்திருந்தார். தனக்கு வந்த பரிசுப் பொருட்களை எல்லாம் ஆற்காடு முதலி தெருவில் உள்ள வீட்டில் தனக்கு நினைவகம் அமைத்து அங்கு வைக்க வேண்டும் என்று உயிலில் எழுதியிருந்தார். அதன்படி இப்போதும் அங்கு

அவருடைய நினைவில்லம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தான் வாழ்ந்த ராமாவரம் தோட்டத்துக்கு பின்னால் உள்ள இடத்தில் காது கேட்காத, வாய் பேச இயலாதவர்களுக்கு ஓர் இல்லம் அமைத்து அங்கேயே அவர்கள் தங்கி படிக்க உண்டுறைவிடப் பள்ளியைத் தொடங்க வேண்டும் என்று உயில் எழுதி இருந்தார். அதுவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எம்.ஜி.ஆர். தன் வீட்டில் வளர்ந்து வந்த தனது வளர்ப்பு மகன் அப்பு மற்றும் பெண் குழந்தைகளை அந்த வீட்டிற்கு உரிமை உடையவர்களாக்கி தன் வளர்ப்பு மகனின் மனைவி நிம்மி என்ற நிர்மலா தன் வளர்ப்பு மகள் ராதா, ஜானகி அம்மாவின் அண்ணன் பிள்ளைகள் ஜானு, சுதா, கீதா ஆகிய 3 பேர் என ஐந்து பெண்களுக்கும் அவர்கள் வளர்ந்த வீட்டில் உரிமை அளித்திருந்தார். யாருக்கும் விற்கவோ உள் வாடகைக்கு விடவோ அனுமதி கிடையாது. அவர்கள் அந்த வீட்டை சுவாதீனமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று உயில் எழுதி வைத்திருந்தார். ஆக தன் கட்சிக்கும், வாய் பேச காது கேளாதோர் பள்ளிக்கும், நினைவில்லத்துக்கும் பராமரிப்புச் செலவுக்கு தேவையான சொத்துக்களை அவர் பிரித்துக் கொடுத்து விட்டு மறைந்தார். அரசியலில் இறங்கிய அவர் கட்சி தொடங்கி கட்சியையும் ஆட்சியையும் வைத்தும் தன்னுடைய முதலமைச்சர் பதவியை வைத்தும் அவர் எதையும் தனக்காக சம்பாதிக்கவில்லை. சம்பாதித்து ஒதுக்கி வைத்து தனக்கு வேண்டியவர்களுக்கு பதுக்கிக் கொடுக்கவும் இல்லை. தான் வாழ்ந்த காலத்தில் தன்னிடம் வந்தவர்களுக்கு இருந்ததை எடுத்துக் கொடுத்தார். தான் இறந்த பிறகு தன்னுடைய சொத்துக்களை தன் கட்சிக்கும் மக்களுக்கும் எழுதி வைத்தார். எனவே இவர் மக்களிடமிருந்து எடுத்ததை விட அதிகமாக அவர்களுக்கு திருப்பி செய்திருக்கிறார்.

9. புதுமை மற்றும் படைப்பாற்றல்

ஒரு நல்ல தலைவன் பழமை விரும்பியாக மட்டுமே இருந்து விட முடியாது . அவன்

பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகை யினானே

என்ற நன்னூலின் கருத்துக்கு ஏற்ப, பழமையை நீக்கியும் புதுமைக்கு வழி விட்டும் மக்களை வழி நடத்த வேண்டும் எம்.ஜி.ஆர். எப்போதும் தனது வாழ்வில் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக இருந்து வந்தார். தேவையான பழைய விஷயங்களை மக்களிடம் தனது படங்கள் மற்றும் அரசியல் மேடைகள் வாயிலாகப் புகுத்தினார். தேவையான புதிய விஷயங்களையும் அவற்றுடன் சேர்த்துக் கொண்டார். பழமையும், புதுமையும் இணைந்த படைப்பாற்றல் எம்.ஜி.ஆருக்கு பெரிய வெற்றியை இரு துறைகளிலும் அளித்தது.

எம்.ஜி.ஆரின் திரையுலக வெற்றிக்கு முக்கிய காரணம் அவரிடம் இருந்த அதீத படைப்பாற்றல் எனலாம். ஒவ்வொரு படத்திலும் அவர் பாட்டு காட்சிகளை புதுமையாக வைக்க வேண்டும். வசனங்களில் புதுமை இருக்க வேண்டும் காட்சியமைப்புகளில் ஆடல் பாடல் காட்சிகளில் உடை வடிவமைப்பதில், தலையலங்காரம் வடிவமைப்பதில் கோட் சூட் பெல்ட் காலணி போன்றவற்றில் புதிய புதிய டிசைன்களை பயன்படுத்தினார். அவருடைய ஒரு புகைப்படத்தை பார்த்த உடனேயே அவரது ரசிகர்கள் இந்த தலைமுடி அலங்காரம் இருந்தால் இது இன்ன படம் என்று சொல்லி விடுவார்கள். இந்த உடை போட்டிருந்தால் அது இன்ன படம் என்று சொல்லி விடுவார்கள். இந்த பெல்ட் இந்த படத்தில்தான் அவர் அணிவார் என்று சொல்லிவிடுவார்கள். அவர் தான் பயன்படுத்திய பொருட்களை ரசிகர்கள் கண்களை கவரும் வகையில் தேர்ந்தெடுத்து பயன்படுத்தியிருந்தார். அவருடைய உடை, தலை அலங்காரம், கிரீடம், தொப்பி போன்றவை கூட அவருடைய ரசிகர்கள் நெஞ்சில் நீங்காமல் நிறைந்திருப்பதால் அவற்றையும் அவர்கள் மறக்கவில்லை.

பாடல் காட்சிகளில் வரும் நடனங்கள் மிகுந்த கற்பனைத் திறனுடன் புதுமையாக படைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக

குடியிருந்த கோயில் படத்தில் ஒரு பாங்க்ரா நடனம் ஒரு மாடுபிடி நடனம், ஒரு கனவுக் காட்சி என ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு விதமாக எடுக்கப்பட்டிருக்கும். கனவுக் காட்சியில் வரும் பாடல்களில் ஆடை அலங்காரங்கள் சற்று வித்தியாசமாக அன்றாட நடைமுறையில் இல்லாதபடி கனவில் மட்டும் சஞ்சரிக்கக்கூடிய அவர்களின் கற்பனையில் வரும் உடைகளாகத் தைக்கப்படும். சில படங்களில் மன்னர் காலத்து உடைகளாக சில படங்களில், வெளிநாட்டவர் உடுத்தும் உடைகளாக புதிய முறையில் வடிவமைக்கப் பட்டிருக்கும்.

எம்.ஜி.ஆர். படங்களில் இசையமைப்பாளர்களைக் கொண்டு மெட்டுக்கள் போடப்பட்டு பாட்டுகள் எழுதப்பட்டு இசை அமைப்பும் புதிதாக அமைந்திருக்கும். காவல்காரன் படத்தில் வரும் 'நினைத்தேன் வந்தாய் நூறு வயது' பாட்டையும் அடிமைப்பெண் படத்தில் வரும் 'ஏமாற்றாதே ஏமாறாதே' பாட்டையும் இங்கு நாம் நினைவு கூறலாம்.

எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது ஆட்சியில் சில புதுமைகளைப் புகுத்தினார். முறைசாரா தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கும் நெசவாளர், விவசாயி போன்றோருக்கும் சங்கங்கள் அமைத்து கொடுத்து அவர்களின் தொழில் சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்தார். அனைத்து குழந்தைகளுக்கும் உணவு அனைத்து மாணவர்களுக்கும் மேல்நிலைக் கல்வி என குழந்தைகளையும் மனபலம், உடல் பலம், மூளை பலம் ஆகியன சிறப்பாக அமையும்படி எம்.ஜி.ஆர். கவனித்துக் கொண்டார். எம்.ஜி.ஆர். நாட்டிற்கு பாதுகாவலாக இருக்கும் காவல் துறையின் மீது தனிக்கவனம் செலுத்தினார். அவர்களுக்கு ரேஷனில் உணவுப் பொருட்கள் கொடுத்தார். அவர்கள் நீண்ட காலம் காத்திருக்காமல் குறுகிய காலத்திலேயே பதவி உயர்வு கிடைக்க வழி செய்தார்.

சிறந்த தலைவருக்கு உரிய அனைத்து பண்புகளையும் பெற்றவராக எம்.ஜி.ஆர். விளங்கினார். அவரிடம் சிறு வயது முதல் தலைமைத்துவப் பண்புகள் மேலோங்கி இருந்தன. எம்.ஜி.ஆருக்கு மக்கள் மீதிருந்த அன்பும் பொறுப்புணர்ச்சியும் அவருக்கு தலைமைப்பொறுப்பை தங்கத் தட்டில் வைத்துக் கொடுத்தன.





காலத்தை வென்றவன் நீ

காவியமானவன் நீ

வேதனை தீர்த்தவன்

விழிகளில் நிறைந்தவன்

வெற்றி திருமகன் நீ நீ நீ

என பாட்டு வரிகளுக்குப் பொருத்தமாக அவர் தமிழர் வரலாற்றில் வெற்றித் திருமகனாக விளங்கிய தலைவர் ஆனார். இங்கு மட்டும் அல்லாது தமிழ் பேசும் மக்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் அவர்களின் உள்ளம் கவர்ந்த உத்தமத் தலைவராகப் போற்றப்படுகிறார். இன்றைக்கு எம்.ஜி.ஆர். உலகப் பேரவை அவரை உலக தமிழ் மக்களின் தலைவராக உயரத்தியுள்ளது. உலக நாடுகள் பலவற்றிலும் எம்.ஜி.ஆர். உலகப் பேரவை தொடங்கப்பட்டு அவரை உலகத் தலைவர்களில் ஒருவராகவும் தமிழினத் தலைவர்களில் சிறந்தவராகவும் பாராட்டி மகிழ்கிறது. இதனால் எம்.ஜி.ஆர். தான் வாழ்ந்த நாட்களில் பெற்ற புகழ் இன்று பன்மடங்காகி விட்டது.

2. எம்.ஜி.ஆர். படப்பாடல்கள் காட்டும் புது வாழ்வு

தொடக்கத்தில் திராவிட முன்னேற்ற கட்சியில் இருந்து அதனுடைய குரலாகவும் தமிழரின் பண்பாட்டு அம்சமாக விளங்கிய எம்.ஜி.ஆர். தனது படங்களில் அக்கட்சியின் ஆட்சி வந்தால் தமிழகம் சுபிட்சமாக விளங்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தினார். இக்கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் தன்னுடைய படங்களில் காட்சிகளையும் பாடல்களையும் அமைத்தார். மேலும் எம்.ஜி.ஆர். பண்பாட்டுச் சிறப்பு மிக்க தமிழனின் பண்பட்ட வாழ்க்கை பழக்கவழக்கம் போன்றவற்றின் அடையாளமாக தமிழ்ப் பாரம்பரியச் சின்னமாக இலட்சியத் தமிழரின் உருவமாக தன்னுடைய கதாபாத்திரங்களை அமைத்து கொண்டார்.

இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி

இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே

என்று பாரதிதாசன் பாடிய வரிகள் உண்மையாக இருந்த காலத்தில் வர்க்க பேதம் சாதிபேதம் ஆகியவற்றிலிருந்து ஏழை எளிய மனிதர்களை விடுவித்து ஒளிமிக்க நல்வாழ்வு அவர்களுக்கு இருக்கின்றது என்ற நம்பிக்கை ஊட்டியவை எம்.ஜி.ஆரின் படங்களும் பாடல்களும் ஆகும்.

காவல் தெய்வம் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். படம் பார்த்த மக்களுக்கு படம் பார்க்கும் நேரத்திலும் பார்த்துவிட்டு வந்த பிறகும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பும் நம்பிக்கையும் புத்துணர்ச்சியும் ஏற்பட்டது.

எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்கும்போது திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை ஏழைகளை இறைவன் கைவிட மாட்டான் போன்ற நம்பிக்கைகளை ஊட்டி வந்த தெய்வக் கதைகளைக் கேட்டது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது.

தெய்வம் நமக்குத் துணையடி பாப்பா - ஒரு

தீங்கு வரமாட்டாது பாப்பா

என்ற பாரதியாரின் பாடல் வரிகளைப் படிக்காத மக்கள் மனதிலும் எம்.ஜி.ஆர். நமக்கு துணை, அவர் நம்மோடு இருந்தால் ஒரு தீங்கும் வராது என்ற எண்ணத்தை உண்டாக்கி விட்டது. அவர் ஒரு காவல் தெய்வமாக மக்களால் கருதப்பட்டார். அனைத்து கடவுளரையும் வணங்கி வந்த போதும் விரக்தியும் வேதனையும் மட்டுமே கண்டு வந்த மக்களுக்கு கண்காணாத தெய்வத்துக்கு பதிலாக எம்.ஜி.ஆர். அவர்களுக்கு கண்கண்ட தெய்வமாகத் தோன்றினார். இந்நம்பிக்கை நாடோடி மன்னன் (1958) படத்தில் அவர் பேசிய

'என்னை நம்பாமல் கெட்டவர் நிறைய உண்டு நம்பி கெட்டவர் இன்று வரை இல்லை'

என்ற வசனத்தால் மக்கள் மனதில் பசுமரத்தாணியாக பதிந்து அவரை நம்பிக்கை நட்சத்திரமாக உயர்த்தி விட்டது.

இரட்சகர் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். படங்களைப் பார்த்து அவர்களுக்கு வாழ்வில் புதிய எதிர்காலம் உண்டு; புது வாழ்வு பிறக்கும்; புதிய சமுதாயம் மலரும்; இன்று இருக்கும் இன்னல்கள் தீரும் என்ற எண்ணம் ஆழமாக பதிந்தது. அவரது ஆட்சியில் இவை அனைத்தும் உண்மையாயிற்று. அனைத்துக் குழந்தைகளும் சத்துணவும் கல்வியறிவும் தொழிலறிவும் பெற்று வேலை வாய்ப்புப் பெற்றனர். இந்தியாவின் ஆரோக்கியம் மிக்க மாநிலமாக தமிழகம் உயர்ந்தது. உயர் கல்வியில் முதலிடம் பெற்றது. எனவே, எம்.ஜி.ஆர். இன்று மக்கள் மனதில் தெய்வமாக உயர்ந்துவிட்டார். அவருக்கு திருநின்றவூரில்

கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வருகின்றனர்.

எம்.ஜி.ஆர். இறந்த நாளில் இருந்து பிறந்த நாள் வரை [டிசம்பர் 24 முதல் ஜனவரி 17 வரை] விரதம் இருந்து இருமுடி கட்டி பாத யாத்திரை மேற்கொள்கின்றனர். எம்.ஜி.ஆர். சாமிக்கு நேர்ந்து கொண்டு கடன் தொல்லையில் இருந்து விடுபட்டதாகவும் குழந்தை இல்லாதவருக்கு குழந்தை பிறந்ததாகவும் எம்.ஜி.ஆர். பக்தர்களிடையே இந்த கோயிலைப் பற்றிய நம்பிக்கை பரவி வருகிறது. கோயிலில் உற்சவர் திரு உலா போன்றவையும் வாரந்தோறும் நடைபெறுகிறது. ஊர்மக்கள் திரு உலா வரும் உற்சவருக்கு தமது வீட்டு வாசலில் தேங்காய் பழம் வைத்து தீப தூப ஆராதனைகள் செய்து வழிபடுகின்றனர்.

புதிய வானம் புதிய பூமி

புதிய வானம் புதிய பூமி என்பது கிறித்தவத் திருமறையில் உள்ள ஒரு கருத்தாக்கம் ஆகும். இந்த உலகத்தின் இறுதி நாள் அதாவது நியாயத் தீர்ப்பு நாளன்று நல்லவர்களையும் கெட்டவர்களையும் தனித்தனியாக நிறுத்தி நல்லவர்களை மோட்சத்திற்கும் கெட்டவர்களை நரகத்துக்கும் அனுப்பிய பிறகு தூக்கம் மரணம் எல்லாம் ஒய்ந்து புதிய வானம் புதிய பூமி உண்டாகும் என்று திருமறையில் ஏசாயா, 2 பேதுரு, வெளிப்படுத்தல் விசேஷம் போன்ற அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ளது. இந்த புதிய பூமி இரட்சிக்கப்பட்ட மனிதர்கள் வாழும் பூமியாக இருக்கும்.

2.பேதுரு 3. 13 இல் 'அவருடைய வாக்குத் தத்தத்தின் படியே நீதி வாசமாய் இருக்கும்; புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம்' என்ற வசனம் நியாயத் தீர்ப்புக்குப் பின்பு உலகில் இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே வாழ்கின்ற புதிய பூமி உண்டாகும் எனத் தெரிவிக்கிறது. இக்கருத்தாக்கம் பழைய ஏற்பாட்டிலிருந்து புதிய ஏற்பாட்டில் உள்ள வெளிப்படுத்துதல் எனப்படும் கடைசி அதிகாரம் வரை இணைக்கின்ற ஒரு ஊடிழையாக இருக்கிறது.

புதிய பூமி என்பது புதிய வாழ்க்கை

எம்.ஜி.ஆர். இக்கருத்தை இன்னொரு வகையில் தனது படங்கள் மற்றும் பாடல்கள் மூலமாக மக்கள் மனதில் பதிய வைத்தார். மக்களுக்கு புது வாழ்வு பிறக்கும்; ஜாதி மத பேதங்களால் உண்டான இன்னல்களும் துயரங்களும் மறையும்' பகுத்தறிவு பகலவன் உதிப்பான்; அறிவு சார்ந்த நல்லுலகம் தோன்றும்; நீதியும் நேர்மையும் நல்லாட்சி புரியும் என்று ஒரு புதிய பூமியின் வருகையை அவரது பாடல்களும் படங்களும் தீர்க்கதரிசனமாக உரைத்தன. அவர் நடித்த புதிய பூமி (1968) என்ற திரைப்படத்தில் மூடநம்பிக்கையின்பால் சிக்கிச் சுழன்று கொண்டிருந்த கிராமத்து மக்களை விடுவித்து நல்ல மருத்துவ வசதி அளித்து அவர்களை ஆரோக்கியம் உள்ளவர்களாக, உடல்நலம் மற்றும் மனநலம் சிறந்தவர்களாக உருவாக்கும் டாக்டர் கதிரவன் என்ற கதாபாத்திரத்தை எம்.ஜி.ஆர். ஏற்று இருந்தார். கதிரவன் அந்த கிராமத்தில் படர்ந்திருந்த அறியாமை என்ற இருளை அகற்றினார். கதிரவனின் வரவால் அந்த கிராமம் புதிய பூமியாக மாறியது. இது நன்னம்பிக்கை ஊட்டிய படமாகும்.

தென்காசி இடைத் தேர்தல் நடந்தபோது அங்கு வேட்பாளராக இருந்த கதிரவனின் பெயரை அவருடைய வெற்றிக்காக எம்.ஜி.ஆர். தன்னுடைய பெயராக இப்படத்தில் சூட்டிக்கொண்டார். படமும் வெற்றி பெற்றது தேர்தலில் கதிரவனும் வெற்றி பெற்றார்.

நன்னம்பிக்கையால் உயர்ந்த தன்னம்பிக்கை

எம்.ஜி.ஆர். தனது ரசிகர்களுக்கு தனது படங்களின் மூலமாகக் காட்டிய புதிய பூமி துக்கமும் மரணமும் இல்லாத புதிய பூமி என்று கிறிஸ்தவ வேதத்தில் சொல்லியிருப்பது போல துக்கம் இல்லாத ஒரு புதிய பூமியாகத் தோன்றியது. புதிய வாழ்வு பிறக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு எம்.ஜி.ஆரால் வழங்கப்பட்டது இதனால் எம்.ஜி.ஆரை ஏழைமக்கள் மக்கள் தங்களின் நம்பிக்கை நட்சத்திரமாக மனதில் பதித்துக் கொண்டனர். இருள் நீங்கி விடிவுகாலம் பிறக்கும் என்ற எண்ணம் தோன்றியதால் அவர்கள் பட்ட

இன்னல்கள் அப்போது பெரிதாகத் தோன்றவில்லை. எனவே எம்.ஜி.ஆர். படம் பார்த்தவர்களுக்கு தற்கொலை எண்ணம் என்பதே வரவில்லை. எதிர்காலம் உண்டு என்ற நன்னம்பிக்கை ஆழமாக பதிந்ததால் தன்னம்பிக்கை உயர்ந்தது. இந்த நல்லெண்ணத்தை உறுதி செய்யும் வகையில் அவர் நடித்த படங்களில் அடுத்தடுத்து ஒவ்வொரு படத்திலும் அவர் வசனங்களையும் பாடல்களையும் வைத்து மக்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டிக் கொண்டே வந்தார். எம்.ஜி.ஆர். தனது ரசிகர்களை அன்று முதல் இன்று வரை எந்த நிலையிலும் மனத்தளர்ச்சி அடைய விடவில்லை. அதனால் தான் 1947இல் அவர் இராஜகுமாரியில் கதாநாயகனாகத் தோன்றிய காலம் முதல் இன்று 2019 வரை 72 ஆண்டுகளாகத் தமிழகத்தின் திரையரங்குகளில் எல்லா நாட்களும் எம்.ஜி.ஆரின் படங்கள் நல்ல இலாபத்துடன் ஓடிக்கொண்டிருக்கின்றன. எம்.ஜி.ஆர். படம் ஓடாத பெரிய ஊரே இல்லை நாளும் இல்லை என்ற நிலை இன்று வரை உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

1958ல் நாடோடி மன்னன் என்ற சொந்தப்படம் எடுத்து வெளியிட்ட எம்.ஜி.ஆர். அந்தப் படத்தில்

"காடு விளைஞ்சென்ன மச்சான் நமக்கு

கையும் காலும்தானே மிச்சம்"

என்ற ஒரு ஏழையின் கேள்வியைக் கேட்டு அதற்குப் பதிலளிக்கும்போது

"நாளை போடப்போறேன் சட்டம் மிக

நன்மை புரிந்திடும் திட்டம்

நாடு நலம் பெறும் திட்டம்"

என்றார். இந்த வரிகள் அன்றைக்குக் கேட்கும் போது ஒரு கதாபாத்திரத்தின் பாடல் வரிகளாக தோன்றினாலும் இருபது வருடங்களில் மக்களின் ஆதரவால் அவர்களின் நம்பிக்கையால் அவை உண்மையாகி அவரை முதலமைச்சராக்கும் நிலைக்கு ஏற்பட்டது.



திரைப்படப் படங்களின் கதாபாத்திரத்தாலும் பாடல்களாலும் மக்களின் ஏகோபித்த நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்ற எம்.ஜி.ஆர். 1977 இல் அவருடைய கட்சி ஆட்சிக்கு வந்ததில் மக்களின் எதிர்பார்ப்பு உண்மையாயிற்று. 1977 முதல் 1987 வரை அவரது இறுதி மூச்சு வரை மக்கள் அவரை முதல்வராக வைத்து இருந்தனர். நாடோடி மன்னனில் அவர் சொன்ன ‘நாளை போடப்போறேன் சட்டம்’ என்று எம்.ஜி.ஆர். பாடிய பாடல் வரி மக்களிடம் சென்று சேர்ந்தபோது அவர்கள் அந்த நாளை ஆவலோடு எதிர் பார்த்தார்கள். அவர்களுடைய நல்லெண்ணமும் நம்பிக்கையும் சேர்ந்து அந்த பாடல் வரியை உண்மையாக்குவதற்கு சுமார் இருபது ஆண்டுகள் ஆயிற்று, 1977 இல் அவர் முதலமைச்சராகி பத்து ஆண்டுகள் அவர் ஆயுள் பரியந்தம் முதல்வராகவே இருந்தார்.

3. அரசியலுக்கு வழிவகுத்த எம்.ஜி.ஆரின் முதல் பாடல்

பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும் என்றான் மகாகவி பாரதி. இவ்வார்த்தையை மெய்ப்பிக்கும் வகையில் தன்னுடைய பாடல்களால் இதயத்தை வசப்படுத்தியவர் எம்.ஜி.ஆர். எளிய சொற்கள் பயனுள்ள கருத்து இனிய இசை இம்மூன்றையும் சேர்த்து தேனிசை பாடல்களைத் தன் படங்களில் இடம் பெறச் செய்தவர் எம்.ஜி.ஆர். சிறு வயது முதல் சினிமாவுக்கு வரும் வரை அவர் நாடகக் கம்பெனிகளில் நடித்து வந்தார். அப்போது புராணக் கதாபாத்திரங்களில் பாடல்களைப் பாடுவது வழக்கமாக இருந்ததால் எம்.ஜி.ஆருக்கு இசை அறிவும் நுணுக்கமும் பாடல்வரிகளின் எளிமையும் கருத்தாழமும் அதன் ஆற்றலும் பற்றி நல்ல அறிவும் தேர்ச்சியும் இருந்தது. இசை மக்களின் இதயத்தைத் தொடும் அவர்களை ஆட்டுவிக்கும் ஊக்குவிக்கும் என்பதை அறிந்த எம்.ஜி.ஆர். இசைப் பாடல்களால் அவ்வாறே அமைத்து தன் ரசிகர்களின் இதயங்களை கவர்ந்தார்.

எம்.ஜி.ஆரே ஒரு கவிதை என்று பாராட்டிய அண்ணா

உலகத் தமிழ் மாநாட்டில் கவிதை என்னும் தலைப்பில் பேசிவிட்டு எம்.ஜி.ஆர். அமர்ந்த பின்பு அண்ணா பேசத் தொடங்கினார். “அதனை அறிந்தோர்க்கு அறிவிக்கும் போதிலே அறிந்ததுதான் என்றாலும் எத்துணை அழகம்மா என்று அறிந்தவரையும் வியக்க வைக்கும் அருங்கலையே

கவிதையாகும்'' என்று கவிதைக்கு விளக்கம் அளித்தார் அறிஞர் அண்ணா. மேலும் 'அழகும் உணர்ச்சியும் சேர்ந்தது தான் கவிதை என்று எம்.ஜி.ஆர். கூறினார். நீங்கள் கைதட்டினீர்கள். எதற்கு என்று யோசித்தேன். பிறகு தான் தெரிந்தது; அவர் தன்னைப் பற்றியே சொல்லியிருக்கிறார். ஆம். அழகும் உணர்ச்சியும் சேர்ந்த எம்.ஜி.ஆரே ஒரு கவிதை தானே'' என்றார் அண்ணா. மக்களின் கரகோஷம் விண்ணைப் பிளந்தது. அண்ணா எம்.ஜி.ஆரை கவிதையாக கண்டு ரசித்தார்.

வெற்றிப் படிக்கட்டில் முதல் பாடல்

அழகும் உணர்ச்சியும் சேர்ந்த கவிதையாக விளங்கிய எம்.ஜி.ஆர். தன் படத்திலும் அழகும் உணர்ச்சியும் சேர்ந்த கவிதைகளை பாடலாசிரியர்களிடம் இருந்து பெற்று ரசிகர்களுக்கு விருந்து அளித்தார். இசைப் பாடலின் ஆற்றலை



நன்கு உணர்ந்திருந்த எம்.ஜி.ஆருக்கு 1954 இல் வெளிவந்த மலைக்கள்ளன் படத்தில் இடம்பெற்ற

"எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே

சொந்த நாட்டிலே

நம் நாட்டிலே"

என்ற பாடல் அரசியலுக்கு அடித்தளம் இட்டது. எம்.ஜி.ஆர். படத்தில் இப்பாடலைப் பாடி நடித்ததும் அப்பாடல் மக்களிடையே பெற்ற வரவேற்பை அதன் செல்வாக்கை எம்.ஜி.ஆர். நுட்பமாக உணர்ந்து கொண்டார். மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர்; மாற்றத்தைக் கொண்டுவருவார் எம்.ஜி.ஆர். என்று நம்பினர். இந்த நம்பிக்கையை எம்.ஜி.ஆர். இன்னும் வலுப்படுத்தும் வகையில் தக்க வைக்கும் வகையில் அடுத்தடுத்த படங்களில் இது போன்ற நல்ல தத்துவப் பாடல்களை பாடல் ஆசிரியரிடம் கேட்டு எழுதி வாங்கி இசையமைப்பாளரிடம் அதற்கு மெட்டு போடச்செய்தார்.

முழு நிறைவு பெறுவதில் கவனம் வைத்த எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். தனது பாடலுக்கு எந்த மெட்டு போட்டாலும் சரி என்று அமைதி அடைபவர் அல்ல. 60 அல்லது 70 மெட்டுக்கள் போட்டுக் கொண்டு வந்தாலும் கூட அவற்றைப் பொறுமையோடு கேட்டு அவை சரியில்லை தனக்கு மன நிறைவைத் தரவில்லை என்று உணர்ந்தால் இசையமைப்பாளரிடம் தயவு தாட்சண்யம் பார்க்காமல் வேறு மெட்டுப் போட்டுக் கொண்டு வாருங்கள் என்று சொல்லி விடுவார். ஒரு முறை எம் எஸ் வி கோபித்துக்கொண்டு தன் ஆர்மோனியப் பெட்டியை தனது காரில் வைத்து எம்.ஜி.ஆர். வசித்த ராமாவரம் தோட்டத்துக்கே அனுப்பிவிட்டார். அவரையே மெட்டு போடசொல்லுங்கள் என்றார். ஆனால் இதெற்கெல்லாம் சளைத்தவர் அல்ல எம்.ஜி.ஆர். திரும்பவும் எம் எஸ் வியைக் கொண்டு தான் அப்படத்தை முடித்தார். கோபிப்பவர் யாராக இருந்தாலும் நேரில் அழைத்துப் பேசி சமாதானம் செய்துவிடும் ராஜ வசியம் படைத்தவர் எம்.ஜி.ஆர். என்று திரையுலகினர் நம்பினர்.

எம்.ஜி.ஆருக்கு பாட்டின் நிறைவான வடிவம் தான் முக்கியமே தவிர இசையமைப்பாளரும் பாடலாசிரியரும் 'இவ்வளவு உழைத்திருக்கிறார்களே அவர்களுடைய உழைப்பை நாம் உதாசீனப்படுத்துகிறோம்' என்று அவர் ஒருபோதும் நினைத்துக் கவலைப் படுவதில்லை. சுரங்கத்தைத் தோண்டி தங்கம் எடுப்பது போல திறமையாளர்கள் இடமிருந்து மிக நல்ல பாடல்களை வரவழைத்தவர் எம்.ஜி.ஆர். உலகம் சுற்றும் வாலிபன் படத்துக்கு இசை அமைத்ததில் சற்று மன வருத்தம் ஏற்பட்ட எம் எஸ் விஸ்வநாதனுக்கு விநியோகஸ்தர்கள் அந்த படத்தை வாங்க வந்தபோது 'உங்களின் பாராட்டு அனைத்துக்கும் சொந்தக்காரர் இதோ வருகிறார்' என்று சொல்லி எம்எஸ் விஸ்வநாதனை அங்கு வரவழைத்துக் காட்டினார். வினியோகஸ்தர்கள் அவருக்குப் பெரிய மாலை அணிவித்து பாராட்டும்படி செய்தார்.

வெற்றியைப் பகிர்ந்தளித்த எம்.ஜி.ஆர்.

பாட்டின் வெற்றி படத்தின் வெற்றி என வெற்றிகள் குவியும் போது அதற்கு சொந்தக்காரன் தான் மட்டும் இல்லை என்பதை உணர்ந்திருந்த எம்.ஜி.ஆர். அந்த வெற்றியை மற்றவர்களுக்கும் பகிர்ந்து பாராட்டுவதில் தாராள மனம் படைத்தவராக இருந்தார். இப்படத்திற்கு எம்.ஜி.ஆர். 50 ஆயிரம் ரூபாய் எம்எஸ் விஸ்வநாதனுக்கு வழங்கினார் இத்தொகை அவர் இதற்கு முன்பு எந்தப் படத்துக்கும் பெறாத பெரும் தொகை ஆகும். எம்.ஜி.ஆர். படத்தில் ஐந்து மடங்கு பத்து மடங்கு வேலையும் அதிகம் இருக்கும்; அதற்கேற்ப ஊதியமும் புகழும் கிடைக்கும். எனவே மற்ற படங்களில் வேலை பார்ப்பதை விட எம்.ஜி.ஆர். படங்களுக்கு பாட்டு எழுதவும் இசை அமைக்கவும் பலரும் முன்னுரிமை கொடுத்தனர். எம்.ஜி.ஆர். படம் ஒன்றில் வேளை செய்துவிட்டால் அதற்குப் பிறகு மளமளவென்று பட வாய்ப்புக்கள் அவர்களுக்கு குவியும். எனிவே எல்லோரும் எம்.ஜி.ஆர். படத்தில் சிறிய

கதாபாத்திரத்தில் அல்லது ஒரு பாட்டிலாவது தலை காட்ட விரும்பினர்.

ஒரு பாட்டு போட்ட ராஜபாட்டை

மலைக்கள்ளன் படத்தில் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் பாடலுக்கு இருந்த வரவேற்பை பார்த்து எம்.ஜி.ஆர். மக்களின் அதிருப்தியை பாடலாக கொண்டுவந்து அவர்கள் முன்பு பாடிக் காட்டும்போது அவர்கள் தாமே அந்த கதாபாத்திரமாக மாறி அந்தப் பாட்டை பாடுவதாகக் கற்பனை செய்து மகிழ்ந்து போகின்றனர். அவர்களுக்குள் இருந்த ஏக்கமும் வேதனையும் தணிந்து போகிறது. படம் பார்க்கும் ரசிகர்கள் ஒவ்வொருவரும் ஒரு எம்.ஜி.ஆராக மாறிவிடுகின்றனர். இது படத்துக்கு மிகப்பெரிய வெற்றியை அளிக்கின்றது. எம்.ஜி.ஆருக்கும் மக்கள் மனதில் பெரிய செல்வாக்கை ஏற்படுத்தியது. இந்த நுட்பத்தை உணர்ந்து எம்.ஜி.ஆர். மீண்டும் மீண்டும் தன் படத்தில் தன் படம்பார்க்க வரும் ரசிகர்களைத் தன்னைப் போல் ஒரு வீரமிக்கவனாக விளைவு சார்ந்த ஒரு கதாநாயகனாக ஒரு ஹீரோவாக மாற்றப் பார்க்கிறார். தங்களுக்குள் ஏற்படும் ஊக்கமும் உற்சாகமும் எம்.ஜி.ஆர். படம் பார்க்க வந்த ரசிகர்களுக்கு தங்களின் அன்றாட பிரச்சினைகளை சந்திக்கவும் சமாளிக்கவும் துணை நின்றது.

எம்.ஜி.ஆரை போல வாழும் எம்.ஜி.ஆர். ரசிகர்கள்

கள ஆய்வில் சந்தித்த ஒரு எம்.ஜி.ஆர். ரசிகர் மிகவும் நேர்மையானவர் அநீதி நடைபெற்றால் கொதித்து எழும் குணம் கொண்டவர். இதனால் பலருடைய கோபத்துக்கு ஆளானார். ஆனாலும் தனது குணத்தை இவர் மாற்றிக்கொள்ளவில்லை. ஏனென்றால் இவர் சிறு குழந்தையாக இருக்கும் போது இவரது பாட்டி இவரை எம்.ஜி.ஆரிடம் கொண்டு போய் கொடுத்தார். எம்.ஜி.ஆரும் முத்தம் கொடுத்து குழந்தையைத் திருப்பி கொடுத்தார். சிறு வயது முதல் இவர் பாட்டி இவருக்கு எம்.ஜி.ஆர். படங்களைக் காட்டி இவரைப் போல நீ நல்லவனாக வல்லவனாக இருக்க வேண்டும் என்று சொல்லி

வளர்த்திருக்கிறார். அதனால் இவர் ஒரு எம்.ஜி.ஆராகவே வளர்ந்திருக்கிறார். இன்றும் அப்படியே இருக்கிறார். மற்றவர்களின் கோபம் மற்றும் வெறுப்பு கண்டு வருந்துவதில்லை என்றார். இது தான் எம்.ஜி.ஆர். தன் ரசிகர்களிடம் எதிர்பார்த்த சமுக அக்கறை மற்றும் சேவை அவர்களும் அப்படியே வளர்ந்தனர். இன்றும் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்கள் சமூக சேவையில் முன்னணியில் இருக்கின்றன. எம்.ஜி.ஆர். தனது ரசிகர் மன்ற மாநாட்டில் இக்கருத்தை வலியுறுத்தினார். ரசிகர்களும் அதனையே பின்பற்றுகின்றனர்.

அரசியலுக்கு அடிக்கல் நாட்டிய பாடல்

'எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே' என்ற பாடலில் தோன்றிய ஈர்ப்பினால் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் ஒவ்வொருவரும் தங்களை ஒரு எம்.ஜி.ஆராகக் கருதி எம்.ஜி.ஆர். படப் பாடல்களைப் பாடி மகிழ்ந்தனர். அப்பாடல்களை இன்று வரை தம்முடையதாக்கிக் கொண்டனர். 1954 முதல் 2019 வரை கடந்த 65 ஆண்டுகளாக இப்பாடலை எம்.ஜி.ஆர். ரசிகர்கள் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பாடியும் கேட்டும் மகிழ்ந்து கொண்டாடுகின்றனர். மற்றவர்களும் கேட்கும்போது இப்பாடலின் கருத்தை ஏற்றுக்கொண்டு ஆமோதிக்கின்றனர்.

பட்சிராஜா பிக்சர்ஸாரின் மலைக்கள்ளன் படத்தில் வந்த எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே என்ற பாடலில்

"ஊரெங்கும் பள்ளிகள் கட்டுவோம்

கல்வியில்லாத பேரே இல்லாமல் செய்வோம்

கணக்காக பல தொழில் பயிலுவோம்

கஞ்சிக்கில்லை என்னும் சொல்லினை மாற்றுவோம்"

என்று எம்.ஜி.ஆர். பாடியபோது இதுதான் நம்முடைய தேவை. இவை நடந்தால் நமக்கு நல்லதொரு வாழ்வு

அமையும் என்று மக்களும் எம்.ஜி.ஆரோடு இணைந்து சிந்தித்தனர்.

கல்வி கிடைப்பதில் இருந்த சிக்கல்

வெள்ளைக்காரர்களின் வரவுக்குப் பின்னர் கல்வி ஒன்றே அறியாமை என்னும் இருளை அகற்றும் என்பதை மக்கள் உணர்ந்தனர். காரணம் கல்வி என்பது அப்போது பார்ப்பனருக்கு மட்டுமே உரியதாக இருந்தது. சில உ.வே. சாமிநாதையர் போன்ற பார்ப்பனர்கள் அபிராமணருக்கு [பிராமணர் அல்லாதவர்] கல்வி கற்பிப்பது இல்லை என்ற முடிவுடன் இருந்தனர். எனவே பிராமணரல்லாதவருக்கு கல்வி என்பது எட்டாக்கனியாக இருந்தது. எம்.ஜி.ஆர். தன் பாடலில்

"ஊரெங்கும் பள்ளிகள் கட்டுவோம்

கல்வி இல்லாத பேரே இல்லாமல் செய்வோம்"

என்று பாடியதும் அனைவருக்கும் கல்வி கிடைக்கும் என்ற நிலை ஏற்படும்போது பிராமணருக்கு சமமான நிலையை மற்றவர்களும் அடைந்துவிட்டோம் என்ற பெருமித உணர்வைப் பெற்றனர்.

கல்வி கிடைத்துவிட்டால் மனதின் இருள் ஒழிந்துவிடும்; சமூகத்தில் கவுரவம் உயரும்; மற்றவர்கள் மதிப்பார்கள்; வேலை கிடைக்கும்; நல்ல அந்தஸ்து உள்ளவர்களாக கௌரவமாக சமூகத்தில் வாழ முடியும். இவை அனைத்திற்கும் கல்வியே பிரதானம் என்பதால் கல்விக்காக மக்கள் ஏங்கிக் கிடந்த காலம் அது.

கிறிஸ்தவப் பள்ளிகளில் கல்வி எல்லோருக்கும் பொதுவாக இருந்தாலும் கிறிஸ்தவராக மதம் மாறியவர்கள் மேலும் சில சலுகைகளை அங்கு அனுபவித்தனர். மதம் மாற்றி விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகவும் கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களுக்கு சிலர் தம் பிள்ளைகளை அனுப்ப மறுத்தனர். இதனால் பணம் கொடுத்து படிக்க வைக்க முடியும் என்று வசதி படைத்தவர்கள் கூட தங்கள்

பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாத ஒரு சூழ்நிலையில் இருந்தனர். எம்.ஜி.ஆர். இந்த நிலையை மாற்றுவேன் என்று பாடியதும் மக்கள் அகமகிழ்ந்து எம்.ஜி.ஆரின் பின்பு மகுடிக்கு கட்டுண்ட நாகம் போல மயங்கிக் கிடந்தனர். மலைக்கள்ளன் பாடல் பெற்ற வரவேற்பைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர். எளிய மனிதர்களின் மன வேதனையை எதிர்பார்ப்பை புலப்படுத்தும் பாடல்களை தன் படத்தில் தொடர்ந்து வைக்கத் தொடங்கினார்.

இன்னும் பல..

மகாதேவியில் 'தாயத்து தாயத்து', மதுரை வீரனில் 'ஏச்சு பிழைக்கும் பிழைப்பே சரிதானா எண்ணிப் பாருங்க', தாய்க்கு பின் தாரத்தில் 'மனுசனை மனுஷன் சாப்பிடுறாண்டா தம்பிப்



பயலே', நாடோடி மன்னனில் 'காடு வெளைஞ்சென்ன மச்சான் நமக்கு கையும் காலும் தானே மிச்சம்', மன்னாதி மன்னனில் 'அச்சம் என்பது மடமையடா', ஆசை முகத்தில் 'எத்தனை பெரிய மனிதருக்கு எத்தனை சிறிய அறிவிருக்கு, எங்க வீட்டு பிள்ளையில் 'நான் ஆணையிட்டால்' வேட்டைக்காரனில் 'உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால்',

ஒளி விளக்கில் 'நாங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடி தானுங்க', அரச கட்டளையில் 'ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை', புதிய பூமியில் 'நான் உங்கள் வீட்டுப் பிள்ளை', அடிமைப்பெண்ணில் 'உன்னை பார்த்து இந்த உலகம் சிரிக்கிறது', நம் நாட்டில் 'வாங்கய்யா வாத்தியாரைய்யா',

நாளை நமதேயில் 'நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்', நேற்று இன்று நாளையில் 'தம்பி நான் படிச்சேன் காஞ்சியிலே நேத்து',

உழைக்கும் கரங்களில் 'நாளை உலகை ஆள வேண்டும் உழைக்கும் கரங்களே', மீனவ நண்பனில் 'நேருக்கு நேராய்



வரட்டும் நெஞ்சில் துணிவிருந்தால்', மற்றும் மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனில் 'வீர மகன் போராட வெற்றி மகள் பூச்சூட' போன்ற பல பாடல்கள் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வருவதற்கு சிவப்பு கம்பளம் விரித்தன. படத்துக்கு ஒரு பாடல் என எம்.ஜி.ஆர். தனது ஆதரவு பாடல்களை அமைத்தார். அவை ரசிகர்களிடம் ஆற்றல் மிகு பணியை செவ்வனே செய்து முடித்தன. அவை காலத்தால் அழியாத பாடல்களாக இன்றும் நிலைத்து நிற்கின்றன.













4. பாடல்களை எழுதி வாங்கிய வாத்தியார்

எம்.ஜி.ஆர். தன் படத்துக்குப் பாடல்களை எழுதி வாங்கும் போது அவற்றில் அவருக்கு உடன்பாடு இல்லாத சொற்களையும் தொடர்களையும் நீக்கும் படி சொல்லி விடுவார். தனக்கு உகந்தவற்றை சேர்க்கவும் கூறுவார். ஒரு முறை கண்ணதாசனிடம் சிலர் 'வாத்தியார் வாத்தியார் என்று அவரை அழைக்கின்றார்களே, அவர் எந்தப் பள்ளிக்கூடத்தில் வாத்தியார்?' என்று ஏளனமாக கேட்டார்கள். அப்போது கண்ணதாசன் 'அவர் நான் எழுதிய பாடல்களில் கூட சிவப்பு மையால் திருத்திய வாத்தியார்' என்று பெருமையோடு குறிப்பிட்டார். இவ்வாறு பாடலாசிரியர்களோடு எம்.ஜி.ஆருக்கு இருந்த நெருக்கமான அன்பான பிணைப்பு பற்றிய சில நிகழ்வுகளை இக்கட்டுரையில் காண்போம்.

சிரித்து சிரித்து..

1960களில் கண்ணதாசனுக்கு மிகப்பெரிய கிராக்கி இருந்த காரணத்தால் அவரை அழைத்துப் பாடல் எழுத செய்வது சிரமமான காரியமாக இருந்தது. ஒரு நாள் எம்.ஜி.ஆர். அவரை அழைத்துவரச் செய்து 'ஒரு பாடல் வேண்டும் உடனடியாக எழுதி தர வேண்டும்' என்று கேட்டார். அப்போது கண்ணதாசன் தான் வேறு ஒரு பட நிறுவனத்திற்கு பாடல் எழுதச் செல்ல வேண்டுமே என்று தயங்கினார். எம்.ஜி.ஆர். சிரித்தபடி 'இன்று நீங்கள் பாடல் எழுதி தராவிட்டால் உங்களை விட மாட்டேன்' என்று சொல்லி ஒரு அறைக்குள் அழைத்துக் கொண்டு போய் அடைத்து விட்டார். ஒரு பத்து



நிமிடம் கழித்து கதவைத் தட்டிய கண்ணதாசன் பாடல் எழுதிய தாளை எம்.ஜி.ஆரிடம் நீட்டினார் அந்தத் தாளில்

"சிரித்து சிரித்து என்னைச் சிறையிலிட்டாய் கன்னம்

சிவக்க சிவக்க வந்து கதை படித்தாய்" 'என்ற காதல் பாடல் எழுதப் பட்டிருந்தது. உடனே இப்பாடலை ஒலிப்பதிவு செய்து கடற்கரைச் சாலையில் எம்.ஜி.ஆர். சரோஜாதேவி காரில் செல்வதாக படப்பிடிப்பை விரைந்து நடத்தி முடித்தனர். இப்பாடல் இன்றுவரை இளைஞர்களிடம் எம்.ஜி.ஆர். ரசிகர்களிடம் மிகுந்த வரவேற்பு பெற்ற பாடலாகத் திகழ்கிறது. எளிமையான சொற்களில் இனிமையான கருத்துக்களை எடுத்துரைக்கும் பாடல் இது. காதலர்களுக்கு இடையிலான உரையாடல் போல் அமைந்தாலும் கருத்துள்ள பாடல் ஆகும்.

"இன்பம் துன்பம் எது வந்தாலும்

இருவர் நிலையும் ஒன்றே

எளிமை பெருமை எதுவந்தாலும்

இருவர் வழியும் ஒன்றே"

என்ற பல்லவி வாழ்க்கையின் தத்துவத்தை காதலின் மகத்துவத்தை எடுத்துரைக்கும் எளிய பல்லவி ஆகும்.

“இரவும் பகலும் அருகில் இருந்தால்

வரவும் செலவும் ஒன்றே”

என்ற வரிகள் காதலும் காமமும் இணைந்த சுவையான வரிகளாகும்.

நான் ஆணையிட்டால்

இந்திய திரையரங்குகளில் பெரு வரவேற்பை பெற்ற பாடலான

“நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்

இங்கு ஏழைகள் வேதனைப்பட மாட்டார்”

என்ற பாட்டு எம்.ஜி.ஆரின் அரசியல் வருகைக்கு வரவேற்பிதழ் வாசித்த பாடல் ஆகும். கவிஞர் வாலி எங்க வீட்டுப் பிள்ளை *(1965)* படத்துக்குப் பாடல் எழுதிய போது எம்.ஜி.ஆர். அந்தப் பாட்டின் பல்லவியை முற்றிலுமாக



மாற்றும்படி கூறினார். ஏனென்றால் வாலி நான் அரசனானால் என்று எழுதியிருந்தார். இந்தத் தொடர் ஏறத்தாழ *if i were a king* என்ற நாடோடி மன்னன் படத்தின் மூலப்படமான ஆங்கிலப் படத் தொடரின் தமிழாக்கமாக அமைந்திருந்தது. ஆனால் எம்.ஜி.ஆர். மக்களாட்சி நடக்கும் இக்காலகட்டத்தில் 'மன்னனானால்' 'அரசனானால்' என்பது பொருந்தாக் கூற்றாக இருக்கின்றது. எனவே இதனை நீக்கி விடுங்கள் என்றார்.

தன் வழி நல்ல வழியாக இருக்கலாம்

மருதகாசி எம்.ஜி.ஆரின் பல படங்களுக்குப் பாடல்கள் எழுதினார். அவருடைய பாடல்கள் இலக்கிய நயம் சொட்ட சொட்ட எழுதப்பட்ட சுவையான பாடல்களாகும். அண்ணா திமுக ஆரம்பித்த பிறகு எம்.ஜி.ஆர். தனது படங்களில் திமுகவின் அராஜகத்தை வெளிவேஷத்தைச் சுட்டிக்காட்டும் பாடல்களை அமைத்தார். அதற்காக அவர் திறமையான கவிஞர்களைப் பயன்படுத்திக் கொண்டார். செந்தமிழ்க் கவிஞர்களான நா. காமராசன், புலமைப்பித்தன், முத்துலிங்கம் போன்றோருக்கு எம்.ஜி.ஆர். அப்போது நிறைய வாய்ப்புகள் அளித்தார். நினைத்ததை முடிப்பவன் (1975) படத்துக்கு மருதகாசி எழுதிய



"கண்ணை நம்பாதே உன்னை ஏமாற்றும்

நீ காணும் தோற்றம் உண்மை இல்லாதது

அறிவை நீ நம்பு, உள்ளம் தெளிவாகும்

அடையாளம் காட்டும், பொய்யே சொல்லாதது"

என்ற பல்லவியுடன் தொடங்கும் பாடலில்

"பொன் பொருளை கண்டவுடன் வந்த வழி மறந்து விட்டு

தன் வழியே போகிறவர் போகட்டுமே"

என்று மருதகாசி எழுதியிருந்தார். எம்.ஜி.ஆர் அதை வாசித்துப் பார்த்து விட்டு 'தன் வழி என்பது நல்ல வழியாக இருந்தால் எவரொருவரும் அவ்வழியைப் பின்பற்றி போகலாம் அல்லவா அது சரி தானே. இங்கு இந்தப் பாடலில் நாம் சுட்ட விரும்புவது அது அல்ல. வந்த வழி மறந்து விட்டு அறிவிழந்து நன்றி கெட்டுப்போகின்றவர்களைப் பற்றித்தான் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். எனவே இந்த வரியை மாற்றுங்கள்' என்று குறிப்பிட மருதகாசி வியந்து போய் விட்டார். இவ்வளவு நுணுக்கமாக எம்.ஜி.ஆர் ஒவ்வொரு வார்த்தையையும் ஆராய்கின்றார் என்று நினைத்த பாடலாசிரியர் "வந்த வழி மறந்து விட்டு கண் மூடி போகிறவர் போகட்டுமே" என்று மாற்றிக் கொடுத்தார். எம்.ஜி.ஆர் இதனை ஒப்புக் கொண்டார். இம்மாற்றத்தை ஏற்றுக் கொண்டார். மருதகாசி மாற்றிய 'வந்த வழி மறந்து விட்டு கண் மூடி போகிறவர்' என்ற வரி 'அறிவிழந்து போகிறவர் போகட்டும்' என்ற பொருளில் அமைந்தது.

எம்.ஜி.ஆர் இப்பாடல் காட்சியில் நடிக்கும் போது எல்லோரும் தெளிவாக புரிந்துகொள்ளும்படி 'கண் மூடி போகிறவர்' என்பதற்கு சிறப்பு கவனம் அளித்து நடித்துக் காட்டியிருப்பார். மேலும் இவ்வரி பாட்டில் இரண்டு முறை இடம்பெறும்படி செய்திருப்பார். தான் சொல்ல விரும்பிய கருத்துக்களை பாடலாசிரியரிடம் எடுத்துச் சொல்லி தெளிவாக எழுதி வாங்கிய பின்பு இயக்குனரிடமும் சொல்லி அதனைப் பார்ப்பவர்கள் மனதில் பதியும்படி காட்சிப்படுத்துவது எம்.ஜி.ஆரின் வெற்றிக்கு உறுதுணையாக

இருந்தது. இது எம்.ஜி.ஆரின் வெற்றி சூத்திரங்களில் ஒன்றாகும்.

நமது கொடியா மகரக் கொடியா?

கவிஞர் முத்துலிங்கம் இலக்கிய நயத்தோடு பாடல் எழுதக்கூடிய கவிஞர் ஆவார். இவர் மதுரை மீட்ட சுந்தரபாண்டியன் (1978) படத்துக்கு பாடல் எழுதிய போது

"கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும்

கொள்கை வீரர் தியாகங்களை ஏற்றிட வேண்டும்"

என்ற வரிகளை எழுதி இருந்ததைப் படித்துப் பார்த்தேன். நமது கொடி என்பதை தணிக்கை அதிகாரிகள் ஏற்றுக் கொள்வார்களா என்று கேட்டார். அதனை மகரக்கொடி என்று மாற்றிவிடுங்கள். மகரம் என்றால் மீன் என பொருள் பெறும் அல்லவா. பாண்டியனின் கொடி மீன்கொடி தானே என்று கூறினார். அதற்கு முத்துலிங்கம் 'அண்ணே நான் தணிக்கை அதிகாரிகளிடம் கேட்டு விட்டேன். அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். எனவே நமது கொடி என்றே இருக்கட்டும்' என்றார். எம்.ஜி.ஆர் மிகவும் அகமகிழ்ந்து போனார். நம்மிடம் வருவதற்கு முன்பே நம்முடைய சந்தேகங்களை ஊகித்து



உணர்ந்து அதற்குரிய தெளிவுகளோடு முத்துலிங்கம் வந்திருக்கின்றார் என்பதை உணர்ந்த எம்.ஜி.ஆர் அருகில் இருப்பவர்களிடம் 'இப்போது தெரிகிறதா நான் ஏன் முத்துலிங்கத்தை என்னோடு வைத்திருக்கிறேன் என்று ' எனச் சொல்லிப் பாராட்டினார்.

விவசாயி (1967) படம் எடுக்கப்பட்டதற்கு ஒரு வரலாறு உண்டு. அப்போது ஒரு சில மாதங்களில் பொங்கல் வர இருந்தது. எம்.ஜி.ஆர் தன் நாடக நடிகர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியோருடன் பொங்கல் விழாவை சிறப்பாக கொண்டாடுவார். அன்று தன்னைச் சந்திக்க வரும் அனைவருக்கும் அவர் பொங்கல் பரிசாக பணம் கொடுப்பது உண்டு. இந்த பொங்கல் செலவுக்கு அவருக்கு நிறைய பணம் தேவைப்பட்டது. பொதுவாக மனிதர்கள் தங்களிடம் பணம் இல்லை என்றால் உடனே செலவைக் குறைத்துக் கொள்வது வழக்கம். பண்டிகை செலவை சற்று குறைத்து சிக்கனமாக செலவு செய்வார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். அப்படிப்பட்டவர் அல்லர். அவர் பலர் வந்து சேர்ந்து கொண்டாடும் பொங்கல் விழாவை நம்மிடம் பணம் இல்லை என்று சொல்லித் தட்டிக் கழிப்பது முறையாகாது என்று நினைத்து உடனே சாண்டோ சின்னப்பா தேவரை அழைத்து 'ஒரே மாதத்தில் ஒரு படம் எடுக்க வேண்டும்; எனக்கு பொங்கல் செலவுக்கு எட்டு லட்ச ரூபாய் தேவைப்படுகிறது' என்றார்.

தேவர் படம் எடுக்கும்போது ஒரு நவீன பழக்கத்தை வைத்து இருந்தார். அதாவது முதல் தவணையில் மொத்தப் பணத்தையும் ரொக்கமாக நடிகர்களிடம் கொடுத்துவிடுவார். அதே பழக்கத்திற்கு ஏற்ப எம்.ஜி.ஆருக்கும் பணத்தை ரொக்கமாகக் கொடுத்துவிட்டு சத்யா ஸ்டுடியோவிலும் கோயமுத்தூர் விவசாயப் பண்ணையிலும் வைத்து படத்தை விரைவாக எடுத்து முடித்தார். பொங்கல் விழாவுக்கு மற்றவர்களுக்குச் செலவழிக்க வேண்டுமே என்பதற்காக எம்.ஜி.ஆர். உழைத்துச் சம்பாதித்தார்.

தன்னுடைய உழைப்பில் கிடைத்த ஊதியத்தை மற்றவர்களுக்காகச் செலவழித்தவர் எம்.ஜி.ஆர். அவர் தன் வசதிக்கு போக மிச்சம் மீதியை செலவழிக்கவில்லை.

பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே அவர் கடுமையாக உழைத்தார். இதுதான் மற்றவர்களுக்கும் எம்.ஜி.ஆருக்கும் இடையிலான குறிப்பிடத்தக்க ஒரு வித்தியாசம் ஆகும். விவசாயி படத்துக்கு பாட்டு எழுதுவது கண்ணதாசன் வாலி தவிர விவசாயத்தில் நன்கு அனுபவம் உடைய வேறு கவிஞர்கள் தேவைப்பட்டனர். எனவே எம்.ஜி.ஆர் மருதகாசியை அழைத்து பாடல்களை அவரைக் கொண்டு எழுதும்படி செய்தார். அவ்வாறு கிடைத்த பாடல் தான் மருதகாசி எழுதிய

"நல்ல நல்ல நிலம் பார்த்து
நாமும் விதை விதைக்கணும்
நாட்டு மக்கள் மனங்களிலே
நாணயத்தை வளர்க்கணும்

பள்ளி என்ற நிலங்களிலே
கல்விதனை விதைக்கணும்
பிள்ளைகளை சீர்திருத்தி
பெரியவர்கள் ஆக்கணும்

கன்னியர்க்கும் காளையர்க்கும்
கட்டுப்பாட்டை விதைத்து
கற்பு நிலை தவறாத
காதல் பயிர் வளர்த்து

அன்னை தந்தை ஆனவர்க்கு
தம் பொறுப்பை விதைத்து
பின் வரும் சந்ததியை
பேணும் முறை வளர்த்து

இருப்பவர்கள் இதயத்திலே

இரக்கமதை விதைக்கணும்

இல்லாதார் வாழ்க்கையிலே

இன்பப் பயிர் வளர்க்கணும்

பார் முழுதும் மனிதக்குலப்

பண்புதனை விதைத்து

பாமரர்கள் நெஞ்சத்திலே

பகுத்தறிவை வளர்த்து

போர் முறையை கொண்டவர்க்கு

நேர்முறையை விதைத்து

சீர் வளர தினமும்

வேகமதை வளர்த்து

பெற்ற திருநாட்டினிலே

பற்றுதனை விதைக்கணும்

பற்றுதனை விதைத்துவிட்டு

நல்ல ஒற்றுமையை வளர்க்கணும்” என்று வரும் பாடல்.

இப்பாடல் விதை பற்றிய சுவையான பாடல் ஆகும். எத்தனை இடங்களில் நாம் விதை விதைக்க வேண்டும் என்பதைப் பட்டியலிட்டு சொல்லும் பாடல் ஆகும்.

மருதகாசி எழுதிய மற்றொரு பாடல் விவசாயி என்ற பாடல் ஆகும்.

“விவசாயி.... விவசாயி....

கடவுள் என்னும் முதலாளி

கண்டெடுத்த தொழிலாளி

விவசாயி.... விவசாயி...”

இப்பாடலில்

“இருந்திடலாம் நாட்டில் பல வண்ணக்கொடி

எத்தனையோ கட்சிகளின் எண்ணப்படி

பறக்க வேண்டும் எங்கும் ஒரே சின்னக்கொடி - அது

பஞ்சம் இல்லையென்னும் அன்னக்கொடி ”

என்ற வரிகள் இந்நாட்டில் விவசாயி தான் கொடி கட்டி பறக்கிறான் என்பதை சொல்லாமல் சொல்லிய சுவையான பாடல் ஆகும். மேலும்

“என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில்

ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்

ஒழுங்காய் பாடு படு வயல் காட்டில்

உயரும் உன் மதிப்பு அயல் நாட்டில்”

என்று வரிகள் இந்தியா தன்னிறைவு பெற்ற நாடாகத் திகழ்கிறது என்ற தன்னம்பிக்கையையும் மக்கள் மனதில் விதைத்தது.

எம்.ஜி.ஆர். மருதகாசியைக் கொண்டு எழுதி வாங்கிய இப்பாடல்கள் இன்றும் விவசாயியின் சிறப்புகளை எடுத்துக் கூறுகின்றன. விதை விதைத்தல் என்பதில் எத்தனை வகையான விதைகளை நாம் விதைக்க இந்த சமூகத்திற்குக் கடமைப்பட்டு இருக்கிறோம் என்பதைச் சொல்லும் பாடலாக “நல்ல நல்ல நிலம் பார்த்து நாமும் விதை விதைக்கணும்” என்ற பாடல் அமைந்துவிட்டது. கல்வி, உழைப்பு, ஒழுக்கம் இவை அனைத்துமே நாம் மனித மனங்களில் விதைக்க வேண்டிய விதைகளாகும் என்பதை இப்பாடல் நமக்கு தெரிவிப்பது சுவையானதும் கருத்தாழம் மிக்கதும் ஆகும்.

முதல்வர் நாற்காலியின் கால்கள்

எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆன பிறகு ஒரு பேட்டியின் போது ‘என்னுடைய முதலமைச்சர் நாற்காலியில் நான்கு



கால்களில் ஒன்று கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய பாடல்கள் ஆகும்' என்று குறிப்பிட்டார். இவ்வாறு தன்னுடைய அரசியல் வெற்றிக்கு காரணமாக அமைந்தவை தன்னுடைய திரைப்பட பாடல்கள் என்பதை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். அதற்காக உழைத்தும் இருந்தார். அவற்றைப் பாடலாசிரியர்களிடம் கேட்டு எழுதிப் பெற்றார்.

1957இல் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய ஒரு தனிப் பாடலை பொதுவுடைமை இதழ் ஒன்றில் இருந்து பார்த்துவிட்டு அதை தன்னுடைய நாடோடி மன்னன் திரைப்படத்திற்கு ஏற்றவாறு சற்று மாற்றி அமைத்து தரும்படி கேட்டு வாங்கினார். அந்தப் பாடல்தான் இன்று வரை அவருடைய அரசியல் அரிச்சுவடியின் இரண்டாவது அத்தியாயமாக விளங்கும்

"காடு வெளஞ்சென்ன மச்சான்

நமக்கு கையும் காலும்தானே மிச்சம்" என்ற பாடல்.

இதனுடைய இறுதி வரிகளான

"நானே போடப்போறேன் சட்டம்

பொதுவில் நன்மை புரிந்திடும் திட்டம்

நாடு நலம் பெறும் திட்டம்"

என்ற வரிகள் திரைப்படத்துக்காக சேர்க்கப் பட்டவை ஆகும்.

இந்த வரிகள் தாம் மக்கள் மனதில் அன்றே எம்.ஜி.ஆர். நம் தலைவர் ஆக வேண்டும் என்ற எண்ணத்தை ஆழமாக விதைத்தன எனலாம். இதே வரிகள் தாம் இன்றுவரை அவரை ஒரு அரசியல் தீர்க்கதரிசியாக உணரச் செய்கின்றது. அவர் போடுவதாக சொன்ன சட்டங்களையும் தீட்டுவதாக சொன்ன திட்டங்களையும் அவர் முதலமைச்சரான பிறகு நடைமுறைக்கு கொண்டு வந்ததற்கான முன்னோடி வாசகமாக அமைந்தவை இந்த மூன்று வரிகள் தான்.

திமுகவின் சிறப்பு பற்றிய பாடல்

1969 இல் அண்ணா மறைந்த பிறகு கலைஞரை எம்.ஜி.ஆர் முதல் அமைச்சர் ஆக்கினார். அப்போது எல்லோரும் நாவலர் நெடுஞ்செழியன் தான் அடுத்த முதலமைச்சர் என்று கருதிக் கொண்டிருந்த வேளையில் எம்.ஜி.ஆர் எம்எல்ஏக்களை சத்யா ஸ்டுடியோவிற்கு அழைத்து 'இன்றைக்கு இருக்கும் இக்கட்டான சூழ்நிலையில் காங்கிரஸார் எதிர்த்து நிற்க வேண்டும் என்றால் நமக்கு வெறும் கல்வி அறிவு படைத்தவர் மட்டும் இருந்தால் போதாது; சில சூட்சுமங்களும் நுண்ணறிவும் உடைய ஒரு தலைவர் நமக்குத் தேவை. அப்படிப்பட்டவர் முதல்வராக இருந்தால் மட்டுமே கட்சியையும் ஆட்சியையும் சிறப்பாக கொண்டு செலுத்த முடியும்' என்று எடுத்துரைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் சம்மதத்தை பெற்றார். கலைஞரை முதலமைச்சராக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொண்டார். சட்டமன்ற உறுப்பினர்களும் காங்கிரசை எதிர்த்து நிற்க வேண்டும் என்றால் அதற்கு ஏட்டுப் படிப்பு மட்டும் போதாது சூழ்ச்சியும் தந்திரங்களும் தெரிந்திருக்க வேண்டும் என்ற கருத்தை உணர்ந்து ஏற்றுக்கொண்டனர்.

1969 முதல் முதலமைச்சரான கருணாநிதி சில ஆண்டுகளில் தான் சுயநலம் மிக்கவர் என்பதை மக்களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் புரிய வைத்து விட்டார். அவருடைய ஆட்சியில் ஊழல் மலிந்தது. எம்.ஜி.ஆர் அவரை எதிர்க்கத் துணியும் இத் தருணத்தில் அவருடைய அனுதாபத்தைப் பெறுவதற்காக கருணாநிதி அவரிடம் தான் மிகவும்

கடன்பட்டு இருப்பதாகவும் தன் வீடு கடனில் மூழ்கப் போவதாகவும் சொல்லி அவரும் அவருடைய மைத்துனர் முரசொலி மாறனும் எம்.ஜி.ஆர் தங்களுக்கு ஒரு படம் இலவசமாக நடித்துக் கொடுத்தால் அந்தப் படத்தை வெளியிட்டு அதன் லாபத்தைக் கொண்டு ஜப்தி செய்யப்போகும் வீட்டை மீட்டு விடுவோம் என்று நீலிக்கண்ணீர் வடித்தனர். இரக்க குணம் படைத்த எம்.ஜி.ஆர் இவையெல்லாம் உண்மை என்று எண்ணி தானும் இலவசமாக நடித்துக் கொடுத்ததோடு ஜெயலலிதாவையும் பணம் வாங்க வேண்டாம் நீயும் இலவசமாக நடித்துக் கொடு என்றார். ஜெயலலிதாவும் ஒத்துக்கொண்டார். இருவரும் இலவசமாக நடித்துக் கொடுத்த கலைஞரின் எங்கள் தங்கம் என்ற படம் வெளிவந்தது. படத்தின் வெற்றி விழாவின்போது கருணாநிதி 'என் போன்ற பலரை வாழ வைத்த எம்.ஜி.ஆர்' என்று ஒரு கவிதையில் பாராட்டினார்.

கருணாநிதி பாடிய கவிதை . . . . .

குன்றனைய புகழ்கொண்ட குணக்குன்றே . . .
முடியரசர்க் கில்லாத செல்வாக்கு எல்லாம்
முழுமையுடன் பெற்று விளங்கும் முழு மதியே!
படிமிசை நீ பெற்ற கீர்த்தியெல்லாம்
பார்க்கின்றாள் – வானிருக்கும் சத்யா அன்னை
மடிமிசை உனைச் சுமந்த நாள் நினைத்து – மகிழ்ச்சியில்
வடிக்கின்றாள் கண்ணீர் தன்னை!

கொன்றாலும் நிலைத்திருக்கும் தருமம் என்று
குருடர்களுக்கு எடுத்துரைத்த மறு பிறப்பே!
வென்றாரும், வெல்லாரும் இல்லா வகையில்
எந்நாளும் ஒளிவீசும் தன்மதியே!

தென்னாடும், தென்னவரும் உள்ளவரை
மன்னா! உன் திருநாமம் துலங்க வேண்டும்!

உன்னாலே உயர்வடைந்த என் போன்றோர்

உள்ளங்கள் அதைக் கண்டு மகிழ வேண்டும்.

எங்கள் தங்கம் (1970) படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த வேளையில் எம்.ஜி.ஆர். வாலியை அழைத்து திமுகவைப் பற்றி அண்ணாவைப் பற்றி ஒரு பாடல் எழுத வேண்டும். அதில் கருணாநிதியின் பங்களிப்பு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் கலந்து கொண்டது குறித்து ஒரு பல்லவி தனியாக வேண்டும் என்று கேட்டார். அவருடைய கருத்தின்படி எழுதப்பட்ட பாடல் தான்,

“நான் செத்துப் பொழச்சவன்டா

எமனை பார்த்து சிரிச்சவன்டா” *என்ற பாடல்*

இதில்

“சந்தன பெட்டியில் உறங்குகிறார் அண்ணா

சரித்திரப் புகழுடன் விளங்குகிறார்

எதையும் தாங்கும் இதயம் கொண்டு

அண்ணன் எங்களை வாழ்ந்திட சொன்னதுண்டு

அண்ணன் அன்று நல்ல நல்ல கருத்து

அழகு தமிழில் சொல்லி சொல்லி கொடுத்து

வளர்ந்த பிள்ளையடா அதனால்

தோல்வி இல்லையடா” *என்று அண்ணாவை பாராட்டும் பல்லவியும்,*

“ஓடும் ரயிலை இடைமறித்து

அதன் பாதையில் தனது தலை வைத்து

உயிரையும் துரும்பாய் தான் மதித்து

தமிழ் பெயரைக் காத்த கூட்டம் இது

பரம்பரை ரத்தம் உடம்பிலே தான்

அது முறுக்கேறி கிடப்பது நரம்பிலே தான்

கொடுப்பதை கொடுத்தால் தெரியுமடா

உன் இடுப்பையும் ஒடிச்சா புரியுமடா”

என்ற பல்லவி கருணாநிதியின் இந்தி எதிர்ப்பு போராட்டத்தைப் பற்றியும் இடம் பெற்றது. இந்த பாடல் எம்.ஜி.ஆரின் சிறப்புகள், அண்ணாவின் சிறப்பு, கருணாநிதியின் சிறப்பு ஆகிய மூவரின் சிறப்புகளையும் எடுத்துரைக்கும் பாடலாகும்.

இவ்வாறு தனக்கு வேண்டிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இந்த கருத்துக்களை உள்ளடக்கமாகக் கொண்டு பாடல்களை எழுதித் தாருங்கள் என்று கேட்டு பயன்படுத்திக்கொள்வது மரபு.

திமுகவின் ஊழல் பற்றிய பாடல்

கருணாநிதி திமுகவை விட்டு எம்.ஜி.ஆரை. வெளியேற்றிய பிறகு எம்.ஜி.ஆர் அண்ணா திமுக என்ற கட்சியைத் தொடங்கினார். அப்போது கருணாநிதியின் சுயநலத்தையும் ஊழலில் காட்டும் தனது குடும்பப் பாசத்தையும் வெளிப்படுத்தும் வகையில் அவருடைய ஊழலை ஊரறியச் செய்வதற்காக நேற்று இன்று நாளை படத்தில் ஒரு பாடல் இடம்பெற வேண்டும் என விரும்பினார். கவிஞர் வாலியை அழைத்து திமுக ஆட்சியில் நடந்த ‘மாஸ்டர் ரோல்’ ஊழல், மாநகராட்சியில் விளக்கு போடுவதில் ஊழல், தன்னுடைய சொந்தக் குடும்பத்தாருக்கு அதிக அளவில் சொத்து சேர்த்தது போன்ற விஷயங்களை எடுத்துச் சொல்லி இவை இடம்பெறும்படி ஒரு பாடல் எழுதிக் கொண்டு வாருங்கள் என்றார். மேலும் தன்னுடைய கட்சி அண்ணாவின் உண்மையான திமுக கட்சி என்பதை உணர்த்தும் வகையில் அண்ணாவின் சிறப்பு அண்ணாவின் வழி வந்தவர் நாங்கள் என்பதை வலியுறுத்தும் வரிகளும் அதில் இடம் பெற வேண்டும் என்றார். எம்.ஜி.ஆர். கருத்திற்கிணங்க வாலி எழுதிய பாடல்தான் நேற்று இன்று நாளை (1974) படத்தில் இடம்பெற்ற



“தம்பி....

நான் படித்தேன் காஞ்சியிலே நேத்து -

அதை நான் உனக்கு சொல்லட்டுமா இன்று

என்றும் நல்லவர்க்கு வாழ்வு வரும் நாளை

இது அறிஞர் அண்ணா எழுதி வைத்த ஓலை”

என்ற பல்லவியுடன் தொடங்கும் பாடல். இப்பாடலில்

“வீட்டுக்கெல்லாம் வெளிச்சம் போடக் கொடுத்த பணத்திலே

தாங்கள் வெளிச்சம் போட்டு வாழ்ந்து விட்டார் நகர சபையிலே

ஏழைக்கெல்லாம் வீடு என்று திட்டம் தீட்டினார்

தாங்கள் வாழ்வதற்கு ஊர்ப் பணத்தில் வீடு கட்டினார்”

என்ற வரிகளும்

“மக்கள் நலம் மக்கள் நலம் என்றே சொல்லுவார்

தம் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்”

என்ற வரிகளும் எம்.ஜி.ஆர். கேட்டுக்கொண்டபடி எழுதப்பட்ட வரிகள் ஆகும். ‘தன் மக்கள் நலம்’ என்பது கருணாநிதி தன்னுடைய பிள்ளைகளின் நலத்தை மட்டுமே தன்னுடைய மனதில் கொள்ளுவார். ஊர் மக்களின் நலத்தை பற்றி அவர் கவலை கொள்ள மாட்டார் என்ற கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைத்தது.

நேற்று இன்று நாளை (1974) படம் வெளிவந்த போது திமுக கட்சியில் ஸ்டாலினுக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. ஆனால் கருணாநிதியின் பிள்ளைகள் பெயரில் நிறைய சொத்துக்கள் வாங்கப்பட்டிருந்தது உறுதியானது. காலப்போக்கில் கருணாநிதிக்குப் பிறகு அவரது மகன் அழகிரியும், ஸ்டாலினும், அவருடைய மைத்துனர் முரசொலி மாறனும் அவரது மகன் தயாநிதி மாறனும் ஸ்டாலினுக்குப் பிறகு கருணாநிதியின் பேரன் உதயநிதியும் இப்போது அரசியலுக்குள் வந்திருப்பது எம்.ஜி.ஆர். பாடலின் உண்மைத்தன்மையை உறுதி செய்துள்ளது. திமுகவின் இன்றைய அரசியல் எம்.ஜி.ஆர் கருணாநிதி குறித்து ‘தன் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்’ என்று பாடிய வரிகளை மெய்யாக்கிவிட்டது. இவ்வகையில் எம்.ஜி.ஆர். தன் பாடல்களின் மூலமாக பல தீர்க்கதரிசன கருத்துக்களை சொல்லியிருக்கிறார். எம்.ஜி.ஆர் கருணாநிதியைப் பற்றி அன்றைக்கே சரியாக கணித்து இருந்தார் என்பதை இந்தப் பாடல் வரிகள் நமக்கு என்றென்றும் உணர்த்திக் கொண்டே இருக்கின்றன. இதனால் மக்கள் அவரது பாடலின் கருத்துக்களை மதிக்கின்றனர்.

எம்.ஜி.ஆரின் புகழ் இன்றும் நின்று நிலைத்திருப்பதற்கு காரணம் அவரது தெளிவான சிந்தனையும், தீர்க்க தரிசனமும், கடுமையான உழைப்பும், பாடலாசிரியர்களிடம் தனது கருத்துக்களை எடுத்துரைத்து அவற்றை கேட்டு எழுதி வாங்கியதில் உறுதியாக இருந்ததும் ஆகும். பாடல் ஆசிரியர்களிடம் தன்னுடைய கருத்துக்களை அந்தந்த காலக்கட்டத்தின் தேவைக்கு ஏற்ப கேட்டு வாங்கி தன்னுடைய படங்களில் பயன்படுத்தினார். இதனால் அவருடைய பாடல்கள் காலத்துக்கேற்ற கருத்துக்களை எடுத்துரைக்கும் பாடல்களாக மக்கள் மனதில் ஆழமாக இடம்பெற வேண்டிய கருத்துக்களை அவ்வப்போது எடுத்துரைக்கும் பாடல்களாக இருந்தன.

எம்.ஜி.ஆர். படப்பாடல்களின் தொடர்பியல் திறன் ஆற்றல் மிக்கது. காலத்துக்கேற்ற கருத்து சொல்லப்பட்டதால் அவர் பாடல்களை வெறும் பாடல்களாக பொழுதுபோக்கு அம்சமாக மட்டும் கொள்ள இயலாது. பொழுதுபோக்கு அம்சங்களோடு கேட்பவர் மனதில் பதிய வேண்டிய கருத்துகளையும் சேர்த்து கொடுப்பதில் எம்.ஜி.ஆர். திறமை மிக்கவராக இருந்தார். தன்னுடைய முழு கவனத்தை பாடலின் வெற்றிக்கு செலுத்தி வந்தார். இதனால்தான் அவருடைய பாடல்கள் அவருக்கு அரசியலில் ராஜபாட்டையை அமைத்துக் கொடுத்தன, இன்றும் அழியாப் புகழோடு இப்பாடல்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவருடைய பாடல்கள் அரசியலுக்குப் பொருத்தமாக இருக்கின்றன. அன்றைக்கு அவருடைய அரசியல் பயணம் சிறப்பாக அமைய அவருடைய திரைப்படப் பாடல்கள் பெரிதும் வழிவகுத்தன. காலத்தால் அழியாத கருத்து பெட்டகங்களாக இருப்பதனால் மட்டுமே எம்.ஜி.ஆர் மறைந்து சுமார் 40 ஆண்டுகள் ஆன பிறகும் அவருடைய பாடல்கள் திருக்குறளைப் போல சிலப்பதிகாரத்தை போல மக்கள் மனதில் பசுமரத்தாணி போல பதிந்துள்ளன.

5. எம்.ஜி.ஆர். படப் பாடல்களில் மனித நேயம்

எம்.ஜி.ஆர். படப் பாடல்களில் மனித நேயம் பற்றி ஏராளமான கருத்துக்கள் உள்ளன. இவை அனைத்தும் அவருடைய சொந்தக் கருத்துக்களே தவிர அவருக்காக வலிந்து புகுத்தப்பட்ட கருத்துக்கள் அல்ல. "மனுஷன் பிறருக்காக ஏதாவது செய்யாவிட்டால் பிறவி எடுத்து என்ன பிரயோஜனம்' என்பது எம்.ஜி.ஆர். படத்தில் ஒரு வசனம். இடம்பெறும். இதுவும் அவர் தன்னுடைய வாழ்க்கை குறித்து வைத்திருந்த சொந்த எண்ணம் அல்லது கொள்கை என்று துணிந்து கூறலாம். ஏனெனில் அவர் பிறருக்காக வாழ்ந்தவர்; தனக்கென வாழாத பொதுநலவாதி. தன் ஒருவனுடைய உழைப்பில் சம்பாதித்த பணத்தையெல்லாம் தமிழகத்தில் மட்டுமல்ல பிற மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் வாழ்ந்த பலருக்கும் கொடுத்து மகிழ்ந்தவர். இவருக்குப் பூர்வீகச் சொத்து அல்லது தாய் தந்தையார் சேர்த்து வைத்த சம்பாத்தியம் என எதுவும் கிடையாது. 19 வயதுக்குப் பிறகு இவர் திரைப்படங்களில் சின்னஞ்சிறிய கதாபாத்திரங்களில் நடித்து 40 வயதில் உச்ச நட்சத்திரமானார். 40 வயதுக்குப் பிறகு இவர் கடுமையாக உழைத்து சம்பாதித்த பணத்தை தன் இறுதிக்காலம் வரை எல்லோருக்கும் வழங்கினார். மனிதர்களை நேசிக்க வேண்டும் அவர்களின் துன்பங்களைக் களைய வேண்டும் என்பதில் ஆழ்ந்த பற்றும், ஈடுபாடும், நம்பிக்கையும் கொண்டவர்.

மனிதன் என்றால் யார் ?

இந்தக் கேள்விக்கு அவருடைய நான் ஏன் பிறந்தேன் (1972) படத்தில் வரும் "தம்பிக்கு ஒரு பாட்டு" என்ற பாடலில் ஒரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

"பிறப்பால் வளர்ப்பால் இருப்பவர்கள் எல்லாம்

மனிதர்கள் அல்ல என்றாராம்

இனத்தால் அல்ல மனத்தால் மட்டும்

வாழ்பவன் மனிதன் என்றாராம்"

கண்ணதாசன் எழுதிய இந்தப் பாடல் இனத்தால் மனத்தால் வாழ்பவன் மனிதன் என்ற இலக்கணம் மனிதனுக்கு நல்ல மனம் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. மன் என்ற அடி சொல்லிலிருந்து தோன்றியது தான் மனுஷ் அல்லது மனிதன் என்ற சொல். எனவே நல்ல மனம் படைத்தவனே மனிதன். நல்ல மனம் என்பது தன்னோடு வாழும் மனிதர்களிடம் நாம் காட்டும் அன்பு, பரிவு, இரக்கம் ஆகியவையாகும்.

தமிழினம் . . .

மனிதர்கள் கூடி வாழும் போது அது ஓர் இனம் ஆகிறது. தமிழ் இனம் என்பது தமிழ் மொழி பேசிய மனிதர்களின் கூட்டமைப்பாகும். எம்.ஜி.ஆர். தமிழினத்தைத் தன் உயிராக மதித்தார். தமிழ் பேசும் மக்களை தன் உறவாகப் போற்றினார். தமிழைத் தன் தாய் மொழியாகக் கருதினார். தான் தமிழ்நாட்டைச் சேர்ந்த மன்றாடியார் வகுப்பில் பிறந்தவன் என்பதை ஆய்வின் மூலமாக நிறுவி தன்னை தமிழரோடு இணைத்து அடையாளப்படுத்திக் கொண்டார். முதல்வரானதும் மற்ற எந்த முதல்வரையும் விட மிக அதிக அளவில் தமிழுக்கு பல நல்ல திட்டங்களை தீட்டி மேம்படுத்தினார்.

உரிமைக்குரல் (1974) படத்தில் இந்த நிலத்தாய் எனக்கு சோறு ஊட்டி வளர்த்தாள், என்பார். இந்த மண்ணை விட்டு நான் பிரிய மாட்டேன். என் உடல் விழுந்தால் இந்த மண்ணில்தான் விழும். இந்த மண்ணில்தான் அடக்கம் செய்யப்படும் என்று தன் தாய் மண்ணை நேசித்து அதன்படி வசனம் எழுதச் செய்து அதனைப்

பேசி மகிழ்ந்தார்.. தமிழ் இனம் அவருடைய பற்றுதலும் போற்றுதலுக்கும் உரிய இனமாக விளங்கியது. எனவே இனத்தாலும் மனத்தாலும் வாழ்பவன் மனிதன் என்ற கண்ணதாசனின் கூற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்த எம்.ஜி.ஆர். தானும் அந்த கருத்தையே தன் மனத்துள் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உதவிய எம்.ஜி.ஆர். ஈழத்தமிழர்கள் தமது விடுதலைக்காக சிங்களவர்களுடன் சிங்கள அரசுடன் போராடியபோது அவர்களின் தலைவர் பிரபாகரனுக்கும் மற்றவர்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்து தமிழ் இனம் வாழ வழி செய்து கொடுத்தார். அவர்கள் வெற்றி பெறவும் உதவினார். தமிழினத்திற்காக உதவிய தமிழ் நாட்டுத் தலைவர் ஒருவர் உண்டென்றால் அவர் எம்.ஜி.ஆர். மட்டுமே.

மனிதனுக்கு இன்னொரு விளக்கம் அவருடைய பாடலில் இருந்து கிடைக்கின்றது.

“மானம் பெரியது என்று வாழும் மனிதர்களை

மான் என்று சொல்வதில்லையா

தன்னை தானும் அறிந்து கொண்டு ஊருக்கும் சொல்பவர்கள்

தலைவர்கள் ஆவதில்லையா”.



இந்த வரிகள் மனிதன் என்பவன் தன்மானம் உடையவனாகத் திகழ வேண்டும். மானமே அவனது உயிர்; மானம் இழந்த பின் வாழாமை முன் இனிதே என்பது பெரியோர் வாக்கு. ஏழையாக இருந்தாலும் மானத்துடன் இருப்பதையே தமிழர் தம் உயர் பண்பாகப் போற்றினார்.

மனிதர்களுக்குத் தலைவனாக இருக்க வேண்டியவன் தன்னைப் பற்றித் தெளிவாக [know thyself] அறிந்து கொண்டு சமூகத்தைப் பற்றியும் அறிந்துகொண்டு அவ்வாறு அறிந்து கொண்டதை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்வான். அவனே சிறந்த தலைவன் ஆவான். ஆக எம்.ஜி.ஆர். தன்னைப்பற்றி மனிதரைப் பற்றி அவர்களுக்குத் தேவையான பண்புகளைப் பற்றியும் தெளிவாக அறிந்து கொண்டு பின்பு அதை தன்னுடைய படத்தில் வசனங்கள் மூலமாகவும் பாடல்கள் மூலமாகவும் ஊருக்கு எடுத்துச் சொன்னார். அந்தக் கருத்துக்களின் படி தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். அவர் வெறும் வாய்ச்சொல் வீரர் அல்ல. அவர் சொன்னபடி வாழ்ந்து காட்டியவர் சொல்லை செயலாக்கிய செயல்வீரர். எனவே மக்கள் அவருடைய வார்த்தைகளை நம்பினர், செயல்களைப் போற்றினர். அவரை அவர் காலம் முழுக்க தலைவராகவே உயர்த்தி வைத்திருந்தனர்.

ஆக ஒரு மனிதனுக்கு நல்ல மனமும் இனப்பற்றும் மான உணர்வும் இன்றியமையாத பண்புகளாகும் என்ற கருத்தை எம்.ஜி.ஆரின் பாடல்கள் உணர்த்துகின்றன.

மனிதன் எனப்படுபவன் யார்?

மனிதன் என்பதற்குரிய வரைவிலக்கணத்தை ஆசை முகம் (1965) படத்தில் வரும் பாடல் தருகின்றது. மனிதன் என்பவன் நேர்மையானவனாக இருக்க வேண்டும்.

"நாளொரு மேனி பொழுதொரு நடிப்பு

அவன் பேர் மனிதனல்ல.....

உள்ளத்தில் வைத்ததை உதட்டில் வைப்பவன்

எவனோ அவனே மனிதன்".



இவ்வரிகள் யார் மனிதனே அல்ல. யார் உண்மையான மனிதன் என்பவற்றை விளக்குகின்றன. மனிதனின் ஆளுமைக்கு ஒரு விளக்கம் இங்குச் சொல்லப்படுகிறது. **மனம் மொழி செயல் ஆகிய மூன்றாலும் ஒற்றுமைப்பட்டு இருப்பவனே சிறந்த மனிதன் ஆவான்.**

ஒரு மனிதன் தன் உள்ளத்தில் நினைப்பதை உதடுகளில் சொல்ல வேண்டும். பின்பு தான் சொன்னபடியே அவன் நடக்க வேண்டும். ஆக மனம் மொழி மெய் ஆகிய மூன்றினாலும் ஒன்றுபட்டு இருப்பவன் எவனோ அவனே சிறந்த மனிதன் ஆவான். இத்தகைய மனிதனையே good personality – சிறந்த ஆளுமை உடையவன் என்பர். உள்ளத்தில் வைத்ததை உதட்டிலும் வைக்கும் ஒரு மனிதன் உள்ளொன்று வைத்து புறமொன்று பேச மாட்டான். அவனுடைய உள்ளத்தில் நல்ல எண்ணங்களே தோன்றும். அந்த எண்ணங்களை அவனுடைய சொற்களில் பிரதிபலிக்கும். தூய்மையான எண்ணம், வாய்மையான சொற்கள், மெய்ம்மையான நடத்தை ஆகியவை ஒரு மனிதனுக்கு தேவையான மூன்று அடிப்படைகள் ஆகும்.

தூய்மை, வாய்மை, மெய்ம்மை ஆகியவற்றிற்கான விளக்கத்தை பேரா. தமிழண்ணல் தெரிவித்திருப்பார். இந்த

அடிப்படைகளில் இருந்து மாறிப் போனால் அவன் செல்வத்தால் பெரியவனாக இருந்தாலும் குணத்தால் சிறியவனாவான். பிறருடைய துன்பங்களைக் கண்டு இரக்கம் கொள்ளாதவன் மனிதனே கிடையாது. அவனை மனித குலத்தில் சேர்க்கவும் இயலாது. பிறர் துன்பங்களை தன்னுடைய துன்பமாகக் கருதும் இரக்க உணர்வே ஒரு மனிதனை அவன் வாழும் சமுதாயத்தின் ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்ளும் தகுதியை அளிக்கின்றது. பிறருக்கு இரங்க அவன் சமுதாயத்தில் இணைந்து வாழ தகுதியற்றவன். இன்னொருவர் இவனுக்கு மற்றவர்களின் வேதனை வேடிக்கையாகத் தோன்றும். இவன் இரக்கமில்லாதவன், கருணை இல்லாதவன் மனித இனத்தில் சேர்க்கப்படும் தகுதி இல்லாதவன்.

மனிதனின் வாழ்க்கை அல்லது ஆயுட் காலம்

ஒவ்வொரு மனிதனும் நீண்ட காலம் வாழ வேண்டும், நூறாண்டு வாழ வேண்டும் என்று ஆசைப்படுகின்றான். அவனை வாழ்த்தும் பெரியவர்களும் நூறாண்டு வாழ்க, தீர்க்காயுளுடன் வாழ்க என்று தான் வாழ்த்துகின்றனர். ஆனால் வாழ்க்கை என்பது அவன் வாழும் ஆண்டுகளில் கணக்கிடப்படுவது அல்ல. அவன் வாழும் தரத்திலும்



முறையிலும் கணக்கிடப்படுகின்றது. நான் ஆணையிட்டால் (1966) படத்தில் தாய் மேல் ஆணை தமிழ் மேல் ஆணை எனத் தொடங்கும் பாடலில்

"எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான்

என்பது கேள்வி இல்லை -

அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை உணர்ந்தால்

வாழ்க்கையில் தோல்வியில்லை.. "

என வரும் நான்கு வரிகள் எம்.ஜி.ஆரின் உள்ளக்கருத்துடன் ஒத்துப் போகின்றன. ஒரு மனிதன் நூறு வயது வரை வாழ்ந்து கேவலமானவனாக, பிறருக்கு உதவாதவனாக, சுயநலக்காரனாக, தன் குடும்பம் தன் மக்கள் தன் மறுமனையாட்டிகள் என்று வாழ்ந்து கொண்டிருந்தால் அவனுடைய வாழ்க்கையால் ஊருக்கு எந்த நன்மையும் கிடையாது. அதே வேளையில் இயேசு கிறிஸ்துவைப் போல, விவேகானந்தரைப் போல, பாரதியாரைப் போல குறைந்த ஆயுளுடன் வாழ்ந்தாலும் அவர்களின் சமூகப்பணியால் அவர்களை மனிதகுலம் இன்றும் நினைத்துப் போற்றுகின்றது. ஆக எத்தனை காலம் மனிதன் வாழ்ந்தான் என்பது கேள்வி இல்லை; அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை நினைத்தால், வாழ்க்கையில் தோல்வி இல்லை என்ற கருத்து எம்.ஜி.ஆரின் எண்ணத்துடன் ஒன்று பட்டதாகும்.

எம்.ஜி.ஆர். நாற்பது வயது வரை சரியான தொழில் வாய்ப்பு கிடைக்காமல் வாழ்க்கையை நடத்த அரும்பாடுபட்டார். ஆனால் அந்த கஷ்டப்பட்ட காலத்திலும் அவர் தன்னுடைய முயற்சியையும் பயிற்சியையும் விட்டுவிடவில்லை. உடற்பயிற்சியை தொடர்ந்து செய்து கொண்டிருந்தார். அதனால் 40 வயது முதல் 70 வயது வரை அவர் இளைஞனாகவே தோற்றமளித்தார். அமெரிக்காவுக்கு போய் சிகிச்சை பெற்றுத் திரும்பும் வரை அவர் முகத்தின் முதுமையின் சாயல் தெரியவில்லை. உற்சாகமாக இருந்தார்.

எம்.ஜி.ஆர். தான் வாய்ப்பு தேடி அலைந்த நாட்களில் தன்னைச் சுற்றியிருக்கும் நாடகம் மற்றும் சினிமா உலகத்தின் ஒவ்வொரு தொழில்நுட்பத்தையும் கூர்ந்து கவனித்து கற்றுக் கொண்டார். சுமார் 13 ஆண்டுகள் சின்னஞ் சிறு வேடங்களில் நடித்து வந்த போதும் அந்த 13 ஆண்டுகளும் அவருக்கு ஒரு பயிற்சி காலமாகவே விளங்கியது. அந்த நீண்ட காலப் பயிற்சி அவர் நிரந்தரமாக திரையுலகில் கோலோச்சுவதற்கு உதவியாக இருந்தது. தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்களைப் பார்த்துக் கற்றுக் கொள்ளும் ஒரு மனிதன் வாழ்க்கையின் அனுபவங்களைக் கற்றுக் கொள்கிறான். அது ஏட்டுக்கல்வி அல்ல; அனுபவக் கல்வி, அது வாழ்க்கைக் கல்வி. அவ்வாறு கற்றுக் கொண்டதனால் அவர் தன்னுடைய ஒவ்வொரு வாழ்நாளையும் சிறப்பான நாளாக உயர்த்தினார். அவருடைய அந்த சோக நாட்களில் எதுவும் வருமானம் இல்லாவிட்டாலும் வீணான நாளாகப் போய்விடவில்லை. அவை அனைத்தும் அவருடைய பயிற்சி நாட்களாகவே, பயிற்சி காலமாகவே இருந்தன. வறுமையில் பயிற்சி செழுமையில் தேர்ச்சி என்ற நிலையில் எம்.ஜி.ஆரின் வாழ்க்கை பக்குவப்பட்டு இருந்தது.











நல்லவன் யார்?

சில மனிதர்கள் தங்களுடைய சுயரூபத்தை மறைத்து போலித்தனமாக நல்லவர்களைப் போல நாடகம் ஆடுகின்றனர். இவர்களை என்ன செய்வது அவர்களிடம் எப்படி நடந்துகொள்வது என்ற கேள்வியை எம்.ஜி.ஆர். ஒரு பாடலில் எழுப்புகின்றார். தீயவர்களைப் பார்க்கும்போது சிலரைத் தீயவர் என்று அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது சிலரை அவ்வாறு கண்டுகொள்ள முடிவதில்லை. அவர்கள் பசுத்தோல் போர்த்திய புலிகளாக நல்லவன் என்ற போர்வையில் நயவஞ்சகர்களாக வாழ்ந்து வருகின்றனர். இதனால் மனம் நொந்து போன ஒருவனின் குரலாக வரும் பாடல்,

"போயும் போயும் மனிதனுக்கிந்த

புத்தியைக் கொடுத்தானே இறைவன்

புத்தியைக் கொடுத்தானே அதில்

பொய்யும் புரட்டும் திருட்டும் கலந்து

பூமியைக் கெடுத்தானே மனிதன்

பாயும் புலியின் கொடுமையை இறைவன்

பார்வையில் வைத்தானே புலியின்

பார்வையில் வைத்தானே இந்தப்

பாழும் மனிதன் குணங்களை மட்டும்

போர்வையில் மறைத்தானே இதயப்

போர்வையில் மறைத்தானே”

என்ற பாடல் வரிகள் விலங்குகளைப் பார்க்கும் போது கூட அவற்றின் குணங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் மனிதனைப் பார்க்கும் போது அவனுடைய உள் மனம் என்ன நினைக்கின்றது அவன் நல்லவனா கெட்டவனா நமக்கு நன்மை தீமை செய்வானா என்பதை அறிந்துகொள்ள இயலவில்லை.

இத்தகைய பாடல்கள் படம் பார்க்கும் ரசிகர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைகின்றன. இப்பாடல்கள் வாழ்க்கையில் நல்லவர்களும் தீயவர்களும் உண்டு. அவர்களை இனம் பார்த்து அறிந்து கொள்ளும் தகுதியும் திறமையும் ஒவ்வொரு ரசிகனுக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டும் என்பதைச் சுட்டி செல்வதாக அமைகின்றன. இதே கருத்தை பெரிய இடத்துப் பெண் படத்தில் வரும் பாடலிலும் காணலாம்..

“அவனுகென்ன தூங்கிவிட்டான்...

அகப்பட்டவன் நான் அல்லவா

ஐயிரண்டு மாதத்திலே கைகளிலே போட்டு விட்டான்

கைகளிலே போட்டு விட்டான். . . . . ” என்ற பாடலில்

“யானையிடம் நன்றி வைத்தான்

காக்கையிடம் உறவு வைத்தான்

மான்களுக்கும் மானம் வைத்தான்

மனிதனுக்கு என்ன வைத்தான்?"

இப்பாடல் வரிகளில் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இருக்கும் சிறப்புப் பண்புகளை எடுத்துக் கூறிவிட்டு மனிதனுக்கு இத்தகைய சிறப்புப் பண்பு எதுவும் இல்லாமல் சிலர் இருக்கின்றனரே அவர்களை என்ன செய்வது அவர்களை எப்படி திருத்துவது. இந்த மனித குலத்திற்குப் பயனுள்ளவர்களாக அவர்களை எப்படி மாற்றுவது என்ற சிந்தனையோடு இப்பாடல் அமைந்துள்து. தனது படங்களின் முடிவில் இத்தகைய மனிதர்களைத் திருநதியதாக எம்.ஜி.ஆருடைய படம் முடிவடையுமே தவிர இவர்கள் மீது வன்மமும் வெறுப்பும் பகைமையும் கொண்டதாக நிறைவுறாது.

பகைவனுக்கும் உதவும் எம்.ஜி.ஆரின் அருட்குணம்

எம்.ஜி.ஆர். படங்களில் பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே என்ற பாரதியின் வரிகளின்படி பகைவனுக்கு எம்.ஜி.ஆர். அருள் பாலிப்பவராகவே படம் முடிவடையும். அருள் என்பது இன்னார் இனியார் எனாமல் எல்லோரிடமும் காட்டும் அன்பாகும், அதாவது நல்லவன் கெட்டவன் எல்லோரிடமும் காட்டும் அன்பு என்றால் கெட்டவனிடமும் அன்பு காட்டுவதுதான் அருள் எனப்படுகிறது. . அருள் என்னும் நற்பண்பு எம்.ஜி.ஆரின் வாழ்க்கையில் அவரிடம் இருந்ததை நாம் சில சான்றுகள் வழியாக அறிகின்றோம். அருள் என்னும் நற்பண்பு இருந்ததனால் எம்.ஜி.ஆர். மனித நேயம் மிக்கவராகக் போற்றப்படுகிறார்.

எம்.ஜி.ஆரை பற்றித் தொடர்ந்து கேவலமாகப் பத்திரிகைகளில் எழுதி வந்த ஒரு எதிரணி பத்திரிகையாளர் தன்னுடைய மகளின் திருமணச் செலவுக்கு பணம் இல்லாமல் தவித்த போது ஒருவர் எம்.ஜி.ஆரை போய்ப் பாருங்கள் என்றார். அப்போது அவர் ‘எம்.ஜி.ஆரைப் பற்றி படு கேவலமாக நான் எழுதி இருக்கிறேன். அவர் எப்படி எனக்கு உதவுவார்’ என்று சொல்லிவிட்டார். ‘இருந்தாலும் நான் உங்களை அழைத்துச் செல்கிறேன் பார்ப்போம் முயற்சி

செய்வோம்' என்று அவரை அந்த நண்பர் எம்.ஜி.ஆரிடம் அழைத்துச் சென்றார். எம்.ஜி.ஆர். அவர் வந்திருப்பதை அறிந்ததும் அவரை அழைத்து அவருக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டார். அப்போது அருகில் இருந்த ஒருவர் 'அவர் உங்களைப் பற்றி எவ்வளவு கேவலமாக எழுதுகிறார். அவருக்குப் போய் நீங்கள் உதவுகிறீர்களே?'' என்று கேட்டபோது, 'அவர் பாவம் ஏதோ ஒரு கஷ்டத்தில் இருக்கிறார். என்னிடம் வந்து கேட்பதற்கு அவருக்கு மனம் சங்கடமாக இருக்கும். அதுவே அவரை திருத்திவிடும். இனி நான் வேறு அவரை கடிந்து பேச வேண்டுமா? என்னிடம் வந்த மனக்கஷ்டம் ஒன்றே அவருக்கு போதாதா?' என்று எம்.ஜி.ஆர். சொல்லிவிட்டார்.

தவறு செய்பவனை கூட எம்.ஜி.ஆர். திட்டி தீர்க்காமல் 'ஏதோ அவனது போதாத காலம் அவனுடைய வயிற்றுப்பிழைப்புக்காக அவன் அந்த அணியில் சேர்ந்து இருக்கிறான் அங்கிருந்து அவன் எழுதி பிழைத்துக் கொண்டிருக்கின்றான்' என்று அந்தப் பத்திரிகையாளரை மன்னித்து நல்ல மனதோடு அவருக்கு உதவி செய்தார். இது போல இன்னொரு சம்பவத்தையும் இங்கு எடுத்துக் கூறலாம்.

எம்.ஜி.ஆர். ஒரு முறை காரில் வந்து கொண்டிருந்த போது ஒரு போலீஸ்காரரர் வழியில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்து தன்னுடைய காரை நிறுத்தி அதில் ஏறிக் கொள்ளும்படி கூறினார். ஆனால் அந்த போலீஸ்காரரர் 'நான் கடமையில் கண்டிப்பானவன். நான் யாருடைய தயவையும் எதிர்பார்த்து வாழ்பவன் அல்லன். பஸ் வரும். நான் பஸ்ஸில் ஏறி போய் விடுவேன்', என்றார். அப்போது மணி பதினொன்றரை. 'பேருந்து காலையில் தான் வரும். விடிகாலை வரை நீங்கள் இங்கு நின்று கொண்டு இருக்கப் போகிறீர்களா? இது உங்களுக்குப் பாதுகாப்பான இடம் அல்ல. உங்களால் எனக்கும், என்னால் உங்களுக்கும் எதுவும் ஆகப்போவதில்லை. அதனால் அஞ்ச வேண்டாம். தயங்காதீர்கள். நான் உங்களை ஊருக்குக் கொண்டுபோய் விட்டு விடுகிறேன்' என்று எம்.ஜி.ஆர். அவரிடம் இதமாக கூறினார். அந்தப் போலீஸ்காரரர் கடமை உணர்வு மிக்கவர்

அவர் யாருடைய தயவையும் எதிர்பார்க்காத தன்மான சிங்கம் என்பதால் எம்.ஜி.ஆர். அவருடைய குணத்தைப் போற்றி பொறுமையாகப் பேசினார். இரண்டு மூன்று முறை எடுத்துச் சொல்லிய பிறகுதான் அந்த போலீஸ்காரர் தயக்கம் நீங்கி இவருடைய காருக்குள் ஏறி உட்கார்ந்தார். அந்த போலீஸ்காரர் வேளை பார்க்கும் காவல் நிலையம் மற்றும் குடும்பம் பற்றி எம்.ஜி.ஆர். விசாரித்துக் கொண்டு வந்தார். அவர் இறங்க வேண்டிய இடத்தில் அவரை இறக்கி விட்டுவிட்டு எம்.ஜி.ஆர். போய்விட்டார்.

எம்.ஜி.ஆர். அந்த கடமை உணர்ச்சி மிக்க போலீஸ்காரர் வேலை செய்யும் காவல் நிலையத்தில் இருந்த மேலதிகாரியிடம் அவரைப் பற்றி விசாரித்தார். அவர் உண்மையிலேயே கடமை உணர்வு மிக்கவர், யாரிடமும் லஞ்சம் வாங்க மாட்டார், மிகச்சிறந்த பண்பாளர் என்பதை அறிந்துகொண்டார். ஆனால் அவர் மூன்று பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு திருமணச் செலவுக்கு பணம் இல்லாமல் திருமணம் செய்து கொடுக்க முடியாமல் சிரமப்படுகிறார் என்றும் மேலதிகாரி கூறியதும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உதவத் தயாராக இருப்பதாகச் சொல்லி, அத்தகவலை மேலதிகாரியை விட்டு அந்த ‘போலீஸ்காரரிடம், நல்ல விதமாக அவரிடம் எடுத்துக் கூறும்படி செய்தார். அப்போது எம்.ஜி.ஆர். முதலமைச்சர் கிடையாது அவர் ஒரு நடிகர் மட்டுமே. எனவே எம்.ஜி.ஆர். ‘நான் ஒரு நடிகன் எனக்கு அவருடைய எந்த உதவியும் தேவையில்லை. மனிதாபிமான அடிப்படையில் உதவுகிறேன். எவ்விதப் பிரதிபலனும் எதிர்பார்த்து உதவவில்லை’ என்பதைத் தெளிவாக அவருக்குப் புரிய வையுங்கள். அவர் மனம் வேதனைப்படக் கூடாது’ என்றார்.. இப்படி வலிய போய் அந்த போலீஸ்காரருக்கு உதவ வேண்டிய அவசியமே எம்.ஜி.ஆருக்கு கிடையாது.

கடமை உணர்வு மிக்க போலீஸ்காரர் உதவி செய்ய முன்வந்த எம்.ஜி.ஆரை முகத்தில் அடித்தாற்போல கடுமையாகப் பேசியவர். காரில் ஏறிக் கொள்ளுங்கள் என்று எம்.ஜி.ஆர். அவரை வேண்டிக் கேட்டுக் கொண்டபோது

பாராமுகமாக நடந்துகொண்டவர்.அவருக்கு உதவ வேண்டிய அவசியம் யாருக்கும் கிடையாது. அவர் ஒரு அரசுப் பணியாளர் அவருக்கு மாதச் சம்பளம் வந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் எம்.ஜி.ஆர். ஒரு நல்லவர், நேர்மையானவர் தனது பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுக்க வசதி இல்லாமல் சிரமப்படுகிறார் என்று தானே வலியப் போய் அவருடைய மேலதிகாரியிடம் பேசி அவரை சமாதானப்படுத்தி பிறகு அவருடைய மூன்று பெண் குழந்தைகளுக்கும் திருமணத்துக்கான உதவியை அளித்தார். இன்றைக்கும் அந்த போலீஸ்காரரர் யார் என்பது வெளியில் சொல்லப்படவில்லை.. ஆனால் எம்.ஜி.ஆர். தன்னிடம் முகத்தை திருப்பிக் கொண்டு பாராமுகமாக இருக்கின்றவர்களுக்கும் வலியப் போய் உதவும் பண்பாளர். மனித நேயம் மிக்கவர் என்பதற்கு இந்தஸ் சம்பவமும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

எம்.ஜி.ஆரை மதிக்காதவருக்கு அவர் மனமுவந்து உதவி செய்த இன்னொரு அனுபவமும் உண்டு. ஒரு சமஸ்கிருதப் பேராசிரியர். முதியவர். நிரம்பப் படித்தவர் அவரது விசிட்டிங் கார்டில் பத்து வரிகளுக்கு அவர் பட்டங்கள் இடம்பெற்றிருந்தன. அவர் ஒருமுறை எம்.ஜி.ஆரை பார்க்க வந்திருந்தார். அவர் வெளியே உட்கார்ந்து இருப்பதை கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர். அவரை முதலில் அழைத்தார். அழைத்ததும் அவரிடம் என்ன வேண்டும் என்று கேட்டார். அவர் தான் ஒரு சமஸ்கிருத பேராசிரியர் என்றும் தான் ஓய்வு பெறப் போவதாகவும் தனக்குக் குடியிருக்க சொந்த வீடு இல்லை என்றும் தெரிவித்தார். அப்போது எம்.ஜி.ஆர். சரி உதவுகிறேன் என்று சொல்லிவிட்டு அருகில் இருந்த தனது உதவியாளரிடம் அந்த பேராசிரியருக்கு பால் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னார். அந்த பேராசிரியர் தன் வீடு தவிர வேறு யார் வீட்டிலும் தான் எதுவும் சாப்பிடுவது இல்லைகிடையாது என்று உறுதியான குரலில் தெரிவித்தார். எம்.ஜி.ஆர். புன்னகைத்தபடி சரி பழம் ஏதாவது சாப்பிடுங்கள் என்றார். ‘நான் யார் வீட்டிலும் எதுவும் சாப்பிட மாட்டேன். அது என்னுடைய ஆசாரத்திற்கு கேடானது’ என்று மீண்டும் உறுதியாகத் தெரிவித்தார். எம்.ஜி.ஆர். மீண்டும் சிரித்தபடி

அவரிடம் ‘சரி தண்ணிருக்கு தோஷமில்லை; தண்ணீராவது குடியுங்கள்’ என்றார். அந்த பேராசிரியர் தண்ணீர் கூட குடிக்க மறுத்து விட்டார். அருகில் இருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்த நிலையிலும் எம்.ஜி.ஆர். கோபப்படவில்லை தன் வீட்டில் கை நனைக்காத, பச்சைத் தண்ணீர்கூட குடிக்க விரும்பாத அந்தப் பேராசிரியரிடம் எம்.ஜி.ஆர். கோபப்படவில்லை. அவர் அவருடைய ஆசாரத்தின் தீவிரத்தை மதித்து அவரரிடம் கோபப்படாமல் அவர் கேட்டபடி அவருக்கு ஒரு சொந்த வீடு ஒதுக்கீடு செய்து கொடுத்தார்.

எம்.ஜி.ஆர். தன்னிடம் வேறு முகம் காட்டியவர்களுக்கும் கூட அவர்களின் தகுதியை அறிந்து உதவி செய்து இருக்கின்றார் என்றால் கொடுப்பதால் கிடைக்கும் மகிழ்ச்சி, தகுதியானவர்களுக்குக் கண்டிப்பாக கொடுக்க வேண்டும் அவர்கள் நம்மிடம் வந்து கெஞ்சி நிற்கமாட்டார்கள் நாம் வலியப் போய் அவர்களுக்கு உதவி அவர்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டும். இது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரின் முதல் கடமையாகும் என்பதை அவர் உணர்ந்து இருந்ததால் எம்.ஜி.ஆர். இது போன்றவர்களுக்கு உதவினார். இதுவே அவரது மனித நேயப் பண்பின் உச்ச நிலை ஆகும். இது போன்ற நிக்ளவுகளே எம்.ஜி.ஆர். மனிதருள் மாணிக்கமாக் திகழ்ந்தார் என்பதற்கு சான்று பகர்கின்றன. மனிதன் என்பவன் யார், நல்ல மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்று பண்புள்ள மனிதனைப் பற்றிப் பாடுவதற்கு முழுத் தகுதியும் பெற்றவர் எம்.ஜி.ஆர். என்பதற்கும் இச்சம்பவங்களே ஆதாரம்.

குடிகாரன் மனிதனா?

எம்.ஜி.ஆர். மனிதனுக்கு மனிதன் என்பவன் நற்பண்புகள் கொண்டவனாக இருக்க வேண்டும் தீய பழக்க வழக்கங்களுக்கு ஆட்படாதவனாக இருக்க வேண்டும். மதுவை அருந்தும் ஒரு மனிதன் அந்த நேரத்தில் மனிதனாகவே இருக்க மாட்டான். இதை கண்ணன் என் காதலன் (1968) படத்தில் ஒரு வசனத்தின் மூலமாக எம்.ஜி.ஆர். எடுத்துக் கூறுவார். மது அருந்தும் ஒருவன் தன்னுடைய

மானத்தைக் காக்கும் ஆடைகள் நெகிழ்ந்திருப்பதைக் கூட அறியாமல் இருப்பான். குடி அவனுடைய மானத்தையே கெடுத்துவிடுகிறது என்பார்.

எம்.ஜி.ஆர். தன்னுடைய 100 ஆவது படமான ஒளிவிளக்கில் மது அருந்தக் கூடாது; மது அருந்தினால் என்னென்ன கெடுதல்கள் ஏற்படும் என்பதை ஒரு பாடலின் வழியாக கற்றுத்தருவார்.

"தைரியமாக சொல் நீ மனிதன் தானா?

மனிதன் தானா? இல்லை!

நீ தான் ஒரு மிருகம் -

இந்த மதுவில் விழும் நேரம்

மனமும் நல்ல குணமும்

உன் நினைவை விட்டு விலகும்

மானைப் போல மானம் என்பாய்

மதயானை நீயே என்பாய்

வேங்கை போல் வீரம் என்பாய்

நீ தான் ஒரு மிருகம் -

இந்த மதுவில் விழும் நேரம்"

என்ற வாலியின் வரிகள் மனிதன் என்பவன் நற்பண்புகளுடன் கூடியவனாக இருக்க வேண்டுமே தவிர தீய பழக்கங்களுக்கு ஆட்படக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்துகிறது. இப்பாடலை மாஸ்க் ஷாட் உத்திமுறை மூலமாக ஐந்து எம்.ஜி.ஆரை ஒரே திரையில் காட்டி ரசிகர்கள் மனதில் பாடலின் கருத்தை ஆழமாகப் பதிய வைத்தார். இதற்கு அவர் பாட்டு, ஆட்டம், கேமரா தொழில்நுட்பம், வண்ணம் போன்றபலவற்றையும் சரியாக இணைத்தார். திரைப்படங்களில் இவை அனைத்தையும் சிறப்பாக ஒன்றிணைத்து நல்ல கருத்துக்களை மக்கள் மனதில் எம்.ஜி.ஆர். பதிய வைத்தார்.

எம்.ஜி.ஆர். முதல்வரான போது அவர் நடிக்காமல் விட்டுவிட்டு வந்த படங்கள் பத்துக்கு மேல் இருந்தன. எனவே அவர் மாலையில் சிறிது நேரம் ஒதுக்கி அவற்றை நடித்துக் கொடுக்க வேண்டும் என்று தயாரிப்பாளர்கள் வேண்டினர். அதற்கு அனுமதி கிடையாது. மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்த பிரதமர் மொரார்ஜி தேசாய். எம்.ஜி.ஆர். பால் தவிர டீ காபி மது போன்றவற்றை அருந்துவது கிடையாது என்பாதை அறித்தார். எம்.ஜி.ஆரின் இந்தப் பண்புகளைக் கேள்விப்பட்டதும் மிகவும் ஆச்சரியப்பட்டு அவர் சினிமாவில் பல நல்ல கருத்துகளை தன்னுடைய வசனங்களிலும் பாடல்களிலும் எடுத்துச் சொல்வதையும் அறிந்து அவர் முதலமைச்சர் ஆன பிறகும் அவர் சினிமாவில் நடிப்பதற்கு அனுமதி வழங்கினார். கருணாநிதி அனுமதி கிடைக்காது அதனால் எம்.ஜி.ஆர். நடிப்பதை தான் விரும்புவார். முதல்வர் பதவியை விட்டு கொடுப்பார் என்று பகல் கனவு கண்டார். ஆனால் பிரதமரிடம் இருந்து அனுமதி கிடைத்ததும் எம்.ஜி.ஆர். பகலில் மீட்டிங், இரவில் சூட்டிங் என்று தினத்தந்தியில் ஒரு செய்தி வெளியிட்டார்.

தினத்தந்தி நாளிதழில் எம்.ஜி.ஆர். பகலில் தன்னுடைய முதல் அமைச்சர் பொறுப்புகளை கவனித்துக் கொண்டு, இரவில் படப்பிடிப்பில் கலந்து கொள்வேன் என்றும் தெரிவித்திருந்தார். இது கருணாநிதிக்கு அதிர்ச்சியை அளித்தது. நடிகன் நாடாள முடியுமா என்று கெட்ட கருணாநிதிக்கு முன்பு நாட்டை சிறப்பாக ஆல வேண்டும் என்று முடிவு செய்த எம்.ஜி.ஆர். நடிக்க வேண்டாம் என முடிவு செய்தார். அவர் அதன் பிறகு எந்த படத்திலும் நடிக்க வில்லை. கருணாநிதி தனக்கு அரசியலில் வலுவான ஏதிரி உறுதியாகி விட்டதை அறிந்துகொண்டார்.

மனிதனின் அடிப்படை தேவை பொறுமை

பொறுமை இல்லாமல் அவசரமாக எதையும் செய்யும் மனிதன் வீணான பிரச்சனைகளை வலுவில் வரவழைத்துக் கொள்கிறான். எனவே மனிதனுக்கு பொறுமை மிகவும் அவசியம். நிதானமாக செயல்படுபவனே வாழ்க்கையில்

நிரந்தர வெற்றியை அடைய முடியும். இந்த நிதானம் எம்.ஜி.ஆருடைய வாழ்க்கையில் ஆரம்ப காலத்திலிருந்து இறுதிக்காலம் வரை இருந்தது. அவர் அரசியலுக்கு வரலாமா வேண்டாமா என்பதைக்கூட எடுத்த எடுப்பில் முடிவு செய்துவிட வில்லை. 1969இல் கலைஞரை முதலமைச்சராக்கிய எம்.ஜி.ஆர்., அவருடைய போக்கு மாறி விட்டதைப் புரிந்து கொண்டதும் இனி தமிழகத்தை இவரால் காப்பாற்ற இயலாது; இவருடைய கட்சி ஊழல் கட்சியாக மாறிக்கொண்டு வருகிறது. கட்சியில் இருப்பவர்கள் லஞ்சப் பேர்வழிகள் ஆதரிக்கின்றனர் என்பதைத் தெளிவாக அறிந்து கொண்டு இவர்களை இனித் திருத்த இயலாது என்ற மன உறுதிப்பாட்டுடன் 1969 நாகிரெட்டியாரை அழைத்து தான் அரசியலுக்கு வரலாமா கூடாதா என்பது பற்றி மக்களின் கருத்தை அறிய விரும்புகிறேன் என்னை வைத்து ஒரு படம் எடுங்கள். அடிமைப் பெண்ணுக்கு வைத்திருக்கும் கால் ஷீட்டை உங்கள் படத்துக்கு தருகிறேன் என்றார்.

நாகி ரெட்டியார் ஒரே மாதத்தில் எம்.ஜி.ஆரை வைத்து நம் நாடு (1969) என்ற படத்தை எடுத்து ரிலிஸ் செய்தார். எம்.ஜி.ஆரே இப்படத்தை சொந்தப் படமாக எடுத்து இருக்கலாம். ஆனால் தன்னுடைய எண்ணம் வெளியே



தெரிந்துவிடும் என்பதால் வேறு ஒருவர் படத்தில் நடிப்பதாக காட்டிக்கொள்வதற்காக நாகிரெட்டியாரை அழைத்து நம் நாடு படத்தை எடுக்கச் சொன்னார். அந்தப் படம் திரைக்கு வந்ததும் இருவரும் வந்து திரையரங்கில் நின்று படம் பார்க்கிறார்கள். மக்களின் ஆரவாரத்தையும் வரவேற்பையும் கேட்டதும், எம்.ஜி.ஆர். ‘‘நான் வெற்றி பெற்று விட்டேன் என் ரசிகர்கள் எனக்கு முழு ஆதரவு அளித்து விட்டனர்’ என்று நாகிரெட்டியாரின் கைகளைக் குலுக்கிக் கொண்டே சொன்னார்.

நம் நாடு படம் வந்ததும் எம்.ஜி.ஆர். அரசியலில் புது கட்சி ஆரம்பிக்க வில்லை. நிதானமாகச் செயல்பட்டார். திமுகவின் அனைத்து அசைவுகளையும் கருணாநிதியின் நடவடிக்கைகளையும் கவனித்துக் கொண்டே வந்தார். கருணாநிதியின் மகன் மு க முத்து சினிமாவில் அறிமுகம், மதுக்கடைகளை திறத்தல் என கருணாநிதி எம்.ஜி.ஆருக்கு எதிரான நடவடிக்கைகளில் துணிந்து செயல்பட்டார். எம்.ஜி.ஆர். கவனிக்கிறார் என்பதை கருணாநிதி கவனிக்கவில்லை. அவர் ஒரு சாதாரன் நடிகர் அவர் என்ன செய்துவிடப் போகிறார். மூ க முத்து எம்.ஜி.ஆர். போலவே நடிப்பதால் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் தன் மகன் பக்கம் மாறிவிடுவார்கள். மற்றவர்களை சாராயக் கடைக்குள் இழுத்துவிடலாம் என்று கருணாநிதி திட்டமிட்டார், கருணாநிதியின் கணக்கை எம்.ஜி.ஆர். அறிவார் ஆனால் எம்.ஜி.ஆரின் பொறுமையையும் புத்தி கூர்மையையும் கருணாநிதி உணரவில்லை. இதற்கிடையே தன் விட்டு கடனில் மூழ்ப் போகிறது என்று நீலிக் கண்ணீர் விட்டு கருணாநிதியும் முரசொலி மாறனும் எம்.ஜி.ஆரிடம் இலவசமாக் எங்கள் தங்கம் என்று ஒரு படம் நடித்து வாங்கிவிட்டனர். அப்போதும் எம்.ஜி.ஆர். தனது திட்டத்தை வெளிப்படுத்தவில்லை. ஒரு துறையில் இறங்கினால் சிறப்பான வெற்றி பெற வேண்டும் என்ற கருத்துடைய எம்.ஜி.ஆர். சினிமா உலகிலும் நல்ல உச்ச நிலையில் இருப்பதால் அவர் பொறுமையாக இருந்து வந்தார். சினிமாவையும் விட்டுவிட அவருக்கு மனமில்லை. சரியான சந்தர்ப்பம் வரும் வரை அவர் காத்துக் கொண்டிருந்தார்.

1972இல் திமுக இவரை கட்சியை விட்டு தூக்கியதும் மக்களின் ஆதரவை எதிர்பார்த்தார். மக்களும் இவருக்கு பூரண ஆதரவு கொடுத்து இவர் தொடங்குவதற்கு முன்பே ரசிகர்கள் ஆங்காங்கே எம்.ஜி.ஆர். பெயரில் கட்சியை தொடங்கி விட்டனர். இதை அறிந்ததும் இவர் சொந்தமாக அண்ணா திமுக என்ற கட்சியைத் தொடங்கினார். இவர் வாழ்க்கையில் இவர் காட்டிய நிதானமே இவரை தலைவர் ஆக்கியது. இவருக்கு மகத்தான வரலாறு காணாத வெற்றியைத் தந்தது. அதே வேளையில் இவர் கருணை உள்ளத்தோடு அனைவருக்கும் உதவிகள் செய்து கொண்டு வந்தார் தன்னுடைய கடமைகளையும் செவ்வனே செய்து கொண்டு வந்தார்.

“கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம்

கடமை இருந்தால் வீரன் ஆகலாம்

பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்

இந்த மூன்றும் இருந்தால் தலைவன் ஆகலாம்”

என்ற பாடல் வரிகளுக்கு பொருத்தமாக எம்.ஜி.ஆருடைய வாழ்க்கை அமைந்திருந்தது.

நிறைவாக எம்.ஜி.ஆர். படப் பாடல்களிலும் அவரது வாழ்க்கை மூலமாகவும் மனிதன் என்பவன் யார்? அவன் எப்படி வாழ் வேண்டும்? என்பன குறித்து அறிந்துகொண்ட கருத்துக்களை தொகுத்துக் காண்போம். ஆக நல்ல மனிதன் என்பவன் பிறப்பால் வளர்ப்பால் சிறப்படைவதில்லை. அவன் மனத்தாலும் இனத்தாலும் சிறப்படைகின்றான். மானம் பெரிதென்று வாழும் மனிதர்களே சிறந்த மனிதர்கள் ஆவர். ஒவ்வொருவரும் மற்றவர்களின் வேதனை கண்டு இரக்கப்படவேண்டும். மனிதன் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசக்கூடாது. ஒரு மனிதன் வாழும் ஆண்டுகள் முக்கியமல்ல; வாழும் முறையே முக்கியம், அதுவே சமுதாயத்தால் போற்றப்படும். மனிதர்கள் பசுத்தோல் போர்த்திய புலிகளாக விளங்கக் கூடாது.



மனிதர் உள்ளது உள்ளபடி ஒப்பனை இன்றி தங்களுடைய மனதையும் நடவடிக்கைகளையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். மது மாது போன்ற தீய பழக்க வழக்கங்களைப் பழகக்கூடாது. மனிதன் மனதாலும் உடலாலும் தூயவனாக இருக்க வேண்டும். மனதில் தூய்மையும் நாவில் வாய்மையும் கொண்டவனாக இருக்கவேண்டும். கருணை கடமை பொறுமை ஆகிய பண்புகளைக் கொண்டவனாக இருக்கவேண்டும். இப்படி வாழ்பவனே சிறந்த மனிதன் என்று ஒரு சிறந்த மனிதன் எப்படி வாழ வேண்டும், என்ற இலக்கணத்தை படைத்தாலும் நிஜத்தாலும் வகுத்துக் கொடுத்தவர் எம்.ஜி.ஆர்.

6. எம்.ஜி.ஆர். பட பாடல்களில் மனித தெய்வங்கள்

எம்.ஜி.ஆர் படங்களில் அவர் இருக்கும் அறை அல்லது வீடு ஒரு இலட்சிய தமிழனின் வீடாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும். அதன் சுவர்களில் அண்ணா, பாரதியார், இயேசு கிறிஸ்து, புத்தர் போன்ற பெரியவர்களின் படங்கள் இருப்பதைப் பார்க்கலாம். சில பாடல் காட்சிகளில் இவர்களின் சிலைகளும் காண்பிக்கப்படும். இவர்கள் மனித குல வழிகாட்டிகள். இவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி நடந்தால் மனிதன் செம்மையான வாழ்க்கையை வாழலாம் என்பது எம்.ஜி.ஆரின் கொள்கை. அவர் அதனை தன்னுடைய படங்களிலும் பாடல்களிலும் வெளிப்படுத்தினார். கடவுள் இல்லை என்ற திமுகவின் உறுப்பினராக எம்.ஜி.ஆர் இருந்ததால் அவரது விட்டில் சாமி படங்கள் இருப்பதில்லை. மனிதராய்ப் பிறந்து தெய்வமாய்ப் போற்றப்படுவோரின் படங்களே அவர் வீட்டுச் சுவற்றை அலங்கரித்தன. பின்னர் ஒளிவிளக்கிலும் (1968), நம் நாடு (1969), என் அண்ணன் (1970) ஆகிய படங்களில் எம்.ஜி.ஆர் வீட்டில் சாமி படம் எம்.ஜி.ஆர் கோயிலுக்கு போவது போன்ற காட்சிகள் இடம்பெற்றன. அண்ணா திமுக ஆரம்பித்த பிறகு அவர் தன் படங்களில் இந்து சாமி படங்களைக் காட்டினார். பல்லாண்டு வாழ்க (1975) படத்தில் முருகன் சங்கரர் போன்றோரின் படங்கள் மாட்டப்பட்டப்பட்டிருக்கும். அவர் தன் கட்சியை கடவுள் மறுப்பு கட்சியாகவோ இந்து வெறுப்பு கட்சியாகவோ உருவாக்கவில்லை. சாதி மதம் பதமற்ற மனித நேயக் கட்சியாக உருவாக்கினார்.

புத்தர், இயேசு கிறிஸ்து, காந்தியடிகள், அண்ணா ஆகியோரின் பெயர்கள் அவர் படங்களில் தத்துவப் பாடல்களில் தனிப்பாடல்களில் இடம்பெற்றன. எங்க வீட்டுப்பிள்ளை (1965) படத்தில் தான் முதன்முதலாக காந்தி இயேசு போன்றவர்கள் எம்.ஜி.ஆரின் தனிப்பாடல்களில் இடம் பெற்றனர். நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால் பாட்டில்

முன்பு ஏசு வந்தார்

பின்பு காந்தி வந்தார்

இந்த மானிடர் திருந்திடப் பிறந்தார்

இவர் திருந்தவில்லை - மனம்

வருந்தவில்லை - அந்த

மேலோர் சொன்னதை மறந்தார்

என்ற வரிகள் இயேசுவும் காந்தியும் மனிதர்களைத் திருத்துவதற்கு மானிடப் பிறப்பெடுத்து வந்திருந்த போதும் கூட இவர்கள் திருந்த வில்லை என்று கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது.



இதே பாடலில் அண்ணாவை மறைமுகமாகக் குறிப்பிடும் ஒரு வாசகமும் ஒரு வரியும் இடம்பெற்றது.

ஒரு தலைவன் உண்டு அவன்

கொள்கை உண்டு அதை

எப்போதும் காத்திருப்பேன்

என்ற வரிகளில் ஒரு தலைவன் என்று எம்.ஜி.ஆர் குறிப்பிடுவது திமுக கட்சியின் தலைவரான அறிஞர் அண்ணாவை என்பது ரசிகர்களுக்குத் தெளிவாக தெரியும் இருப்பினும் இந்த வரியில் அண்ணா என்ற பெயரைச் சேர்க்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் அப்போது காங்கிரஸ் ஆட்சி நடந்ததும் அக்காலத் தணிக்கை அதிகாரிகள் எம்.ஜி.ஆர் பாட்டுகளை கடுமையாக வெட்டித் தள்ளியதும் ஆகும். பணம் படைத்தவன் *(1965)* படத்தில்,

எனக்கொரு மகன் பிறப்பான் அவன்

என்னைப் போலவே இருப்பான்

தனக்கொரு பாதை வகுக்காமல்

என் தலைவன் வழியிலே நடப்பான்

எனத் தொடங்கிய பாடல் எம்.ஜி.ஆர் தன்னுடைய மகனைப்பற்றி பாடுவதாக அமைந்த கற்பனைப் பாடலாகும்.



என் தலைவன் என்று குறிப்பிடுவது இப்பாடலிலும் அறிஞர் அண்ணாவைத் தான் என்றாலும் அப்போதும் காங்கிரஸ் ஆட்சி நடந்ததால் அண்ணா என்று பெயரை குறிப்பிடவில்லை இதே,

சாந்தி வழி என்று காந்தி வழி சென்று

கருணை தேன் கொண்டு தருவான்

என்ற வரிகள் அமைதி வழியிலான சத்தியாக்கிரக வழியை காட்டிய காந்தியின் வழியில் தன் மகன் நடப்பான் என்பதைக் குறிப்பிடுகின்றன. ஒரு குழந்தை அண்ணாவின் பாதையில் காந்தியின் வழியில் நடந்தால் அக்குழந்தை சமூகத்திற்கு பயனுள்ள ஒரு நல்ல குடிமகனாக விளங்குவான் என்ற கருத்தை வெளிப்படுத்தவே இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ளன.

சந்திரோதயம் (1966) படத்தில் ஏழைகளுக்கு இரங்காத பணக்காரனின் கொடுமைகளை கண்டு மனம் பொறுக்காமல் மழை வெள்ளத்தில் வீடு குடிசைகளை இழந்த அந்த ஏழை மக்களை அழைத்துக் கொண்டு புகலிடம் தேடி வரும் எம்.ஜி.ஆர் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளையும் வர்க்க வேதங்களையும் குறிப்பிடும் விதமாக ஒரு பாடல் பாடுவார். அப்பாடல்,

புத்தன் இயேசு காந்தி பிறந்தது

பூமியில் எதற்காக தோழா

ஏழை நமக்காக

கங்கை யமுனை காவிரி வைகை

ஓடுவது எதற்காக

நாளும் உழைத்து தாகம் எடுத்த

தோழர்கள் நமக்காக

என்ற பல்லவியோடு தொடங்கும். இப்பாடல் வரிகள் புத்தன் இயேசு காந்தி ஆகியோர் மக்கள் நன்மை



பெறுவதற்காக அவர்களுக்கு நல்வழி காட்டுவதற்காக பிறந்தவர்கள். அவர்களை பின்பற்றி நடக்க வேண்டும் என்று வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

திமுக ஆட்சியின்போது கலைஞர் கருணாநிதியின் வீடு கடனில் மூழ்கப் போகிறது என்பதால் அவ்வீட்டை மீட்டு கொடுப்பதற்காக அவர் கேட்டுக் கொண்டதன் பேரில் எம்.ஜி.ஆர் அவருக்கு எங்கள் தங்கம் என்ற படத்தை இலவசமாக நடித்துக் கொடுத்தார். இப்படத்தில் நடித்ததற்காக ஜெயலலிதாவும் கருணாநிதியிடம் பணம் வாங்கவில்லை. இப்படத்தில் திமுக, அண்ணா, கருணாநிதி ஆகியோரின் சிறப்புகளை எடுத்துச் சொல்லும் வகையில் ஒரு பாடல் வேண்டும் என்று எம்.ஜி.ஆர் வாலியிடம் கேட்டு எழுதி வாங்கினார். அந்தப் பாடலில்

சிலுவையில் இயேசு மறஞ்சாரு

மக்கள் சித்தமெல்லாம் நெறஞ்சாரு

குண்டுகள் போட்டு துளைச்சாங்க - ஆனால்

காந்தியும் லிங்கனும் பிழைச்சாங்க

சாதனப் பெட்டியில் உறங்குகிறார் அண்ணா

சரித்திரப் புகழுடன் விளஙகுகிறார்

எதையும் தாங்கும் இதயம் கொண்டு அண்ணன்

எங்களை வாழ்ந்திடச் சொன்னதுண்டு

அண்ணன் அன்று நல்ல நல்ல கருத்து

அழகு தமிழில் சொல்லி சொல்லி கொடுத்து

வளர்ந்த கூட்டமடா – எதிர்த்தால்

வாலை நறுக்குமடா

என்ற வரிகள் உடலுக்கு ஏற்படும் அழிவு அல்லது மரணம் என்பது நிரந்தரமானது அல்ல. இயேசு காந்தி லிங்கன் அண்ணா ஆகியோர் புகழுடம்பு பெற்றவர்கள் அவருடைய புகழ் காலங்காலமாக நிலைத்து நிற்கிறது என்பதை எடுத்துக்காட்டும் விதமாக இப்பாடல் வரிகள் அமைந்துள்ளன. இப்பாடலில்



அண்ணா தமது கட்சியினருடன் கொண்ட அன்புறவும் விளக்கப்படுகிறது. எம்.ஜி.ஆர் கேட்டுக்கொண்டபடி வாலி எழுதி தந்த பாடல் இது.

ஆனந்த ஜோதி (1963) படத்தில் பொய்யான குற்றச்சாட்டுக்கு ஆளாகி போலீசாரின் கண்களுக்கு மறைந்து வாழும் ஆனந்தன் ஆக நடித்த எம்.ஜி.ஆர் இந்த உலகில் கடவுள் இருக்கின்றாரா? கடவுள் இருந்தால் இதுபோன்ற அநியாயங்கள் அரங்கேறுமா? நியாயங்கள் எல்லாம் உறங்கிக் கொண்டிருக்கின்றன செயல்படாமல் இருக்கின்றனவே என்ற ஏக்கத்துடன் ஒரு பாடலைப் பாடும் காட்சியில்

கடவுள் இருக்கின்றான் அது உன்

கண்ணுக்கு தெரிகின்றதா

காற்றினில் ஆடுகின்றான் அது உன்

கண்ணுக்கு தெரிகின்றதா

எனத் தொடங்கும் இந்தப் பாடலில் கடவுளைப் பற்றிய கருத்துக்கள் மிக நுட்பமாக சொல்லப்பட்டிருக்கும். ஆனால் இந்த பாடல் கடவுளுக்கான பாடல் அல்ல. மனிதன் சமுக அவலங்களால் சோர்வடையும் போது தவறான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகும்போது மனச்சோர்வு மன அழுத்தத்தால் காரணமாக அவன் தவறான முடிவுகளை எடுத்து விடக்கூடாது என்பதற்காக எழுதப்பட்ட பாடலாகும்.

ஆனந்த் ஜோதி படப்பாடல், துன்பம் வரும் நேரத்தில் அவனுக்கு தன்னம்பிக்கையூட்டும் விதமாக அமைந்த பாடலாக அமைந்தது.

புத்தன் மறைந்து விட்டான் அவன் தன்

போதனை மறைகின்றதா

சத்தியம் தோற்றதுண்டா? உலகில்

தர்மம் அழிந்ததுண்டா

என்ற வரிகள் மனிதர்கள் மறைந்தாலும் அவர்கள் செய்த செயல்கள் அவர்கள் பேசிய பேச்சுக்கள் அவர்களுடைய நடத்தை ஆகியன காலங்காலமாக நிற்கும். எனவே புத்தர் மறைந்தாலும் அவருடைய போதனை மறையவில்லை. அவருடைய போதனையான அறம் வெல்லும் என்பது காலத்தால் அழிந்துவிடவில்லை.. சத்தியம் தோற்காது தர்மம் அழியாது என்பன புத்தரின் பொன்மொழிகள் ஆகும்.

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்

தர்மம் மறுபடியும் வெல்லும்

என்றார் பாரதியார். எனவே நல்லவர்களுக்கு வரும் துன்பங்கள் எல்லாம் மேகம் நிலவை மூடும் மேகத்தைப் போன்ற விரைவில் விலகிவிடும். நிலவு தன் சத்திய ஒளியைக் காட்டும். இது போன்ற நேரங்களில் மனச் சோர்வு அடையாமல் மேற்கொண்டு செய்ய வேண்டியது என்ன என்பதை தெளிவான சிந்தனையுடன் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும் என்று ரசிகர்களுக்கு எடுத்துச் செல்லும் வகையில் இப்பாடல்கள் தன்னம்பிக்கை ஊட்டும் பாடல்களாக எம்.ஜி.ஆர் படங்களில் இடம் பெறுகின்றன.

நம்நாடு படத்தில் சிறுவர்களுக்கு அறிவுரை சொல்லும் பாடலில் எம்.ஜி.ஆர் மனித தெய்வங்களை போற்றுகிறார். நிஜத்திலும் இப்படத்திலும் தன் அண்ணன் பிள்ளைகளைத் தன் பிள்ளைகள் போலவே வளர்த்து வந்த எம்.ஜி.ஆர்

ஜனநாயகத்தில் எல்லோரும் மன்னர்

தென்னாட்டு காந்தி அந்நாளில் சொன்னார்

என்று அண்ணாவைத் தென்னாட்டு காந்தி என்று குறிப்பிட்டு இருப்பார்.

அண்ணா திமுக கட்சியின் தோற்றத்திற்குப் பிறகு அண்ணாவின் முக்கியத்துவம் அவரது கட்சியிலும் படத்திலும் இன்னும் அதிகமாயிற்று. தன்னுடைய கட்சி தான் அண்ணா தொடங்கிய கட்சி என்றும் கருணாநிதியின் கட்சி ஊழல் மிகுந்தது என்றும் அது அண்ணாவின்

கொள்கைகளைப் பின்பற்றாத கட்சி என்றும் பாடல்கள் மற்றும் படங்கள் மூலமாக பிரச்சாரம் செய்தார். இவருடைய கருத்தை மக்கள் ஏற்றுற்றுக் கொள்வதற்காகவும் எம்.ஜி.ஆர் அண்ணாவின் கொள்கைகளைத் திரும்பத் திரும்ப படத்திலும் மேடையிலும் நேரிலும் மக்கள் முன்பாக எடுத்துக் கூறினார். தன் கட்சிக்கான கொள்கை அண்ணாயிசம் என புதிய அரசியல் தத்துவத்தை வரையறுத்தார்.

முதலமைச்சர் ஆன பிறகும் இது அண்ணாவின் அரசு என்று எம்.ஜி.ஆர் கூறினாரே ஒழிய ஜெயலலிதாவைப் போல 'எனது ஆட்சி' 'எனது அரசு' என்று அவர் குறிப்பிடவி ல்லை. ஆக அண்ணாவின் அரசு என்பது எம்.ஜி.ஆரின் அரசு என்னுடைய ஆட்சி என்பது ஜெயலலிதாவின் ஆட்சி என்று இரண்டு வகைப்பாடுகள் இருக்கின்றனவே தவிர எம்.ஜி.ஆரின் அரசு எம்.ஜி.ஆரின் ஆட்சி என்பது அவருடைய வார்த்தையில் வரலாற்றில் இடம் பெறவில்லை.

எம்.ஜி.ஆரின் அரசு தேர்தல் பிரச்சாரத்தில் கூட விளம்பர வாசகமாக இடம் பெறவில்லை. ஆனால் மக்கள் மத்தியில் பசுமரத்தாணி போல எம்.ஜி.ஆர் ஆட்சியில் நடந்த நலத்திட்டங்களும் நன்மைகளும் பதிந்த விட்டன. மீனவ நண்பன் மீனவ நண்பன் (1974) படத்தில் பணக்கார மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் ஏற்படும் போராட்டம் வர்க்கப் போராட்டமாக காட்டப்படும். இந்தப் போராட்டத்தில் தான் நிச்சயமாக வெற்றி அடைவேன் என்ற உறுதிப்பாட்டுடன் அவர் எதிரிகளுக்கு சவால் விட்டு பாடுவார். அந்தப் பாடல்

நேருக்கு நேராய் வரட்டும்

நெஞ்சில் துணிவிருந்தால்

என் கேள்விக்கு பதில் தரட்டும்

நேர்மைத் திறம் இருந்தால்

என்ற பல்லவியுடன் தொடங்கும். என் கேள்விக்கு பதிலைத் தரட்டும் என்பது ஊழல் மிகுந்த இந்த ஆட்சி அகற்றப்பட

வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர் காட்டிய அக்கறை வெளிப்படுகிறது.

அண்ணனின் பாதையில்

வெற்றியே காணலாம்

தர்மமே கொள்கையாய்

நாளெல்லாம் வாழலாம்

என்ற வரிகள் அண்ணாவின் பாதையில் இக்கட்சி நடைபோடுகிறது என்பதையும் அப்பாதையே நமக்கு வெற்றிப் பாதை ஆகும் என்பதையும் குறிப்பிடுகிறார்

பல்லாண்டு வாழ்க (1975) படத்தில் அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்ற தொகையறாவுடன் தொடங்கும் ஒன்றே குலமென்று பாடுவோம் ஒருவனே தேவன் என்று போற்றுவோம் என்ற பாட்டில்

இதய தெய்வம் நமது அண்ணா தோன்றினார் அவர்

என்றும் வாழும் கொள்கை தீபம் ஏற்றினார்

என்ற வரிகள் அண்ணாவை இதய தெய்வம் என்று போற்றுவதையும் அவருடைய கொள்கை தீபத்தின் வெளிச்சத்தில் தன்னுடைய கட்சி நடைபெறப் போவதையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளன. ஆனால் எம்.ஜி.ஆர் முதலமைச்சரான பிறகு மக்கள் அண்ணாவை விட்டுவிட்டு எம்.ஜி.ஆரையே இதய தெய்வம் என்று ன்று போற்றினர். குறிப்பாக ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் எம்.ஜி.ஆரை வெறுமனே எம்.ஜி.ஆர் என்று சொல்லக்கூடாது என்றும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் என்று குறிப்பிட வேண்டும் என ஒரு கூட்டத்தில் ஜெயலலிதா தன் கட்சிக்காரர்களை கேட்டுக் கொண்டார்.

இன்று போல் என்றும் வாழ்க படத்தில் பணக்காரர்களின் ஊதாரித்தனமான வாழ்க்கையை சுட்டிக்காட்டி பாடும் பாடலில்

அன்புக்கு நான் அடிமை தமிழ்

பண்புக்கு நான் அடிமை

நல்ல கொள்கைக்கு நான் அடிமை

தொண்டர் கூட்டத்தில் நான் அடிமை

என்ற பல்லவியில் நல்ல கொள்கை என்பது அண்ணாவின் கொள்கையை குறிப்பிடுகிறது. இவ்வரிகள் அண்ணாவின் கொள்கைக்கு எம்.ஜி.ஆர் அடிமை என்றும் அண்ணா திமுக கட்சித் தொண்டர்களின் கூட்டத்தில் அவர் ஒரு அடிமை என்றும் மறைமுகமாக குறிப்பிடுகின்றன. இங்கு படகோட்டி படத்தில் வரும் ஒரு வசனத்தை நினைவு கூற வேண்டும். படகோட்டி *(1964)* படத்தில் 'தலைவன் என்ற பெயரில் நான் ஒரு மக்களின் தொண்டன்' என்று குறிப்பிடுவார். எனவே அண்ணா திமுக கட்சி தலைவராக எம்.ஜி.ஆர் இருந்தாலும் அக்கட்சியின் தொண்டர்களுக்கு அவர் ஒரு பணியாளர் என்ற அளவில்தான் தன் மனதில் எண்ணி இருந்தார். அதே எண்ணத்தை இப்பாட்டிலும் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார். மேலும் கடமை கண்ணியம் கட்டுப்பாடு மறந்து போனீர்களே என வரும் வரை



அண்ணாவின் தாரக மந்திரங்களான கடமை கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய மூன்றையும் குறிப்பிட்டுச் சொல்கின்றன. இவை மூன்றும் பிரஞ்சுப் புரட்சிக் காலத்தில் *duty, dignity discipline*என்று என்று மேலை நாட்டில் மக்களிடையே பிரபலமாகி இருந்தன. அவற்றை அண்ணா, நம்முடைய மக்களுக்கு ஏற்றதாக இருப்பதனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாரக மந்திரங்களாக மாற்றினார். அதனை மேடையும் தோறும் பிரச்சாரம் செய்து வந்தார்.

உரிமைகுரல் *(1974)* படத்தில் அண்ணனுக்கும் தம்பிக்கும் ஆன பாகப்பிரிவினை நடக்கும் அவ்வாறு நடக்கும் போது

ஒரு தாய் வயிற்றில் பிறந்த உடன் பிறப்பில்

முன்பு பிரிவு வந்தால் பின்பு உறவு வரும்

நல்ல மனிதருக்கும் நன்றி மறந்தவர்க்கு

முன்பு உறவிருந்தால் பின்பு பிரிவு வரும்

என்ற வரிகள் நல்லவர்களாக இருந்திருந்தால் அவ்வப்போது சில கருத்து வேறுபாடுகள் வரும்; பின்னர் அவர்கள் மீண்டும் சேர்ந்து கொள்வார்கள். நீர் அடித்து நீர் விலகாது. ஆனால்



நன்றி மறந்தவர்களோடு நல்லவர்கள் சேர்ந்து செயல்படுவது இயலாத செயல் என்பதைக் குறிப்பிடும் வகையில் அமைந்த வரிகள் திமுகவும் அதிமுகவும் இணைந்து செயல்பட வாய்ப்பில்லை என்பதைத் தெளிவாக குறிப்பிட்டு விட்டன. இப்பாட்டில்

நல்லவன் லட்சியம்

வெல்வது நிச்சயம்

அண்ணா அன்று சொன்னார்

என்றும் அதுதான் சத்தியம்

என்ற வரிகள் நல்லவர்கள் இருக்கும் அண்ணா திமுகவின் லட்சியம் வெல்ல போவது நிச்சயம் என்ற உறுதிமொழியைத் தருவதனால் அண்ணா திமுக தொண்டர்களும் எம்.ஜி.ஆர் ரசிகர்களும் மிகுந்த உற்சாகத்துடன் தங்களுடைய கட்சிப் பணிகளை ஆற்றினார். இந்த நல்லவன் லட்சியம் வெல்வது நிச்சயம் என்பது அண்ணாவின் கூற்றாக அவர் எடுத்துக் கூறுவதனால் அண்ணாவின் வார்த்தைகள் சத்திய வாக்கு பொய்ப்பதில்லை. அவை என்றும் வெற்றியைத் தரும் என்ற கருத்தையும் இப்பாடலின் மூலம் தன் தொண்டர்களுக்கும் பொது மக்களுக்கும் ரசிகர்களுக்கும் எம்.ஜி.ஆர் எடுத்துக் கூறுகின்றார்.

அண்ணாவின் மீது மிகுந்த பற்றும் மரியாதையும் மதிப்பும் வைத்திருந்த எம்.ஜி.ஆர் தான் முதல்வரான பிறகு அண்ணாயிசம் என்ற அரசியல் கொள்கையையும் வளர்த்தெடுத்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் அண்ணாவின் கருத்துக்கள் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு தனி துறை ஒன்றும் தொடங்கப்பட்டது. அத்துறையில் இன்றும் பல மாணவர்கள் படித்து அண்ணாவின் கொள்கைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து வருகின்றனர். அக்காலகட்டத்தில் அண்ணாவின் கொள்கைகள் அண்ணாயிசம் என்ற பெயரில் தனிப் புத்தகமாக வெளியிடப் பட்டன. முன்னாள் மேயர் சைதை

துரைசாமி அவர்களின் அலுவலகத்தில் அண்ணாயிசம் என்ற ஒரு பெரிய சுவரொட்டி படம் இருப்பதையும் காணலாம். அதை வாசித்துப் பார்க்கும் பொழுது அண்ணாயிசம் ஒரு தெளிவான அரசியல் கொள்கையாக இருப்பது தெரியவரும்.

நேற்று இன்று நாளை (1974) படத்தில் திமுகவின் ஊழல்களை எம்.ஜி.ஆர் வாலியிடம் எடுத்துக்கூறி என்னென்ன விஷயங்கள் தன்னுடைய பாட்டில் வரவேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்லி எழுதி வாங்கினார். அந்தப் பாடலின் முதல் வரியிலேயே நான் அண்ணாவின் கருத்துப் பள்ளியில் இருந்து வந்தவன்; அண்ணாவின் கொள்கைகளில் நம்பிக்கை உடையவன்; அதனைப் பின்பற்றி நடப்பவன்; நான் அண்ணாவின் தம்பி என்ற கருத்தோடு தொடங்கி

“தம்பி நான் படித்தேன் காஞ்சியிலே நேத்து

அதை நான் உனக்கு சொல்லட்டுமா இன்று

என்றும் நல்லவர்க்கு வாழ்வு வரும் நாளை இது

அறிஞர் அண்ணா எழுதி வைத்த ஓலை” *என வரும்.*

நல்லவன் இன்று துன்புற்றாலும் நாளை நல்வாழ்வை அடைவான். இது அறிஞர் அண்ணா நமக்கு தந்த நம்பிக்கையாகும், என்ற கருத்துடன் இப்பாடல் தொடங்குகிறது. இந்த நபிக்கை தான் கட்சி தொதானிய இரண்டு வருடங்களை புதுச்சேரியில் அதிமுக அரசு அமைய உதவியது. தமிழ்நாட்டில் அதிமுக அட்ட்சியை பிடிப்பதற்கு முன்பே புதுச்சேரியில் ஆட்சியை பிடித்துவிட்டது.

அண்ணாவின் கொள்கைப்படி நடப்பவர்கள் வெற்றியையும் நல்ல வாழ்க்கையை யையும் அடைவார்கள். அவர்களுக்கு நன்மையே விளையும் என்ற நம்பிக்கையை எம்.ஜி.ஆர் தன் பாடல்கள் மூலமாக தன் ரசிகர்களுக்கும் தன் கட்சி தொண்டர்களுக்கும் தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருந்தார். இது ஒரு சத்து டானிக் போல ஊட்டச்சத்து போல மக்கள் சோர்வடையாமல் இருக்க உதவியது. எம் எம்.ஜி.ஆரின்

படங்கள் மற்றும் பாடல்கள் மூலமாக நன்னம்பிக்கை தொடர்ந்து ரசிகர்களுக்கு ஊட்டப்பட்டு வந்தது.

நவரத்தினம் (1977) படத்தில் போலீசுக்கு பயந்து ஓடி ஒளியும் ஒரு இளைஞனாக எம்.ஜி.ஆர் நடித்திருந்தார். சிறுவயதில் இருந்தே எம்.ஜி.ஆர் போலீஸ் என்றாலே பயப்படுவார். அவர் அம்மா அவரை அப்படி பயமுறுத்தி வைத்திருந்தார். அவர் ஒரு நாள் தெரியாமல் வந்து ஒரு மிலிட்டரிகாரரின் முறைப் பெண்ணிடம் சிக்கிக் கொள்வார் அங்கு இருக்கும் குழந்தைகளோடு அவர் பாடுகின்ற பாடல்

உங்களில் நாம் அண்ணாவை பார்க்கிறேன் அந்த

உத்தமராம் காந்தியையும் பார்க்கிறேன் பார்க்கிறேன்

எனப் பாடுவார். இந்தப் பாடல் வருங்காலத் தூண்களாகிய இன்றைய குழந்தைகள் நம் நாட்டின் எதிர்கால அறிஞர்கள் என்பதால் இவர்களிடம் இவர்கள் முகங்களில் அண்ணாவையும் காந்தியையும் பார்க்கிறேன் என பாடுவது சிறந்தவர்களை உருவாக்குவதற்குச் சிறந்தவர்களை எடுத்துக்காட்ட வேண்டும் என்ற கருத்தை உணர்த்துகிறது. நாம் குழந்தைளுக்கு நல்ல நம்பிக்கையையும் உயர்வான லட்சியங்களையும் ஊட்டி வளர்க்க வேண்டும் என்ற கருத்தை உள்ளடக்கியதாகும்.

எம்.ஜி.ஆர் தன்னுடைய பாடல்களில் உயர்ந்தவர்களை உத்தமர்களை, நல்லவர்களை எடுத்துக்காட்டுகிறார். இவர்கள் உங்கள் வாழ்க்கையின் வழிகாட்டிகளாக கொண்டால் உங்களின் வாழ்க்கை சிறக்கும். உங்கள் வாழ்க்கை நம்பிக்கை கொண்டதாக இருக்கும்; நாணயமானதாக இருக்கும்; நேர்மையான வழியில் நடப்பீர்கள்; துன்பங்களைக் கண்டு துவண்டு போக மாட்டீர்கள்; இன்பங்களால் இடறி விழ மாட்டீர்கள் என்ற கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொல்கின்றன.

எம்.ஜி.ஆர் ஒரு தத்துவஞானியைப் போலவே இந்தக் கருத்துக்களையெல்லாம் பாடல் ஆசிரியர்கள் மூலமாக எழுதி வாங்கி படங்களில் பயன்படுத்திஉள்ளார். இங்கு பாடலாசிரியர்கள் ஒரு கருவி மட்டுமே; பாடலாசிரியர் இசையமைப்பாளர் இயக்குனர் ஆகியோரை எல்லாம் திறன்மிகு கருவிகளாக கொண்டு எம்.ஜி.ஆர் என்ற ஒரு கலைஞர் ஒரு அறிஞர் என்ற நிலையில் இருந்து எம்.ஜி.ஆர் நல்ல கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக் கூறி அடுத்த அடுத்த தலைமுறை இளைஞர்களை ஊக்கம் மிக்கவராக மற்றவர்களுக்கு அவர்கள் ஊக்கம் அளிப்பவராகவும் வளர்த்திருக்கிறார்.



ஆஸ்திரேலியா திரைப்பட இயக்குனர் மெக் ஆலம் மற்றும் "இதயம் பேசுகிறது" மணியன் இவர்களுடன் எம்.ஜி.ஆர்.

7. எம்.ஜி.ஆரால் மலர்ந்த புதிய சமுதாயம்

1965 இல் இந்தியத் திரையரங்குகளிலேயே மிகுந்த வரவேற்புப் பெற்ற பாடல் என்ற பெருமையைப் பெற்ற 'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்' என்ற பாட்டு புதிய சமுதாயம் மலரும் என்பதற்கான நம்பிக்கையை விதைத்த முக்கியமான பாடல் ஆகும். அந்தப் பாடலில் வரும்

"எதிர்காலம் வரும் என் கடமை வரும் இந்தக்

காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன்"

என்ற வரிகள் அப்போது பகுத்தறிவுக்கு எதிராகப் பேசி வந்த காங்கிரஸ் கட்சியின் ஆட்சியைக் குறித்ததாகப் புரிந்து கொள்ளப்பட்டன.

காக்கைகள் கூட்டம்

இப்பாடலை எழுதிய போது முதலில் பாடலாசிரியர் வாலி 'காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன்' என்று தான் எழுதியிருந்தார். பாடலும் பதிவானது. இதே வரியுடன் சிலோன் ரேடியோவில் இப்பாடல் அக்காலங்களில் ஒலிபரப்பாகும். பின்னர் விடுதலைப்புலிகளின் போராட்ட காலத்தில் ஸ்ரீ லங்காவில் இப்பாட்டு வானொலியில் ஒலி பரப்புவது தடை செய்யப்பட்டுவிட்டது.

1965இல் எங்க வீட்டுப் பிள்ளை படம் தணிக்கைக்கு அனுப்பப்பட்ட போது தணிக்கையாளர்கள் 'காக்கைகள் கூட்டத்தை' என்ற வரியில் உள்ள காக்கை என்பது

காமராஜரை மறைமுகமாகக் குறிக்கின்றது என்று காரணத்தால் அந்த வரியை அனுமதிக்க மறுத்துவிட்டனர். அப்போது சில பத்திரிகைகள் காமராஜரின் நிறத்தைக் குறிப்பிட்டு காக்கை என்று கருத்துப்படம் போட்டு வந்தன. உடனே அந்த வரி 'இந்தக் கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன்' என்று மாற்றப்பட்டது. இப்போது கூட்டம் என்பது காங்கிரசையும் கூட்டத்தின் ஆட்டம் என்பது காங்கிரஸின் ஆட்சியையும் ஒழிப்பதாக அமைந்தது. அதற்கு அடுத்தபடியாக

"பொது நீதியிலே புதுப் பாதையிலே வரும்

நல்லோர் முகத்திலே விழிப்பேன்"

என்ற வரிகள் அடுத்து அண்ணாவின் நல்லாட்சி மலரும். திமுகவின் ஆட்சி வரும்; என்ற எண்ணத்தை மக்களுக்கு ஏற்படுத்தியது. மேலும்

"ஒரு தலைவன் உண்டு அவன் கொள்கை உண்டு

அதை எப்போதும் காத்திருப்பேன்

எதிர்காலம் வரும் என் கடமை வரும்

இந்தக் காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன்"

என்ற வரிகள் இன்றைக்கு இருக்கும் ஜாதி , மத பேதம் உள்ள ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு சமத்துவம் உள்ள புதிய சமுதாயம் மலரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தின.

கொடுக்குற காலம் நெருங்குகிறது

முதன் முதலாக எம்.ஜி.ஆர். 'பேன்ட் சர்ட் கிராப்-விக்' *pants,shirt, crop wig]* ஆகியவற்றுடன் நடித்த திருடாதே *[20-3-1961]* படத்தில்

'கொடுக்கிற காலம் நெருங்குவதால் இனி

எடுக்கிற அவசியம் இருக்காது'

என வரும் வரி இனிவரும் எதிர்காலத்தில் ஒருவருக்கொருவர் கொடுத்து மகிழ்வார்கள் தவிர ஒருவர் பணத்தை அடுத்தவர் பறிக்கும் நிலைமை இனி வராது என்று திருட்டு, கொள்ளை, சுரண்டல், அபகரித்தல் போன்ற நிலைமைகளுக்கு இனி இடமில்லை என்று மக்களுக்கு நன்னம்பிக்கை ஊட்டியது.

புதிய சமுதாயம் மலர்ந்தது

எம்.ஜி.ஆர். தன் படங்களில் சொல்லி வந்த திமுக ஆட்சி மலர்ந்தது. மக்களின் எதிர்பார்ப்பு அதிகமாயிற்று. அண்ணா முதலமைச்சர் ஆனார். தேர்தலுக்கு முன்பு ரூபாய்க்கு மூன்று படி அரிசி தருவோம் என்றனர். ஆட்சிக்கு வந்ததும், ‘மூன்று படி இலட்சியம் ஒரு படி நிச்சயம்’ என்றனர். ஒளி விளக்கு [20-9-1968] படத்தில் இடம்பெற்ற ‘நாங்க புதுசா கட்டிக்கிட்டா ஜோடி தானுங்க’ என்று எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் குறவன் குறத்தியாக மாறு வேடத்தில் வந்து பாடும் பாடல் திமுக ஆட்சியில் புதிய சமுதாயம் மலர்ந்திருப்பதைக் காட்டும் பாடல் ஆக அமைந்தது.

நாங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடி தானுங்க என்ற பாடலில் திமுக ஆட்சி மலர்ந்து விட்டதன் சிறப்புக்கள் விரித்துரைக்கப்பட்டன. அப்போதைய திமுக ஆட்சியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு ஏழை மக்கள், தெருவோரவாசிகள் குடியமர்த்தப்பட்டனர். ஒரு ரூபாய்க்கு ஒரு படியரிசி திட்டமும் சில இடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.

“படியரிசி கிடைக்கிற நேரத்திலே நாங்க

படியேறி பிச்சை எடுக்க போவதில்லே

குடிசை எல்லாம் வீடாகும் நேரத்தில – நாங்க

தெருவோரம் குடியேறத் தேவையில்லே”

என்ற பாட்டு வரிகளில் திமுக ஆட்சியின் புதிய திட்டங்கள் இடம்பெற்றன.

திமுக ஆட்சியில் அண்ணாவின் மறைவுக்குப் பின்பு *1969*இல் கலைஞர் பொறுப்பேற்றதும் ஊழல் மலிந்து விட்ட காரணத்தால் எம்.ஜி.ஆர். படங்களிலும் பாடல்களின் கருத்துக்கள் மாறி விட்டன.

அடிமைப்பெண்

திமுக ஆட்சியின் போது எடுக்கப்பட்ட அடிமைப்பெண் *[1-5-1969]* படத்தில்

"ஏமாற்றாதே ஏமாற்றாதே

ஏமாறாதே ஏமாறாதே" எனத் தொடங்கும் பாடலில்

"இந்த இருட்டுக்கும் பார்க்கின்ற விழியிருக்கும்

சுவருக்கும் கேட்கின்ற காதிருக்கும்

சொல்லாமல் கொள்ளாமல் காத்திருக்கும்

தக்க சமயத்தில் நடந்ததை எடுத்துரைக்கும்"



என்ற வரிகள் மக்களுக்கு கருணாநிதியின் ஆட்சியின் மீதான வெறுப்புணர்வை சுட்டிக் கட்டின. ஆனாலும் அவரது ஆட்சியில்

இலஞ்சம் தலை விரித்தாடியது. அவர் யார் பேச்சையும் கேட்கவில்லை.

“தோன்றத்தான் போகிறது சம உரிமை சமுதாயம்

மறையத்தான் போகிறது தனிமனிதன் அநியாயம்

மலர்த்தான் போகிறது எங்களது புது வாழ்வு

மாறத்தான் போகிறது மனிதா உன் விளையாட்டு”

என்ற வரிகள் திமுகவின் கொடுங்கோல் ஆட்சி மறையும் என்று கட்டியம் கூறின. இப்படத்தை தொடர்ந்து வந்த நம் நாடு [7-11-1969] எம்.ஜி.ஆரின் அரசியல் வருகைக்கு அடிக்கல் நாட்டியது.

எம்.ஜி.ஆர். – கருணாநிதி பூசல்

எம்.ஜி.ஆர். கருணாநிதி கருத்து வேறுபாடு தோன்றி வளர்ந்து வந்த காலத்தில் 1971 இல் கருணாநிதி தன்னுடைய மகன் மு.க.முத்துவை கதாநாயகனாக நடிக்க வைத்து ஒரு படம் எடுக்கத் திட்டமிட்டார். எம்.ஜி.ஆருக்குப் போட்டியாக தனது மகனைக் கொண்டு வந்தார். எம்.ஜி.ஆருக்கு சற்றும் உடன்பாடில்லாத சாராயக் கடைகளைத் திறந்தார். இதனால் இருவருக்கும் இடையில் இருந்த பனிப்போர் அம்பலமாயிற்று. இந்நிலைமை அவரது அடிமைப் பெண் [1-5-1969] மற்றும் அதனைத் தொடர்ந்து வெளி வந்த நம் நாடு [7-11-1969] படங்களில் தென்பட்டது.

வாங்கய்யா வாத்தியாரையா

‘நான் அரசியலில் நேரடியாக இறங்கலாமா என்பதை என் ரசிகர்களின் மூலம் அறிய விரும்புகிறேன்’ என்று சொல்லியே நம் நாடு படத்தை தயாரிக்கும்படி நாகி ரெட்டியிடம் எம்.ஜி.ஆர். தெரிவிக்கிறார். அடிமைப்பெண் படத்துக்கு வைத்திருந்த கால் ஷீட்களை தருகிறார். ஒரே

மாதத்தில் நம் நாடு படம் முடிந்தது. திரையரங்கில் மக்களின் வரவேற்பைப் பார்த்துவிட்டு நாகி ரெட்டியை கட்டிப்பிடித்து ‘என் ரசிகர்கள் என்னை ஏற்றுக்கொண்டனர்’ என்று மகிழ்ச்சி தெரிவிக்கிறார்.

“வாங்கய்யா வாத்தியார் ஐயா

வரவேற்க வந்தோம் ஐயா

ஏழைகள் உங்களை நம்பி

எதிர்பார்த்து நின்றோம் ஐயா”

என்ற பாடல் வரிகள் எம்.ஜி.ஆரை அரசியலுக்கு வரவேற்றன. எம்.ஜி.ஆர். ஊர்களுக்குப் போகும் வேளைகளில் இந்த பாட்டு அவருக்கான வரவேற்புப் பாடலாக அமைந்தது. அவர் வருகிறார் என்று அறிவித்தவுடன் இந்தப் பாடலைத் திரும்ப திரும்ப ரசிகர் மன்றங்கள் தொண்டர் அமைப்புகள் ஒலிபரப்புவது வழக்கம். அவர் அந்த இடத்தை விட்டுத் தாண்டும் வரை இதே பாட்டுத் தான் திரும்ப திரும்ப ஒலிபரப்பப்படும்.

கலைஞரின் எங்கள் தங்கம் எம்.ஜி.ஆர்.

அரசியலுக்கு வருவதில் அவசரப்படாமல் பொறுமை காத்து வந்த எம்.ஜி.ஆர். அடுத்து மு. கருணாநிதியும் அவர் மைத்துனர் முரசொலி மாறனும் தாம் கடனில் மூழ்குவதாகச்



சொல்லி அவரிடம் ஒரு படம் நடித்துத் தருமாறு கேட்ட போது எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் பணம் வாங்காமல் நடித்துக் கொடுத்தனர். அந்தப் படம் கலைஞரின் எங்கள் தங்கம் [9-10-70]. அதில் 'நான் செத்துப் பிழச்சவன்டா' என்ற பாடலில் திமுக வரலாற்றையும் அண்ணா கருணாநிதி பற்றிய தகவல்களை உள்ளடக்கியதாகவும் இருந்தது. இதில் கருணாநிதியின் இந்தி எதிர்ப்புப் போராட்டத் தகவலை வாலியிடம் சொல்லிச் சேர்க்கச் சொன்னவர் எம்.ஜி.ஆர்.

வாலி 'நான் அளவோடு ரசிப்பவன்' என்ற வரியை ஒரு காதல் பாடலுக்கு எழுதிவிட்டு அதன் அடுத்த வரிக்காக யோசித்துக் கொண்டிருந்த போது அங்கு வந்த மு. கருணாநிதி 'எதையும் அளவின்றிக் கொடுப்பவன்' என்று சொல்லிவிட்டுப் போனார். இந்தச் சம்பவத்தை கேட்டு எம்.ஜி.ஆர். அகமகிழ்ந்தார்.

ஒரு வாலுமில்லே நாலு காலுமில்லே

மு. கருணாநிதியின் மகன் மு. க முத்து அறிமுகமான படத்தின் முதல்நாள் படப்பிடிப்பை எம்.ஜி.ஆர். வந்து தொடங்கி வைத்தார். அப்போது எம்.ஜி.ஆர். இதயவீணை (1972) ஷூட்டிங்கில் இருந்தார். இதயவீணை படம் முடிவதற்குள் எம்.ஜி.ஆரைக் கட்சியிலிருந்து விலக்கி விட்டனர். உடனே எம்.ஜி.ஆர். அந்த படத்தில் ஒரு புதிய பாட்டைச் சேர்த்து அன்றையக் காலகட்டத்தில் அவருடைய நிலை என்ன திமுகவின் நிலை என்ன என்பதை மக்களுக்கு இந்தப் பாடல் மூலமாகவே உணர்த்தினார்.

"ஒரு வாலும் இல்லை நாலு காலும் இல்லை

சில மிருகங்கள் இருக்குது பூமிக்குள்ளே இந்தக்

காட்டுக்குள்ளே உள்ள மிருகமெல்லாம்

அதைக்காட்டிலும் எத்தனையோ தேவலை"

என்ற பாடல் வரிகள் நாளிதழ்களில் முழுப்பக்க இதயவீணை விளம்பரத்தில் இடம்பெற்றன. இப்பாட்டில் தனது அதிரடி அரசியல் வரவை உணர்த்தும் வகையில்



“உண்மை என்பது ஊமையாகவே

கொஞ்ச காலம் தான் இருக்கும்”

என்று இந்தப் பாட்டில் இடம்பெற்ற வரிகள் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் பதற்றப்பட வேண்டாம்; இன்னும் சிறிது காலத்தில் அவர்களுக்குப் புது வாழ்வு பிறக்கும்; திமுகவின் ஊழல் ஆட்சி ஒழிக்கப்படும் என்பதை சூட்சுமமாகப் புலப்படுத்தின. இதனால் எம்.ஜி.ஆர். ரசிகர்கள் மிகுந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்தனர்.

ரசிகர்கள் தொடங்கிய எம்.ஜி.ஆர். கட்சி

எம்.ஜி.ஆரைக் கட்சியை விட்டு நீக்கிய உடனே ரசிகர்கள் எம்.ஜி.ஆரின் அலுவலகங்களின் வாயிலில் திரண்டு இருந்து அவரை உடனடியாக அவர் புதிய கட்சி ஒன்றை தொடங்கி திமுகவை தோற்கடிக்க வேண்டும் என்ற விருப்பத்தை உணர்த்தினர். இவர்களின் கூட்டம் அதிகரித்துக் கொண்டு போவதால் எம்.ஜி.ஆர். அண்ணா திமுக என்ற கட்சி தோன்றுவதைக் காலம் தாழ்த்த முடியவில்லை. சீக்கிரமாகக் கட்சியைத் தொடங்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு ஆளானார். மாநிலத்தில் பல ஊர்களில் தாமரை படத்துடன்

புதிய கொடியை ஏற்றி கட்சியை ரசிகர்கள் தொடக்கிவிட்டனர்.

பாடல்களை வீணாக்க விரும்பாத எம்.ஜி.ஆர்.

ஏற்கெனவே தனது படங்களில் பாடல்களில் தான் பயன்படுத்திய உடை, சொற்கள், பின்புலம், போன்ற தொடர்பியல் உத்திகளையும் புதிய ச(முதாயம் மல(ரும் என்ற உள்ளடக்கத்தையும் வீணாக்க வி(ரும்பாத எம்.ஜி.ஆர். தி(முக வின் கட்சி நிறங்களை வைத்து ஒ(ரு வெண்மையையும் கட்சியின் தலைவர் அண்ணாவின் உ(ருவத்தையும் இணைத்து புதிய கொடியை உ(ருவாக்கினார். இது தான் எம்.ஜி.ஆரின் புத்திசாலித்தனம். இதனால் இவர் ஒரே கல்லில் இரண்(டு கனி அடித்தார். இப்போது இ(ருக்(கும் தி(முக உண்மையான தி(முகவே அல்ல. இது ஊழல் மி(குந்த க(ருணாநிதியின் கட்சி. தன்னுடையது தான் அண்ணா ஆரம்பித்த தி(முக என்று பொ(ருள் ப(டும்படி அண்ணா தி(முகவை தொடங்கினார். இதன் (மூலமாக தனது திரைப்படங்களையும் அரசியலையும் ஒன்றாக இணைத்தார். (முதல்வரான பின்பும் ஜெயலலிதாவை போலப் ‘எனது ஆட்சி’ என்று சுட்டாமல் தந்து ஆட்சியை அண்ணாவின் ஆட்சி என்றே (குறிப்பிட்டார். அவரையே தலைவராகக் கொண்(டு தன்னை பொது செயலாளர் என்று அறிவித்துக் கொண்டார்.

அண்ணா திமுக கட்சிக்குப் பின் வந்த பாடல்கள்

அண்ணா தி(முக ஆரம்பித்த பிற(கு எ(டுக்கப்பட்ட படங்கள் அவற்றில் இடம் பெற்ற பாடல்கள் தி(முகவின் ஊழல் ஆட்சியின் ல(ஞ்ச லாவண்யத்தை வன்மையாகவும் தீவிரமாகவும் கண்டித்தன. இது தன்னுடைய சுய வெற்றி சார்ந்த விஷயம் என்பதால் எம்.ஜி.ஆர். அண்ணா தி(முக கட்சியைத் தோற்றுவித்த பிற(கு எ(டுக்கப்பட்ட படங்களில் தன்னுடைய எதிர்ப்பை தீவிரமாகக் காட்டினார்.

நாளை உலகை ஆள வேண்டும்

உழைக்(கும் கரங்கள் (1976) படத்தில் ‘நாளை உலகை ஆள வேண்டும் புரட்சி மலர்களே’ என்று தொடங்கும்

பாட்டில் மக்களுக்குத் தன்னுடைய கட்சி ஆட்சிக்கு வந்தால் அது திமுகவைப் போல லஞ்ச லாவண்யம் உடைய கட்சியாக இருக்காது; நல்லாட்சியை தரும் இலட்சியக் கொள்கை கொண்ட கட்சியாக இருக்கும் என்ற கருத்துக்களை ரசிகர்களின் மத்தியில் பொதுமக்களின் மனதில் பதிய வைத்தார். தி மு கவில் இருந்த போது எழுதிய பாடல்களை விடக் கூடுதல் அக்கறையுடன் பாடல்கள் எழுதப்பட்டன.

"ஏர் பூட்டி தோளில் வைத்து இல்லாமை வீட்டில் வைத்து

போராடும் காலம் எல்லாம் போனதம்மா

எல்லோர்க்கும் யாவும் உண்டு என்றாகும் காலம் இன்று

நேராக கண்ணில் வந்து தோன்றுதம்மா

விடியும் வேளை வரப் போகுது

தர்மம் தீர்ப்பைத் தரப் போகுது"

என்ற வரிகள் 'இனி நடக்கும்' என்று சொல்வதை விட 'நடந்துவிட்டது' என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன.

இந்தியாவுக்கு சுதந்திரம் வருவதற்கு முன்பே மகாகவி பாரதியார்



"விடுதலை விடுதலை விடுதலை

பறையருக்கும் இங்கு தீய புலையருக்கும் விடுதலை"

என்று பாடியது போல அண்ணா திமுக ஆட்சிக்கு வந்து நல்லாட்சி மலர்வதற்கு முன்பே எம்.ஜி.ஆர். இது போன்ற ஒரு பொற்காலம் தோன்றப் போகிறது; தோன்றிவிட்டது; நல்லாட்சி மலர்ந்து விட்டது என்ற ஒரு கருத்தை உருவாக்கும் வகையில் தன் படங்களில் பாடல்களின் மூலமாக ஒரு எதிர்பார்ப்பைத் தோற்றுவித்தார். விடியும் வேளை வரப்போகுது தருமம் தீர்ப்பை தரப்போகுது என்ற வரிகள் நீதி என்றைக்கும் தோற்றுப் போகாது.


'நம்புதல் என்னும் மாயாஜால் கொள்கை'

பாரதியாரின் விடுதலை விடுதலை விடுதலை என்ற பாட்டை ஆராய்ந்த பாரதியார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவர் முனைவர் தே. ஞானசேகரன் சிகாகோ பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஹைலர் மாத்யுஸ் என்பவரின் நம்புதல் என்னும் மாயாஜாலக் கொள்கையைச் [theory of Magical belief] சுட்டிக்காட்டி விளக்குவார். இந்த நம்பிக்கையை எம்.ஜி.ஆர். மக்களுக்கு தனது பாடல்களின் மூலமாக வழங்கினார். நம்பிக்கை மக்கள் மனதில் ஒரு மாயாஜாலத்தை ஏற்படுத்தியது. அவர்கள் நம்பிக்கை நல் வாழ்வாக மலர அவரது ஆட்சியும் சேர்ந்து மலர்ந்தது. இதனால் மக்கள் எம்.ஜி.ஆர். மீது கொண்டிருந்த நம்பிக்கை வீண் நம்பிக்கையாக போலி நம்பிக்கையாக போய் விடாமல் உண்மை ஆயிற்று. எண்ணமே வாழ்வு என்பதற்கு நிகரான ஹைலர் மேத்யுசின் கொள்கை உண்மையாயிற்று.

தர்மம் அழியாது

தர்மம் சற்று காலதாமதமாகச் செயல்பட்டாலும் அது நிரந்தரமான வெற்றியை அளிக்கும் போன்ற கருத்துக்கள் பண்டைய பாரம்பரிய இதிகாசங்கள் காப்பியங்கள் நீதி நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. அவற்றை எம்.ஜி.ஆர். எளிமையாகத் தனது பாடல்களில் மக்களுக்கு எடுத்துக் கூறினார். இலக்கியங்களும் காப்பியங்களும்

எடுத்துரைத்த நல்ல காலத்தை எங்களுடைய கட்சி உங்களுக்குத் தரப் போகிறது என்று உத்தரவாதம் அளிக்கும் வகையில் அவர் பாடலாசிரியர்களிடம் இருந்து தனது படத்துக்கான பாடல்களை எழுதி வாங்கினார். இப்பாடல்களைக் கேட்ட மக்கள் அவர் மீது ஏற்கனவே கொண்டிருந்த அன்பு மதிப்பு ஆகியவற்றோடு மிகுந்த நம்பிக்கையும் அவர் மீது வைத்து அவரைத் தலைவராக தேர்ந்தெடுத்து அவர் காலம் வரை அவரையே தங்களது தலைவராக ஏற்றுக்கொண்டிருந்தனர். அவராக மக்களை விட்டு, இந்த உலகத்தை விட்டுப் போகும் வரை மக்கள் அவரை அப்பதவியில் இருத்தி வைத்திருந்தனர்.



நம்பிக்கை பலித்தது

எம்.ஜி.ஆருடைய கடைசிப் படமான மதுரை மீட்ட சுந்தரபாண்டியன் (1978), சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையை சோழ மன்னனிடம் இருந்து மீட்டு தந்த சுந்தரபாண்டியனைப் பற்றியதாகும். அகிலன் எழுதிய கயல்விழி என்ற நாவலை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட படம் ஆகும். இப்படம் தமிழகத்தை ஊழல் மிகுந்த திமுகவிடமிருந்து மீட்டுத் தருவதைக் குறிப்பிடும் குறியீட்டுப் படமாகும். இந்தப் படத்தில் பாண்டியன் என்பது அண்ணா திமுக கட்சி தலைவர் எம்.ஜி.ஆரையும் மதுரை என்பது தமிழகத்தையும் குறித்தது. சோழன் என்பது தஞ்சைப் பகுதியை சேர்ந்த கருணாநிதியைக் குறித்தது.

"தாயகத்தின் சுதந்திரமே எங்கள் கொள்கை

தன்மானம் ஒன்றே தான் எங்கள் செல்வம்"

எனத் தொடங்கும் பாடல் இலங்கைத் தமிழர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எழுதப்பட்டதாக இருந்தாலும் அது தமிழகத்துக்கும் பொருந்தியதாகவே அமைந்திருந்தது.

தமிழகத்துக்கும் ஈழத்துக்கும் விடுதலை

எம்.ஜி.ஆர். படத்தின் பாடல்கள் படத்தில் வரும் தனிமனிதனின் கதைக்கும் படம் பார்க்கும் ரசிகர்களின் சொந்த வாழ்க்கைக்கும் பொதுஜன சமூகத்திற்கும் ஏற்றதாகவே அமைக்கப்பட்டிருக்கும். அது போல இந்தப் பாடலும் ஈழத்தமிழர்களின் விடுதலைக்கும் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்திற்கும் பொருந்துவதாக எழுதப்பட்டிருந்தது.

"ஒற்றுமையால் பகைவர்களை ஓட வைப்போம்

உழைப்பாலே நம் நாட்டை உயர்த்தி வைப்போம்"

என்ற வரிகள் மக்கள் ஒன்று சேர்ந்து பகைவர்களை விரட்டி அடித்து நல்லவர்களை ஆட்சியில் அமர்த்த வேண்டும்; என்பதை உணர்த்திற்று. நல்லவர்கள் கையில் நாட்டைக்

கொடுக்க வேண்டும் என்ற கருத்து தமிழகத்திற்கும் இலங்கைக்கும் பொதுவாக அமைந்தன.

"கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும்

கொள்கை வீரர் தியாகங்களை ஏற்றிட வேண்டும்

புரட்சியிலே சரித்திரத்தை மாற்றிட வேண்டும்

பொதுவுடமை சமுதாயம் மலர்ந்திட வேண்டும்"

என்ற வரிகள் நாட்டுக்காக கொள்கையோடு செயல்பட வேண்டும் தியாகங்கள் செய்ய முன்வர வேண்டும் என்ற வரி தனி ஈழத்துக்காக உயிர்த் தியாகம் செய்த பல விடுதலைப் புலிகளைப் பாராட்டும் வகையில் அமைந்தன. தமிழகத்தில் திமுகவின் அராஜகப் போக்கால் உயிரிழந்த எம்.ஜி.ஆர். ரசிகர்கள் எம்.ஜி.ஆர். கட்சிக்காக இன்னுயுரைத் தியாகம்



செய்த பூலாவாரி சுகுமாரன் போன்ற அண்ணா திமுக தியாகிகளின் தியாகத்தைப் பாராட்டியது.

“கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும்

கொள்கை வீரர் தியாகங்களை ஏற்றிட வேண்டும்” என்ற வரி இந்த தியாகங்களுக்குப் பலன் உண்டு என்ற கருத்தை மக்கள் மனதில் உணர்த்தும் வகையில் எழுதப்பட்டிருந்தது. ‘கோட்டையிலே நமது கொடி பறந்திட வேண்டும்’ என்ற வரி செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தேசியக்கொடி பறக்க விடப்பட்டாலும் கூட அங்கு நடக்கப் போவது நமது ஆட்சி என்பதை நமது கொடி என்ற வார்த்தை உணர்த்தியது. இதுவும் கூட ஏற்றுக் கொள்ளப்படுமா என்ற சந்தேகத்தில் எம்.ஜி.ஆர். இதனை மகரக்கொடி என்று மாற்றக் கூடாதா; மகரக்கொடி என்றால் அது மீன்கொடி பாண்டியனுக்கு உரியது என்று பொருள்படுமே அனுமதி கிடைத்து விடும் எனப்பாடலாசிரியர் முத்துலிங்கத்திடம் சொல்லியபோது ‘நான் தணிக்கை குழுவினர் இடம் கேட்டு விட்டேன் அவர்கள் நமது கொடி என்று இருக்கலாம்’ என்று சொல்லி அனுமதி வழங்கி விட்டனர் என எம்.ஜி.ஆரிடம் தெரிவித்தார்.

எம்.ஜி.ஆர். மகிழ்ந்து முத்துலிங்கத்தைத் தட்டிக் கொடுத்து அருகில் இருப்பவரிடம் ‘பார்த்தீர்களா, நான் முத்துலிங்கத்தை என் அருகில் ஏன் வைத்திருக்கிறேன்’ எனச் சொல்லி பாராட்டினார். இங்கு நமது கொடி என்பது அண்ணா திமுகவின் கொடியைக் குறிக்கிறது. அண்ணா திமுக ஆட்சிக்கு வந்து அதனுடைய கொடி பறக்க வேண்டும் என்ற கருத்தை மக்கள் மனதில் பதிய வைக்கும் விதமாக இவ்வரிகள் எழுதப்பட்டன.

பாடல்கள் காட்டிய புதிய பூமியும் புதிய வாழ்வும்

எம்.ஜி.ஆர். 1958 முதல் 1977 வரை சுமார் இருபது வருடங்கள் எம்.ஜி.ஆர். தன் பாடல்களின் மூலமாக தொடர்ச்சியாக மக்களுக்கு ‘புது வாழ்வு பிறக்கும்; புதிய பூமி தோன்றும்’ என்ற புத்துணர்ச்சியை ஊட்டிக் கொண்டே வந்தார். அவர் அளித்த நம்பிக்கை அவர்களுக்கு எம்.ஜி.ஆரை ஒரு அவதார புருஷராக அநாதை இரட்சகராக

உருவகப்படுத்தியது. அவர்கள் எம்.ஜி.ஆரைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணம் இன்று வரை சரியான எண்ணமே என்ற கருத்தினைத் தொடர்ந்து உறுதிப் படுத்திக் கொண்டே இருக்கின்றது.

எம்.ஜி.ஆரும் ஆட்சிக்கு வந்த பிறகு தன் காரை தொடர்ந்து ஓடி வரும் ஏழை மக்களை பார்த்து 'இந்த மக்களுக்காக நான் என்ன செய்யப் போகிறேன்' என்று வருந்தி கண்ணீர் விட்டு அழுது ஒவ்வொரு நிமிடமும் அவர் மக்களின் நன்மைக்காக அவர்களுக்கான நல்ல திட்டங்களை தருவதற்காகவே தன்னுடைய வாழ்நாளின் ஒவ்வொரு நிமிடத்தையும் செலவழித்தார். இதனை வி ஐ டி பல்கலைக்கழக வேந்தர் விசுவநாதன் அவர்கள் தனது பேட்டியில் எடுத்துரைத்தார். 'எப்போதும் மக்களின் நலனைப் பற்றியே சிந்திப்பவர் எம்.ஜி.ஆர்.' என்றார். மக்களும் எம்.ஜி.ஆர். நமக்கு நன்மையை மட்டுமே செய்வார் என்று நம்பினர். இந்த பரஸ்பர நம்பிக்கை இன்று வரை அழியாமல் மாறாமல் மறையாமல் இருந்து வருகிறது என்பதை அவருடைய 102 வது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள் இவ்வுலகுக்கு தெரிவிக்கின்றன.

எம்.ஜி.ஆர். உலகப் பேரவையின் தோற்றமும் பிரான்ஸ், இங்கிலாந்து, மலேசியா, அமீரகம் போன்ற நாடுகளில் அதன் செயல்பாடும் எம்.ஜி.ஆரை ஒரு சர்வதேச மனிதனாகக் கொண்டு செல்லும் நோக்கம் வெற்றி பெறப் போகிறது என்பதையும் தெற்றென உணர்த்துகிறது.

ஆசிரியர் அவர்களின் நூல்கள்

